UNIVERSITY OF JAFFNA LIBRARY


# தொழிலாளர் பாதை

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

மாத இதழ் 504 1999 ஆகஸ்ட் ரூபா 10.00


**உள்ளே**


- குமாரதுங்க அரசியலமைப்பு சீர்திருத்த மசோதாவை "ஒத்திவைத்ததை" தொடர்ந்து இலங்கை அரசாங்கத்தின் நெருக்கடி உக்கிரம் கண்டுள்ளது ........ 2
- இலங்கை ஜனாதிபதி ஜனநாயக விரோத அரசியல் சீர்திருத்தத்தை பலாத்காரமாக நடைமுறைக்கிட முயற்சிக்கின்றார் ........ 3
- இந்தியாவுக்கும் காஷ்மீர் பிரிவினைவாதிகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு அமெரிக்கா நெருக்குவாரம் ........ 4
- அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் ........ 5
- பிஜி இராணுவத் தலைவர்கள் இனவாதிகளின் கோரிக்கைகளுக்கு சம்மதம் தெரிவித்துள்ளனர் ........ 6
- இலங்கையின் புதிய அரசியல் அமைப்பு மீதான பாராளுமன்ற விவாதத்தில் லஞ்சமும், கெஞ்சலும், கூச்சலும் ........ 15

**இலங்கைத் தேயிலை ஏற்றுமதியின் பரிதாப நிலை**
**10 – 11 பக்கம்**


# இலங்கையின் சோசலிச சமத்துவக் கட்சி பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்றது

சோசலிச சமத்துவக் கட்சியின் அறிக்கை
ஆகஸ்ட் 23, 2000

நான்காம் அகிலத்தின் இலங்கைப் பகுதியான சோசலிச சமத்துவக் கட்சி (Socialist Equality Party) அக்டோபர் 10ம் திகதி இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிட முடிவு செய்துள்ளது.

சோசலிச சமத்துவக் கட்சி (சோ.ச.க) நாட்டில் உள்ள பல்வேறு சமூகங்களையும் உள்ளடக்கியுள்ள ஒரு பெரும் தொழிலாளர் வர்க்க மையமான கொழும்பு மாவட்டத்தில் வேட்பாளர்களை நிறுத்தவுள்ளது. முக்கிய முதலாளித்துவக் கட்சிகளுக்கும் "இடதுசாரி" எனப்படும் அரசியல் அமைப்புக்களுக்கும் எதிராக சோ.ச.க. சிங்கள, தமிழ் தொழிலாளர்களையும், ஒடுக்கப்படும் மக்களையும், இளைஞர்களையும், புத்திஜீவிகளையும் ஒன்றிணைக்கவும், 17 வருட கால இரத்தம் தோய்ந்த உள்நாட்டு யுத்தத்துக்கு முடிவுகட்டவும், ஜனநாயக உரிமைகளைக் காக்கவும், தீவில் உக்கிரம் கண்டுள்ள சமூகப் பிரிச்சினைகளுக்கு -வேலையின்மை, வாழ்க்கைத் தரத்தின் வீழ்ச்சி, கல்வி, சுகாதார சேவைகளின் அவஸ்த்தை- தீர்வு காணவும் ஒரு வேலைத்திட்டத்தை முன்வைக்கும்.

உத்தியோகபூர்வமான முறையில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு அரசியல் கட்சியென்ற முறையில் சோ.ச.க. முதற்தடவையாக கொழும்பு மாவட்டத்துக்கு 23 வேட்பாளர் பட்டியலை சோ.ச.க. பொதுச் செயலாளர் விஜே டயஸ் தலைமையில் முன்வைக்கின்றது.

சோ.ச.க.வுக்கு உத்தியோகபூர்வமான அங்கீகாரம், அது ஸ்தாபிதம் செய்யப்பட்டு 32 ஆண்டுகளின் பின்னரும் அந்த உரிமையை பெற்றுக்கொள்ள தொடுத்த ஒரு நீண்ட பிரச்சார இயக்கத்தின் பின்னருமே கிட்டியது. இதன் மூலம் சோ.ச.க. இலவசத் தொலைக்காட்சி, வானொலி ஒலிபரப்புகளுக்கான வசதிகளைப் பெற்றுள்ளது. இதனால் முன்னர் ஒரு போதும் இல்லாத விதத்தில் அது தனது கொள்கைகளை பரந்த தட்டினருக்கு முன்வைக்க வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இந்தத் தேர்தல், தீவின் யுத்தத்துக்கு பின்னைய வரலாற்றின் ஒரு தீர்க்கமான கால கட்டத்தில் இடம் பெறுகின்றது. தீவின் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழருக்கென ஒரு தனி நாட்டுக்காகப் போராடி வரும் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கடந்த ஏப்பிரலில் இருந்து ஒரு தொடர்ச்சியான தோல்விகளுக்கு உள்ளாகியதைத் தொடர்ந்து இலங்கை அரசு ஒரு ஆழமான நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது.

17 வருட கால உள்நாட்டு யுத்தத்துக்கு முடிவு கட்டுவது எப்படி என்பது தேர்தலின் ஒரு மையப் பிரச்சினையாக விளங்கும். ஆளும் பொதுஜன முன்னணி அரசாங்கமும், எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் இனவாதிகள் மீதும் பௌத்த குழுக்கள் மீதும் சாய்ந்து வருகின்றன. இதன் மூலம் சிங்கள சோவினிசத்தை தூண்டிவிடவும் மக்கள் முகம் கொடுக்கும் நிஜ பிரச்சினைகளை இருட்டடிப்புச் செய்யவும் இவை பார்க்கின்றன. பொதுஜன முன்னணி, யூ.என்.பி. இரண்டும் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் நாட்டின் வடக்கு-கிழக்கில் பிராந்திய சபைக்கு வரையறுக்கப்பட்ட அதிகாரங்களை கையளிக்கும் அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவு வழங்கின. இனக்குழு அடிப்படையில் பிராந்தியங்களை கூறு போடும் திட்டமானது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாறாக பதட்ட நிலையை மேலும் அதிகரிப்பதோடு பல்வேறு மாகாணங்களிலும் சிறுபான்மை சனத்தொகையின் 'இனக்குழு சுத்திகரிப்புக்கான' கதவுகளை மட்டுமே திறந்துவிடும்.

பொதுஜன முன்னணியும் யூ.என்.பி.யும் ஏதே ஒரு வடிவிலான அதிகாரப் பகிர்வின் மூலம் தமிழ் முதலாளித்துவக் கட்சிகளுடன் ஒரு உடன்பாட்டைச் செய்துகொள்ளவும், தமிழீழ விடுதலைப் புலிகளை (LTTE) ஓரங்கட்டவும், அதன் மூலம் பெரும் மேற்கத்தைய வல்லரசுகளதும், இந்தியாவினதும் யுத்தத்துக்கு முடிவு கட்டும் இலங்கையின் பெரும் வர்த்தக நிறுவனங்களதும் ஒரு பகுதியனரதும் கோரிக்கைளை இட்டு நிரப்ப முடியும் என நம்புகின்றன. இதே சமயம் இந்த இரண்டு கட்சிகளும் "யுத்தத்தை ஒரு நிஜமான முடிவுக்கு" கொணரும்படி கோரும் சிங்கள சோவினிச அமைப்புகளது ஆதரவையும் நாடி நிற்கின்றன.

இரு முக்கிய முதலாளித்துவக் கட்சிகளுக்கும் அவற்றின் சோவினிசக் கூட்டுகளுக்கும் எதிராக சோ.ச.க. சிங்கள, தமிழ், தமிழ் பேசும் முஸ்லீம் மக்களை ஒன்றிணைக்கும் ஒரு பதிலீடான சோசலிச வேலைத்திட்டத்தை முன்வைக்கின்றது. ஒரு முற்போக்கான அடிப்படையில் யுத்தத்துக்கு முடிவுகட்டுகின்றதும் பெரும்பான்மையினரான சாதாரண மக்களின் ஜனநாயக, சமூக அபிலாசைகளை இட்டுநிரப்புவதற்குமான ஒரே வழி அதுவே.

பொதுஜன முன்னணி தலைவி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு

18ம் பக்கம் பார்க்க

# இலங்கையில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள சமயத்தில் பொதுஜன முன்னணி ஆட்சியில் பிளவு

விஜே டயஸ்
ஆகஸ்ட் 23, 2000

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகஸ்ட் 18ம் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தை கலைத்ததோடு அக்டோபர் 10ல் பொதுத் தேர்தல் நடாத்தப்படும் எனவும் அறிவித்துள்ளார். இந்த பாராளுமன்றம் அதன் கால எல்லைக்கு ஆறு நாட்களுக்கு முன்னரே கலைக்கப்பட்டுள்ளது. தேர்தலை முன் கூட்டியே நடாத்தவும் எதிர்க் கட்சிகளின் பிரச்சாரங்களுக்கு குழிபறிக்கவுமே இங்ஙனம் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை, அவரது பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் உள்ளேயான ஆழமான நெருக்கடியில் இருந்தும், இந்த கூட்டு முன்னணியின் முக்கிய அரசியல் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினுள் தலையெடுத்துள்ள பெரும் பிளவுகளில் இருந்தும் பெருக்கெடுத்துள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் தீவின் வடக்கு- கிழக்கு மாகாணங்களை முடக்கியுள்ள 17 வருடத்துக்கும் மேலான ஒரு உள்நாட்டு யுத்தத்திற்கு தீர்வு காணும் இலக்கில் முன்வைக்கப்பட்ட அரசியலமைப்பு திருத்த மசோதாவுக்கு அவசியமான 2/3 பங்கு பெரும்பான்மையை அரசாங்கம் பெறத் தவறியது. அரசாங்கமும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் (UNP) வாக்குகளை திருப்பும் பொருட்டு மாறி மாறி இலஞ்சம் கொடுப்பதில் ஈடுபட்டன. இறுதியில் பொதுஜன முன்னணி வெட்கக் கேடான தோல்வியைத் தழுவிக் கொண்டது. ஒன்றரை நாள் விவாதத்தின் பின்னர் இது அரசியலமைப்புத் திருத்தம் மீதான சகல பாராளுமன்ற விவாதங்களையும் ஒத்திவைக்கத் தள்ளப்பட்டது. இந்த அரசியல் வீழ்ச்சிக்கு முன்னதாக ஏப்பிரல் 22ம் திகதி முக்கியமான இராணுவத் தளமான ஆனையிறவு முகாமை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் (LTTE) பறிகொடுத்ததன் மூலம் பெரிதும் பாரதூரமான இராணுவ பேரழிவுகள் ஏற்பட்டன.

முழு தேர்தல் பிரச்சார இயக்கமும் அவசரகால விதிகளின் நிழலாட்டத்தின் கீழேயே இடம் பெறும். இந்த விதிகள் படுமோசமான பத்திரிகைத் தணிக்கையுடன் சேர்ந்து இன்னமும் அமுலில் இருந்து கொண்டுள்ளது. இந்தத் தணிக்கை விதிகள், யுத்தம் சம்பந்தப்பட்ட விடயங்களைப் பற்றிப் பேசுவதையோ எழுதுவதையோ தடை செய்கின்றன. அத்தோடு அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் ஆபத்தும் இருந்து கொண்டுள்ளது. இதன் மூலம் இந்த தேர்தலில் மிகவும் தீர்க்கமான விடயமான 17வருட கால உள்நாட்டு யுத்தம் சம்பந்தமாக பூரணமானதும் வெளிவெளியானதுமான கலந்துரையாடல்கள் இடம்பெற அனுமதி கிடையாது. இதே சமயம் அரசாங்கம் சமீபத்தில் தருவித்த பெரிதும் தொழில்நுட்பம் நிறைந்த குண்டுவீச்சு சாதனங்களை கொண்டு யாழ்ப்பாணக் குடா நாட்டிலும், வடக்கின் ஏனைய பகுதிகளிலும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை நடாத்துவதை உக்கிரமாக்கியுள்ளது. இதன் மூலம் அரசாங்கம் சிங்கள அதிதீவிரவாத அமைப்புகளுடனான உறவுகளைப் பலப்படுத்திக் கொண்டுள்ளது.

பிரதான எதிர்க் கட்சியான யூ.என்.பி. அரசியலமைப்பு திட்டத்தை வரைவதில் பங்குகொண்டதோடு, நோர்வே, அனுசரணையாளர் பாத்திரத்தை வகித்தது. இதனை ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவும் ஆதரித்தன. பொதுஜன முன்னணியும் யூ.என்.பி.யும் அரசியலமைப்பு வரைவின் 95 சதவீதம் சம்பந்தமாக இரு தரப்பும்

13ம் பக்கம் பார்க்க

சிங்கள – தமிழ் தொழிலாளர் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவோம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொழிலாளர் பாதை**

இலங்கையின் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

ஆசிரியர்: கே. ரத்னாயக்க

துணை ஆசிரியர்: எஸ்.இராசேந்திரன்

பதிப்பாளர்: தீபால் ஜயசேகர

சோசலிச சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர்: விஜே டயஸ்

அலுவலகம்:

90. 1 வது மாளிகாகந்த
ஒழுங்கை,
கொழும்பு – 10
தொலைபேசி: 682220

# குமாரதுங்க அரசியலமைப்பு சீர்திருத்த மசோதாவை "ஒத்திவைத்ததை" தொடர்ந்து இலங்கை அரசாங்கத்தின் நெருக்கடி உக்கிரம் கண்டுள்ளது

கே.ரத்னாயக்க
ஆகஸ்ட் 9, 2000

இலங்கையின் பொதுஜன முன்னணி அரசாங்கம் தனது உத்தேச அரசியலமைப்பு சீர்திருத்த மசோதாவை நேற்று கைவிடத் தள்ளப்பட்டது. இது இலங்கையின் ஆட்சியாளர்களையும் ஆளும் வர்க்கத்தையும் ஒரு ஆழமான அரசியல் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. இந்த அரசியல் தீர்வுப் பொதிக்கு எதிரான இனவாத எதிர்ப்பு அதிகரித்து வந்த நிலையிலும் மூன்றில் இரண்டு பங்கு பாராளுமன்ற பெரும்பான்மையைப் பெறும் சாத்தியம் குடைசாய்ந்து போன நிலையிலும் அரசாங்கக் கட்சியில் இருந்து ஆட்கள் கட்சி தாவும் ஆபத்துக்கள் உருவான நிலையிலும் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.


கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தப் புதிய மசோதாவை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். 17 வருடகால உள்நாட்டு யுத்தத்துக்கு முடிவு கட்டி, சமாதானத்தை ஏற்படுத்த இது அத்திவாரமாக அமையும் என அவர் பிரகடனம் செய்திருந்தார். இந்த விவாதம் திங்கட்கிழமை ஆரம்பமாகியதோடு மசோதாவை ஒரு மூன்று நாள் விவாதத்துடன் வாக்கெடுப்பிற்கு விட அவர் முடிவு செய்திருந்தார். எவ்வாறெனினும் நேற்று ஒரு சிரேஷ்ட அமைச்சரும் சபை முதல்வருமான ரத்னசிரி விக்கிரமநாயக்க இம்மசோதாவை வாக்கெடுப்பிற்கு விடாது "காலவரையறையின்றி ஒத்திப்போட" அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் திடீரென அறிவித்தார்.

கடைத்தனங்கள் நிறைந்த பாராளுமன்ற விவாதத்தின் இறுதித் தருணத்தில் பொதுஜன முன்னணி அரசாங்க அமைச்சர்கள் யூ.என்.பி எதிர்க்கட்சி சகாக்களுக்கு விடுத்த அழைப்பு செவியில் ஏறவில்லை. இங்கு உரைநிகழ்த்திய வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் "இந்த நெருக்கடியை தீர்ப்பதற்கான இறுதி சந்தர்ப்பம் இதுவே" என எச்சரிக்கை செய்தார்.

அரசாங்கத்தின் பேரழிவுகளுக்கு யூ.என்.பி.யே காரணம் என பொதுஜன முன்னணி குற்றம் சாட்டியது. தொலைக்காட்சியில் உரை நிகழ்த்திய தகவல் தொலைத் தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர, மசோதாவுக்கு சார்பாக வாக்களிக்க இருந்த பாராளுமன்ற உறுப்பினர்களை எதிர்க் கட்சியினர் ஒழித்து வைத்துள்ளதாக குற்றம் சாட்டினார். விடுமுறைகள், காசு, ஆடம்பர வீடுகள், கார்கள் போன்ற லஞ்சங்கள் வழங்கப்பட்டதாக கூறப்பட்ட போதிலும் இரண்டு யூ.என்.பி. பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே அரசாங்க கட்சி பக்கம் திரும்பினர். இது குமாரதுங்க மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறுவதற்கு அவசியமான வாக்குக்களில் மேலும் 10 வாக்குகள் பற்றாக்குறையை ஏற்படுத்தியது.

ஆனால் இந்த மசோதாவின் மரணத்துக்கான நிஜ காரணம், ஆளும் கட்சியினுள்ளான பிளவுகளிலும் முதலாளித்துவ தமிழ் கட்சிகள் தொடர்பான அதனது மூலோபாயத்தின் சரிவிலும் தங்கியுள்ளது.

நேற்றைய தினம் ஒரு சிரேஷ்ட அமைச்சரான மஹிந்த ராஜபக்ச கட்சி அணியில் இருந்து விலகி, சிங்கள சோவினிஸ்டுகளுடன் வெளிவெளியாக இணைந்து கொண்டார். இந்த மசோதா மீதான விவாதம் ஒத்திப்போடப்பட்டது தான் தாமதம் அவர் பாராளுமன்றத்துக்கு வெளியில் [illegible] ஆர்ப்பாட்டக்காரர்கள், [illegible] முன் தோன்றி "பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டது" எனத் தெரிவித்தார். அங்கு கூடியிருந்த கூட்டம் அவரை "சிங்கள மாவீரன்" எனக் கூறி கோஷமெழுப்பியது. வெள்ளிக்கிழமை பொதுஜன முன்னணி அரசாங்க பின்னாசன எம்.பி.யான ஜயசேன ராஜகருண, குமாரதுங்கவின் திட்டத்துக்கு எதிராக பாராளுமன்றத்தில் இருந்து இராஜினாமாச் செய்தார். அத்தோடு கடந்த திங்கட்கிழமை பொதுஜன முன்னணி பா.உ. டிக்சன் பெரேரா இந்த மசோதாவுக்கு எதிராக யூ.என்.பி.யுடன் சேர்ந்து கொண்டார்.



ஜனாதிபதி குமாரதுங்க ஆகஸ்ட் 3ம் திகதி விசேட பாராளுமன்ற கூட்டத்தில் உரையாற்றுகிறார்

இந்த மூன்று கட்சித் தாவுதல்களும் சிங்கள பேரினவாதத்தையும், இனவாதத்தையும் நீண்டகாலமாகவே அடிப்படையாகக் கொண்ட குமாரதுங்கவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) பௌத்த பிக்குமாரின் பிரச்சாரத் தாக்கம் காரணமாக சிதறுண்டு போகத் தொடங்கியுள்ளதை எடுத்துக் காட்டுகின்றது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கு முக்கிய தமிழ் பாராளுமன்றக் கட்சிகளின் ஆதரவும் குமாரதுங்கவுக்கு அவசியமாக இருந்தது. இந்த அரசியலமைப்பு மாற்றங்கள் இந்நாட்டின் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் அரசாங்க படைகளுக்கு எதிராக ஒரு கடும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பிரிவினைவாத இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளை (LTTE) ஓரங்கட்டுவதற்கான ஒரு வரையறுக்கப்பட்ட அதிகாரப் பகிர்வு தீர்வினை இவர்களுடன் ஏற்படுத்துவதை இலக்காகக் கொண்டது. எவ்வாறெனினும் கடந்த திங்கட்கிழமை தமிழர் விடுதலைக் கூட்டணியின் (TULF) மத்திய குழு, பொதுஜன முன்னணியின் இம்மசோதாவை எதிர்ப்பதென முடிவு செய்தது. இதை ஆதரிக்குமாறு இந்திய தூதரகத்தினர் செய்த தூண்டுதலுக்கு இடையேயும் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தில் பேசிய தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி.க்கள் சுயாட்சி வேண்டுமெனவும் பேச்சுவார்த்தைகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

தமிழ் சிறுபான்மையினருக்கு வரையறுக்கப்பட்ட அதிகாரங்களை வழங்கும் அரசியலமைப்பு திருத்தங்களுக்கு மேலாக குமாரதுங்க நாட்டின் தேர்தல் முறையை மாற்றியமைக்கும் மற்றொரு மசோதாவையும் கொணர இருந்தார். இன்றைய அமைப்பு முறை ஒரு பலம் வாய்ந்த அரசாங்கத்துக்கு தடையாக இருப்பதாகக் கூறி- ஆளும் கட்சி எப்போதும் சிறிய கட்சிகளின் ஆதரவில் தங்கியிருக்க நேரிட்டது குமாரதுங்க பாராளுமன்றத்தில் ஆசனங்களை மேலும் 73ல் அதிகரிப்பதன் மூலம் மொத்த எண்ணிக்கையை 298 ஆக்கத் திட்டமிட்டிருந்தார். அத்தோடு ஒரு விகிதாசார பிரதிநிதித்துவ முறையையும் அறிமுகம் செய்ய இருந்தார். ஆனால் அவர் இந்த மசோதாவையும் வாபஸ் பெற வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த பாராளுமன்ற விவாதத்துக்கான காலப்பகுதியில் சமீபத்தில் அமைக்கப்பட்ட சிங்கள உறுமய (Sinhala heritage) கட்சி, பௌத்த பிக்குகளின் தேசிய சபை, ஜே.வி.பி. போன்ற சிங்கள பேரினவாத அமைப்புக்கள் புதிய மசோதா தமிழ் சிறுபான்மையினருக்கு நாட்டை "காட்டிக் கொடுப்பதாகும்" என குறிப்பிட்டு இருந்தன.

இந்த சக்திகளுக்கு அடிபணிந்து யூ.என்.பி. அரசியலமைப்பு கலந்துரையாடல்களில் இருந்து விலகிக் கொண்டதோடு, பொதுஜன முன்னணி எல்லாவற்றுக்கும் முதல் இந்த மசோதாவை பௌத்த சங்கத்தினரின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனக் கோரியது.

கடந்த வாரம் பௌத்த உயர் பீடங்களை சேர்ந்த மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதியை சந்திக்க மறுத்து விட்டனர். நேற்றைய தினம் பல்வேறு பீடங்களையும் சேர்ந்த நால்வர் எம்.பீ.க்களை மசோதாவை நிராகரிக்கும்படி கோரி கூட்டு கடிதத்தை வரைந்தனர். இதே சமயம் புறக்கோட்டையில் சிங்கள உறுமய கட்சியைச் சேர்ந்த ஒரு பௌத்த பிக்கு "சாகும் வரை உண்ணாவிரதத்தில்" ஈடுபட்டார். சிங்கள உறுமய தலைவர்கள் அரசாங்கம் இந்த மசோதாவை வாபஸ் பெறும் வரை இந்த உண்ணாவிரதம் தொடரும் எனத் தெரிவித்துள்ளனர்.

பொதுஜன முன்னணி அரசாங்கம் அதிகாரப் பகிர்வு மசோதாவை கைவிட்டதை இந்த பாசிச சக்திகள் பெரும் மகிழ்ச்சியுடன் வரவேற்றன. சுடச்சுட ஒரு அறிக்கையை வெளியிட்ட ஜே.வி.பி. பௌத்த பிக்குகளின் நடவடிக்கையினாலேயே "வெற்றி சாத்தியமாகியது" என்றது. இதே சமயம் சிங்கள உறுமய கட்சி தமிழர்களுக்கு எதிரான கிளர்ச்சி தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் எனக் கோரியது.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் குமாரதுங்க மீண்டும் ஆட்சியை கைக்குள் போட்டுக் கொள்வதற்காக தமிழர் எதிர்ப்பு உணர்வுகளுக்கும் சிங்கள பேரினவாதத்துக்கும் நேரடியாக அழைப்பு விடுத்தார். விடுதலைப் புலிகளின் இராணுவத் தாக்குதலை எதிர் கொள்ளும் பொருட்டு கடந்த மேயில் நாட்டை ஒரு புதிய "யுத்த நிலைமைக்கு" கொணர்ந்ததோடு படு கொடூரமான ஜனநாயக விரோத அவசரகால நிலைமையையும் அறிமுகம் செய்தார். சோவினிஸ்டுகள் சந்திரிகாவின் பின்னால் அணிதிரண்டனர். பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் ஆட்டங்கண்ட பாராளுமன்ற நிலைமைக்கான உடனடி உரித்தாளர்களாக இவை தென்படுகின்றன.

---

**உலக சோசலிச வலைத் தளம் (WSWS) (நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் வெளியீடு) தொடர்பை பெறவேண்டிய முகவரி**
**http:// www.wsws.org**

- *இன்றைய சிறப்பு
- *செய்திகளும் ஆய்வுகளும்
- *தொழிலாளர் போராட்டங்கள்
- *கலை விமர்சனம்
- *வரலாறு
- *கலந்துரையாடல்
- *கடிதத் தொடர்புகள்
- *சுவடிகள்
- *WSWS பற்றி
- *வலைத் தளத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய நூல்கள்
- *அனைத்துலகக் குழுவைப் பற்றி

ஆங்கிலம் தவிர்ந்த வேறு மொழிகள்

- *ஜேர்மன்
- *பிரான்ஸ்
- *ஸ்பானியா
- *ருஷ்யா
- *சேர்போ –குரோஷியன்
- *இந்தோனேசியா
- *சிங்களம்
- *தமிழ்

**அனைத்துலக குழுவின் பகுதிகளின் இன்டர்நெட்**

World Socialist Web Site
http://www.wsws.org
அமெரிக்கா:
http://www.socialequality.com
அவுஸ்திரேலியா:
http://www.workersnews.flex.com.au
பிரித்தானியா:
http://www.socialequality.org.uk
கனடா:
http://www.egalitesociale.com
ஜேர்மன்:
http://gleichheit.de

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஜனாதிபதி ஜனநாயக விரோத அரசியல் சீர்திருத்தத்தை பலாத்காரமாக நடைமுறைக்கிட முயற்சிக்கின்றார்

கே.ரத்நாயக்க
ஆகஸ்ட் 4, 2000

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று பாராளுமன்றத்தில் முன்வைத்த அரசியல் சீர்திருத்தம், தமிழ் சிறுபான்மையினருக்கு எதிரான 17 வருடகால உள்நாட்டு யுத்தத்தால் எழுந்துள்ள அரசியல் நெருக்கடியின் புதிய கட்டத்தை வெளிக் கொணர்ந்துள்ளது.

தற்போதைய பாராளுமன்றத்தின் ஆயுள் காலம் முடிவுறும் தினமான ஆகஸ்ட் 24ம் திகதிக்கு முன்னதாக இதனை நடைமுறைக்கிடும் ஒரு நிலையற்ற பிரயத்தனமாகவே, இந்த அரசியல் சீர்திருத்த பொதியை பாராளுமன்றத்தின் ஒரு விசேட அமர்வில் ஜனாதிபதி சம்பிரதாய பூர்வமாக முன்வைத்தார். புதிய பாராளுமன்றத்திற்கான தேர்தல்கள் நவம்பர் 9ம் திகதிக்கு முன்னர் இடம்பெறும்.

பிராந்தியங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளித்து வடக்கு-கிழக்குக்கான இடைக்கால நிர்வாக சபைய்யை (Interim Council) உருவாக்கும் திட்டத்தின் மூலம் நாட்டில் இடம்பெற்று வரும் நீண்ட கால உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வருவதோடு "தேசிய சமாதானத்தையும்" கொண்டு வரும் என, கூச்சல் நிறைந்த சபையில் குமாரதுங்க அதிகாரபூர்வமாக வெளிப்படுத்தினார். அவர் பிரிவினைவாத தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு (LTTE) இதனை அனுப்புவதாகவும், "ஆனால் விடுதலைப் புலிகள் அந்த யோசனைகளை நிராகரிப்பார்களேயானால், நாம் யுத்தத்தைத் தொடர்வோம்" எனவும் குறிப்பிட்டார்.

எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் (UNP) உறுப்பினர்கள் ஊ... சத்தமிட்டு குமாரதுங்கவின் இரண்டு மணித்தியால பேச்சை கேலி செய்ததோடு, "ஒரு குடிகாரி நாட்டை விற்றுவிட்டாள்" என இடைக்கிடையே கோசமெழுப்பினர். ஏனைய எதிர்க் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சீர்திருத்த மசோதாவின் பிரதிகளை கிழித்து தீ மூட்டுகையில், ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க சபையில் இருந்து வெளியேறினார்.

ஐக்கிய தேசியக் கட்சி இந்தப் புதிய மசோதாவை எதிர்ப்பதில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ள சிங்கள உறுமய கட்சி, மக்கள் விடுதலை முன்னணி (JVP), மற்றும் பிரதான பௌத்த மத பிக்குகள்கள் உட்பட்ட இனவாத வலதுசாரி சிங்கள சோவினிஸ்டுகளுடன் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது.

தீர்வுப் பொதி தமிழர்களுக்கு அளவு கடந்த அதிகாரத்தை வழங்குவதாகவும், நாட்டைப் பிரித்து, பௌத்தத்தின் சிறப்புரிமை வாய்ந்த அரசியல் அந்தஸ்தை முடிவுக்கு கொண்டுவருவதாகவும் சோவினிஸ்டுகள் குற்றம் சாட்டும் அதே வேளை, பகிரங்க விவாதமோ அல்லது பெரும் பௌத்த மத பிக்குகளதும், மகா சங்கத்தினதும் ஆசியோ இல்லாமல் திட்டங்களை விரைவுபடுத்துவதாக ஐ.தே.க. குமாரதுங்க மீது குற்றம் சாட்டுகின்றது.

பாராளுமன்றத்திலிருந்து பல கிலோ மீற்றர்களுக்கு அப்பால், ஜே.வீ.பி.யினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பொலிசார் மோதிக்கொண்ட அதே வேளை, பௌத்த பிக்குகள் மத்திய கொழும்பில் தமது சொந்த கண்டனத்தை வெளிக்காட்டினர். இந்த திருத்தங்கள் அமுல் செய்யப்படுமானால் ஆயிரக் கணக்கான பிக்குகள் "சாகும் வரை உண்ணாவிரதம்" இருப்பர் எனத் தெரிவித்த மகா சங்கத்தினருடன், அதிகாரப் பகிர்வுப் பொதிக்கு எதிராக ஒரு தேசிய ரீதியிலான பிரச்சாரத்தை முன்னெடுப்பதாக ஜே.வி.பி. உறுதியளித்துள்ளது. ஆகஸ்ட் 7ம் திகதி தீர்வு யோசனை மீதான பாராளுமன்ற விவாதம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு நாட்களின் பின்னர் ஆகஸ்ட் 9ம் திகதி- வாக்கெடுப்பு இடம்பெறவுள்ள வேளையில், இந்த குழுக்கள் தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு இனவாத மோதுதலை தூண்டிவிடுவதை அடிப்படையாகக் கொண்டுள்ளன. பாராளுமன்றம் இடம்பெறும் போது 10,000 பிக்குகளைக் கொண்ட ஒரு ஆர்ப்பாட்டத்துக்கு திட்டமிடப்பட்டுள்ளது.

சிங்கள இனவாதிகளை சமாதானப்படுத்திக் கொண்டும் பலவிதமான தமிழ் முதலாளித்துவக் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துக் கொண்டும் ஒரு ஆபத்தான கயிற்றின் மேல் நடந்துகொண்டு தீர்வுப் பொதியை முன் தள்ளுவதற்காக கடந்த இரண்டு மாதங்களாக குமாரதுங்க முயற்சித்து வருகின்றார். அவர் இரு கட்சிகளுக்கும் இடையிலான ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் நோக்கில், ஐ.தே.க.வுடன் ஒரு தொடர் பேச்சுவார்த்தையை ஜூலை மாதத்தில் ஆரம்பித்து வைத்தார். ஆனால் ஐ.தே.க. இரண்டு வாரங்களுக்கு முன்னர் திடீரென பேச்சுவார்த்தைகளை முறித்துக் கொண்டது. அதிலிருந்து அவர் தனது ஆளும் கூட்டணியை பலப்படுத்தவும், தமிழ் கட்சிகளின் ஆதரவை உறுதிப்படுத்தவும், எதிர்க் கட்சியான ஐ.தே.க.வின் பாராளுமன்ற உறுப்பினர்களை தீர்வு யோசனையை நடைமுறைக்கிடுவதற்கு ஆதரவாக வெற்றி கொள்ளவும் தீவிரமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுவருகிறார்.

தமிழ் கட்சிகளின் ஆதரவானது அவரது திட்டத்தை வெற்றி கொள்வதற்கான ஒரு திருப்புமுனையாகும். மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சிக்கான மாற்றத்தில், ஒரு அரசியல் அதிகார அந்தஸ்த்தையும் மற்றும் ஏனைய சலுகைகளையும் வழங்குவதன் மூலம் -இடைக்கால நிர்வாக சபையானது ஐந்து வருடத்திலிருந்து 10 வருடத்திற்கு விஸ்தரிக்கும் வகையில் அமையும் என அவர் பேச்சளவில் உறுதியளித்துள்ளார்- விடுதலைப் புலிகளை தனிமைப்படுத்தவும் தீர்வுப் பொதியை தமிழ் மக்கள் மீது கட்டியடிக்கவும் தமிழ் முதலாளித்துவக் கட்சிகளை பயன்படுத்த ஜனாதிபதி எத்தனித்துள்ளார்.

ஜூலை 28ம் திகதி, குமாரதுங்க தமிழர் விடுதலைக் கூட்டணியையும் (TULF) தமிழீழ மக்கள் விடுதலை அமைப்பையும் (புளொட்) சந்தித்தார். வார இறுதியில் -ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சி- இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுடனும் கலந்துரையாடல் நடாத்தினார்(CWC). திங்கள் இரவு அவர் மற்றொரு தமிழ் கட்சியான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியை சந்தித்தார்(EPDP).

இந்த ஏற்பாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளும் சேர்த்துக் கொள்ளப்படாவிட்டால் தீர்வுப் பொதிக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என த.வி.கூ. குறிப்பிட்டிருந்தது. விடுதலைப் புலிகள், இந்த அரசியல் சீர்திருத்தத்தை நிராகரித்துள்ள போதிலும், தீவில் ஒரு தனியான அரசை அமைப்பதற்கு குறைந்த எதையும் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை என அறிவிக்கவில்லை.

திங்கட்கிழமை இடம்பெற்ற ஒரு விசேட கூட்டத்தில், குமாரதுங்க தனது அமைச்சரவை புதிய திட்டத்தை ஏகமனதாக அங்கீகரிப்பதற்கான நம்பிக்கையை உறுதிப்படுத்தினார். ஜனாதிபதியின் சுகயீனமான தாயார் - பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க- கூட்டத்திற்கு சக்கர நாற்காலியில் அழைத்து வரப்பட்டார். "தேவையானால் இரண்டு கைகளாலும் வாக்களிப்பதாக" அவர் குறிப்பிட்டார். ஆயிரக்கணக்கான பிக்குகள் அரசியல் சீர்திருத்தத்திற்கு எதிராகவும் தொடர்ச்சியான யுத்தத்துக்காகவும் புதன்கிழமை பிரார்த்தனை கூட்டம் நடாத்திய சமயம், குமாரதுங்க மகா சங்க தலைவர்களை கண்டியில் சந்திக்க முயற்சித்தார்.

புதிய அரசியல் சீர்திருத்தத்திற்கான ஐ.தே.க.வின் ஆதரவை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான இறுதி நிமிட முயற்சியில் கடந்த புதன்கிழமை ஜனாதிபதி ஈடுபட்ட போதும், அது வெற்றியளிக்கவில்லை. அன்றைய தினம் தீர்வுப் பொதி நாட்டின் உயர் நீதிமன்றத்தின் பூரண அங்கீகாரத்துக்காக முன் வைக்கப்பட்டது. மூன்று நீதிபதிகளின் தீர்ப்பின்படி, தேசிய ரீதியிலான கருத்துக்கணிப்பு வாக்கெடுப்புடனும் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளுடன் மாத்திரமே அது நடைமுறைக்கிடப்பட முடியும். ஐ.தே.க, சிங்கள உறுமய கட்சி, ஜே.வி.பி. மற்றும் மகா சங்கத்தினர் அனைவரும் சட்டரீதியான எதிர்ப்பை தெரிவித்திருந்தனர். ஆகஸ்ட் 24ம் திகதி இன்றைய பாராளுமன்றத்தின் முடிவுக்கு முன்னதாக வாக்கெடுப்பு நடத்தப்படாவிட்டால் அதன் தாக்கத்தால் இந்தத் திட்டங்கள் வலிமையிழந்துவிடும். சி.உ.க. பொதுஜன முன்னணியினால் நியமனம் செய்யப்பட்ட பிரதம நீதியரசரின் ஆளுமையை சவால் செய்தது. இறுதியாக தீர்வுப் பொதியை அங்கீகரித்து தீர்ப்பு வழங்கியது.

குமாரதுங்கவின் பொதுஜன முன்னணி அரசாங்கம், 1994ல் ஐ.தே.க. மீதான பரந்த வெறுப்பை சுரண்டிக் கொண்டும் அவர்களின் உள்நாட்டு யுத்த நடவடிக்கைகளை விமர்சித்துக் கொண்டும் ஆட்சிப் பீடம் ஏறியது. பொதுஜன முன்னணி யுத்தத்தை நிறுத்துவதாகவும் ஜனநாயகத்தை உருவாக்கி வாழ்க்கை நிலைமைகளை உயர்த்துவதாகவும் உறுதியளித்தது. ஆனால் 1995ல் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் முறிவடைந்த வேளையில் அரசாங்கத்தின் திட்டங்களை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ளச் செய்வதற்காக "சமாதானத்துக்கான யுத்தம் ஒன்று" அவசியம் என குறிப்பிட்ட குமாரதுங்க, யுத்தத்தை உக்கிரமாக்கினார். 1995ல் யுத்தம் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் முதலாவது அதிகாரப் பரவலாக்கல் பொதி முன்வைக்கப்பட்டது. 1997ல் அது சட்டரீதியான வரைவாக்கப்பட்ட வேளையில், அரசாங்கம் குறிப்பிடத்தக்க வகையில் அதன் வரையறுக்கப்பட்ட முன்னைய திட்டங்களின் வலுவைக் குறைத்தது.

## பிரித்தானிய அழுத்தம்

கடந்த ஆண்டில் விடுதலைப் புலிகள் குறிப்பிடத்தக்க இராணுவ முன்னேற்றங்களை கண்டதன் பின்னரே இந்த புதிய சீர்திருத்தத்தில் மாற்றுத் திட்டங்கள் கொண்டுவரப்பட்டன. இந்த ஆண்டின் ஏப்பிரல் மாதத்தில் முக்கிய இராணுவத் தளமான ஆனையிறவு தளத்தின் வீழ்ச்சி ஒரு உடனடியானதும் ஆழமானதுமான அரசியல் நெருக்கடியை கொழும்பில் உருவாக்கியுள்ளதுடன், இது விடுதலைப் புலிகள் யாழ் குடாநாட்டை கைப்பற்றிக்கொள்ளும் விளிம்பிற்கு வந்ததை தொடர்ந்து மிகவும் மோசமாகியுள்ளது. அதனைத் தொடர்ந்து குமாரதுங்க யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்காக விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கு சில உயர்மட்ட சக்திகளதும் இலங்கையின் பெரும் வர்த்தகர்களில் கணிசமான பகுதியினரதும் அழுத்தத்துக்கு உள்ளானார். பயனளிக்காத ஒரு தொடர் பேச்சுவார்த்தைகளின் பின்னர், அரசாங்கம் அவசர அவசரமாக புதிய திட்டங்களை உருவாக்கியது.

ஜூலை 25ம் திகதி ஐ.தே.க.வுடனான பேச்சுவார்த்தை முறிவடைந்த நிலையிலும், அதிகாரப் பரவலாக்கல் ஓரம் கட்டப்பட்டிருந்த நிலையிலும் குமாரதுங்க லண்டனுக்கு பறந்தார். இந்தப் பயணம் மருத்துவ தேவைக்கான ஒரு தனிப்பட்ட பிரயாணமாக சித்தரிக்கப்பட்டாலும், தீர்வுப் பொதியை அடுத்த தேர்தலுக்கு முன்னர் முன்வைப்பதற்கான அழுத்தம் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளது தெளிவாகியுள்ளது.

பேச்சுவார்த்தையின் பண்பு கடந்த வாரம் பிரித்தானிய அரசாங்கம் அறிவித்த புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் மூலம் மறைமுகமாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இது இயற்றப்படுமானால் இந்த தீர்மானத்தின் மூலம் பிரித்தானியா விடுதலைப் புலிகளை "பயங்கரவாத இயக்கமாக" பிரகடனப்படுத்துவதன் மூலம் ஐக்கிய இராச்சியத்தில் (UK) அதன் சகலவிதமான நடவடிக்கைகளுக்கும் தடை விதிக்க முடியும். இந்தப் பயமுறுத்தல் சந்தேகமில்லாமல் விடுதலைப் புலிகளையும் அதே போல் கொழும்பு அரசாங்கத்தையும் பேரம்பேசல் மேசைக்கு தள்ளுவதற்கான அழுத்தத்தை வழங்க பயன்படுத்தப்படும்.

"இலங்கையில் இழக்கப்பட்டு வரும் சந்தர்ப்பங்கள்" *(Missing Opportunities in Sri Lanka)* என்ற தலைப்பில் கடந்த வாரம் வெளியிடப்பட்டுள்ள உலக வங்கி அறிக்கை ஒன்றில் 1984 தொடக்கம் 1996 வரையான யுத்தச் செலவு 1,831 பில்லியன் ரூபாய்கள் (23 பில்லியன் அமெரிக்க டாலர்) என கணக்கிட்டுள்ளதுடன் யுத்தம் நிறுத்தப்பட்டால் மாத்திரமே முதலீடு அதிகரிக்கும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளது. இந்த யுத்தம் பொருளாதாரச் சீர்கேட்டை மாத்திரம் உருவாக்கிவிடவில்லை. ஆனால் இந்தியத் துணைக் கண்டத்தில் இன முரண்பாடுகளும் சில பிரிவினைவாத இயக்கங்களும் தலைநீட்டிக் கொண்டுள்ள ஒரு நிலைமையில் அரசியல் மற்றும் சமூக ஸ்திரமின்மையின் பெறுபேறாக அச்சுறுத்தல்களும் வெடித்துள்ளது.

அரசியல் திட்டத்தை மாற்றும் பொதுஜன முன்னணியின் திட்டத்தின் முழு அமைப்பும் பிற்போக்கான ஜனநாயக விரோத கொள்கைகளுக்குக் கீழ்ப்படிந்ததாகும். நேற்று வரை பல மாதங்களாக தீர்வுப் பொதியை வெளியிடுவது தொடர்பாக இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள், பகிரங்க ஆய்வுகள் எதுவுமின்றி மூடிய கதவுகளுக்குள்ளேயே இடம்பெற்றது.

புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் 1978ல் நிறைவேற்று அதிகாரத்தை பலப்படுத்த அறிமுகம் செய்யப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதி முறை மேலும் ஆறு ஆண்டுகளுக்கு நீடிக்கப்படுவதோடு குமாரதுங்க ஆறு ஆண்டுகாலம் தொடர்ந்தும் ஆட்சியில் இருப்பதை சாத்தியமானதாக்கியுள்ளது. இந்தப் பதவியை ஒழித்துக் கட்டும் வாக்குறுதியுடனேயே அவர் 1994ல் ஆட்சிப் பீடம் ஏறினார். இப்பதவி யுத்தத்தை முன்னெடுக்கவும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளை துவம்சம் செய்வதிலும் ஒரு முக்கிய பாத்திரம் வகித்தது.

உத்தேச அரசியல் அமைப்புச் சட்டம் அவசரகாலச் சட்டங்களைத் திணிக்கும் அரசாங்கத்தின் வல்லமையையும் பலப்படுத்தும். தற்சமயம் அவசரகாலச் சட்டப் பிரகடனம் ஒரு பாராளுமன்றப் பெரும்பான்மை பலத்தின் மூலம் மாதாமாதம் புதுப்பிக்கப்பட வேண்டும். இது இனி 100 நாட்களாக நீடிக்கப்படும். யூ.என்.பி. 1979ல் பிரகடனம் செய்ததில் இருந்து நாட்டின் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஒரு அவசரகால நிலைமை அமுலில் உள்ளது. 1983ல் தமிழர் எதிர்ப்புக் கலவரங்களைத் தொடர்ந்து இது நாடு முழுவதற்கும்

16ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கும் காஷ்மீர் பிரிவினைவாதிகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு அமெரிக்கா நெருக்குவாரம்

தீபால் ஜயசேகர
ஆகஸ்ட் 14, 2000

கடந்த ஒரு வருட காலமாக காஷ்மீர் நெருக்கடி தொடர்பான தனது தலையீட்டை தொடரும் விதத்தில் அமெரிக்க நிர்வாகம் இந்திய அரசாங்கத்துக்கும் காஷ்மீர் பிரிவினைவாதிகளுக்கும் இடையே முதல் தடவையாக இடம் பெற்ற உத்தியோக பூர்வமான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது. கடந்த வாரம் யுத்த நிறுத்தம் தோல்வி கண்ட நிலையிலும் ஜம்மு-காஷ்மீர் இந்திய மாநிலத்தின் கோடைக்கால தலைநகரான ஸ்ரீநகரில் இடம் பெற்ற ஒரு மோசமான கார்க் குண்டு வெடிப்புக்கிடையிலும் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

காஷ்மீர் பிரிவினைவாதிகளுக்கும் புதுடில்லி அரசாங்கத்துக்கும் இடையேயான இடைக்கால யுத்த நிறுத்த பேச்சுவார்த்தைகள், ஆகஸ்ட 8ம் திகதி ஒரு பெரும் பாகிஸ்தானிய ஆதரவு பிரிவினைவாதக் குழுவான ஹிஸ்புல் முஜாஹிதீன் 15 நாள் யுத்த நிறுத்தத்தை ஒரு முடிவுக்கு கொணர்ந்ததைத் தொடர்ந்து முறிந்து போயிற்று.

இந்த ஹிஸ்புல் குழு இந்திய ஆட்சியாளர்களுடனான பேச்சுவார்த்தையை ஆகஸ்ட் 3ம் திகதி ஆரம்பித்தது. ஆனால் இதன் முக்கிய தலைவரான சலாஹுதீன் இந்தக் கலந்துரையாடல்களில் பாகிஸ்தானையும் சேர்த்துக்கொள்ளும்படி விடுத்த கோரிக்கையை இந்தியா நிராகரித்ததைத் தொடர்ந்து யுத்த நிறுத்தத்தை இரத்துச் செய்தது. ஆகஸ்ட் 7ம் திகதி பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்திய இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய், பாகிஸ்தான் எந்த விதத்திலும் சம்பந்தப்படுவதை அடியோடு நிராகரித்தார்.

இந்தப் பேச்சுவார்த்தைகள் இரத்துச் செய்யப்பட்ட இரண்டு நாட்களின் பின்னர் ஸ்ரீநகரில் இடம் பெற்ற குண்டு வெடிப்புக்கும் கடந்த சனிக்கிழமை நகரில் இடம்பெற்ற கைக்குண்டு வெடிப்புக்கும் ஹிஸ்புல் முஜாஹிதீன் உரிமை கோரியது. இச்சம்பவங்கள் வாஜ்பாய் அரசாங்கத்துக்கும் ஜெனரால் முஷாராப் தலைமையிலான பாகிஸ்தானிய இராணுவ ஆட்சியாளர்களுக்கும் இடையேயான பரஸ்பரம் குற்றச்சாட்டுக்களை திணிப்பதை தூண்டிவிட்டது. இருதரப்பினரும் சமாதான ஆரம்பிப்புக்களை நாசமாக்கி விட்டதாக ஆளுக்காள் குற்றம் சாட்டியுள்ளனர்.

பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு அமெரிக்கா விடுத்துள்ள அழைப்பு, இரண்டு நாட்களில் வாஷிங்டன் வெளியிட்ட இரண்டாவது அறிக்கையாகும். ஹிஸ்புல் குழுவினர் வாபஸ் பெற்றுக் கொண்ட ஆகஸ்ட் 8ம் திகதி இந்து பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் ஒரு அமெரிக்க இராஜாங்க திணைக்கள அதிகாரி பின்வருமாறு குறிப்பிட்டார்: "காஷ்மீரில் சமாதான வழிகளை போஷித்து தொடருமாறு நாம் சகல தரப்பினரையும் தூண்டுகின்றோம்... நாம் இந்தியாவுக்கும் ஹிஸ்புல் முஜாஹிதீனுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டதை வரவேற்றதோடு அது மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என ஊக்குவிக்கின்றோம்." ஆனால் அமெரிக்கப் பேச்சாளர் இந்தப் பேச்சுவார்த்தைகளில் பாகிஸ்தானை கலந்துகொள்ள ஹிஸ்புல் வலியுறுத்துவது தொடர்பாக கருத்து வெளியிடுவதில் அவதானமாக இருந்து கொண்டார். "இந்தப் பேச்சுவார்த்தைகள் எந்த விதத்தில் அமையவேண்டும் என்பதை சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் தீர்மானிக்க வேண்டும்" என அந்தப் பேச்சாளர் தெரிவித்தார்.

ஆகஸ்ட் 11ம் திகதி நியூயோக் டைம்ஸ் பத்திரிகையில் வெளியான ஒரு ஆசிரியத் தலையங்கம், கிளின்டன் ஆட்சியாளர்கள் அமெரிக்க ஆளும் நிறுவனங்களின் முக்கிய புள்ளிகளின் நெருக்குவாரங்களுக்கு உள்ளாகியுள்ளதை பிரதிபலித்தது. "வாஷிங்டன் இரு தரப்பினரையும் முன்நிபந்தனைகள் இல்லாமல் பேச்சுவார்த்தைக்கு வருமாறு நெருக்க வேண்டும்" என்றது. "ஒரு புதிய காஷ்மீர் யுத்தம் இடம் பெறுவதைத் தடுக்க சகல விதமான நியாயமான முயற்சிகளும் இடம் பெற்றாக வேண்டும்" எனவும் அது குறிப்பிட்டது. இந்த ஆசிரியத் தலையங்கம் ஹிஸ்புல் முஜாஹிதீன் இயக்கம் இப்பேச்சுவார்த்தைகளில் பாகிஸ்தானை பங்கு கொள்ள வைக்க வேண்டும் என்று வலியுறுத்துவதை கைவிடச் செய்ய வெள்ளை மாளிகை நெருக்க வேண்டும் என்பதை மறைமுகமாகக் குறிப்பிட்டது.

பேச்சுவார்த்தைகள் ஆரம்பமான ஆகஸ்ட் 3ம் திகதி கிளின்டன் வாஜ்பாயை பாராட்டவும் கடந்த இரண்டு தினங்களாக காஷ்மீரின் தென் பாகத்தில் இருந்து பக்தர்களும், புலம் பெயர்ந்த தொழிலாளர்களும் உட்பட சுமார் 100 பேர் படுகொலை செய்யப்பட்டதை கண்டனம் செய்யவும் வாஜ்பாயுடன் தொலை பேசியில் கதைத்தார். இந்தக் கொலைகளுக்கு ஹிஸ்புல் இயக்கத்தின் யுத்த நிறுத்தத்தை எதிர்க்கும் ஒரு போட்டி பிரிவினைவாத குழுவே பொறுப்பு என நம்பப்படுகின்றது. இத்தகைய நடவடிக்கைகளை பாகிஸ்தான் ஆதரிப்பதாக வாஜ்பாய் குற்றம் சாட்டிய போது கிளின்டன் அந்த விவகாரத்தை பாகிஸ்தானிய தலைவர்களுடன் எழுப்புவதாக வாக்குறுதி அளித்ததாகவும் சொல்லப்படுகின்றது.

ஆகஸ்ட் 8ம் திகதி பாதுகாப்பு சம்பந்தமான அமைச்சரவை கமிட்டியின் ஒரு சிறப்பு கூட்டத்தின் பின்னர் பாரதீய ஜனதா கட்சி தலைமையிலான வாஜ்பாய் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை புதுப்பிப்பதில் தனது ஆர்வத்தை பிரகடனம் செய்து கொண்டது. ஒரு அறிக்கை யுத்த நிறுத்தத்தை ஹிஸ்புல் கைவிட்டதையிட்டு கவலை தெரிவித்ததோடு பாகிஸ்தான் இக்குழுவின் மீது நெருக்குவாரம் கொணர்வதாக குற்றம் சாட்டியது. அது ஹிஸ்புல்லையும் ஏனைய பிரிவினைவாத குழுக்களையும் பேச்சுவார்த்தைக்கு வரும்படி அழைப்பு விடுத்தது.

ஆகஸ்ட் 3ல் இடம் பெற்ற பேச்சுவார்த்தைகள், ஜூலை 24ம் திகதி ஹிஸ்புல் குழு அறிவித்த ஒரு தன்னிச்சையான மூன்று மாத கால யுத்த நிறுத்தத்துக்கு பதிலளிக்கும் விதத்தில் இந்திய அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டது. இந்தியாவின் முன்னைய வரையறுக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளிற்கான அழைப்புக்கு முரணாக அரசாங்கம் இக்குழுவை நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளுக்கு அழைத்ததோடு அதற்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளையும் இடை நிறுத்தியது. வாஜ்பாய் அரசாங்கம் அனைத்து கட்சி ஹுரியாட் (All Party Hurriyat Group) குழுக்களுடனும் பேச்சுவார்த்தை நடாத்தவும் யோசனை தெரிவித்தது. இந்த அழைப்பு ஒரு தொகை பிரிவினைவாத குழுக்களை பிரதிநிதித்துவம் செய்ததோடு, அவை ஒரு சுயாதீனமான காஷ்மீருக்கு அல்லது அயலில் உள்ள பாகிஸ்தானுடனான ஒரு இணைப்புக்காக போராடி வருகின்றன. எவ்வாறெனினும் இதைத் தொடர்ந்து வாஜ்பாய், முஷாராப் ஆட்சியாளர்கள் "எல்லைக்குள் ஊடுருவும் பயங்கரவாதத்துக்கு" ஆதரவளிப்பதை நிறுத்தும் வரை பாகிஸ்தான் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தும் சாத்தியம் இல்லை எனத் தெரிவித்தார். இது பாகிஸ்தானில் இருந்து தொழிற்பட்டு வரும் காஷ்மீர் பிரிவினைவாத குழுக்களுக்கு இஸ்லாமாபாத் ஆதரவு வழங்குவது தொடர்பான ஒரு கருத்தாகும். ஹிஸ்புல் குழுவினருடனான பேச்சுவார்த்தைகள் நிபந்தனையற்றதாக இருக்கும் அதே சமயம் எந்த தீர்வு இந்திய அரசியலமைப்புக்குள் அமைய வேண்டும் எனவும் வாஜ்பாய் பிரகடனம் செய்தார்.

## ஒரு வருடம்- நீண்ட தொடர்

அமெரிக்க ஜனாதிபதி கிளின்டன், இந்தியாவும் பாகிஸ்தானும் ஒரு யுத்த முஸ்தீபுகளில் ஈடுபட்டு வந்த சமயத்தில், இந்திய காஷ்மீரின் கார்கில் மலைக் குன்றுகளில் இருந்து ஆயுதம் தாங்கிய ஊடுருவல்காரர்களை விலக்கிக் கொள்ள பாகிஸ்தான் பிரதமர் நவாஷ் ஷெரீப்பிடம் இருந்து ஒரு இணக்கத்தை பெற்றுக் கொண்டார். இதில் இருந்தே கடந்த (1999) ஜூலையில் இருந்து பேச்சுக்கள் பக்கமான திருப்பம் ஏற்பட்டது.

இந்த தலையீடு அமெரிக்காவின் ஆதரவு இந்தியாவுக்கு சார்பாக திரும்பியுள்ளதை எடுத்துக் காட்டியது. இது பாகிஸ்தானை ஆதரிக்கும் குளிர் யுத்தகால கொள்கையில் இருந்து மாறியதை குறித்தது. கடந்த ஆண்டு அக்டோபர் 12ம் திகதி கார்கில் ஊடுருவலின் மூல சிருஷ்டிக் கர்த்தாவான இராணுவ தளபதி முஷாராப் -ஷெரீப்பை பதவி நீக்கம் செய்ததில் இருந்து பாகிஸ்தான் மீதான அமெரிக்க நெருக்குவாரம் உச்சக் கட்டத்தை அடைந்தது. அமெரிக்கா பாகிஸ்தானை தளமாகக் கொண்டியங்கும் பல்வேறு முஸ்லீம் அடிப்படைவாத ஆயுதக் குழுக்களை- காஷ்மீர் பிரிவினைவாதிகள் உட்பட- கட்டுப்படுத்துமாறும் இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறும் முஷராப் ஆட்சியாளர்களைத் தூண்டியது. கிளின்டன் இந்தியத் துணைக்கண்ட விஜயத்தில் ஈடுபடுவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னதாக நியூ யோர்க்கை தளமாகக் கொண்ட ஒரு காஷ்மீர் ஆய்வு குழு (KSG- Kashmir Study Group) ஒரு அறிக்கையை வெளியிட்டது. பாருக், கத்வாரி போன்ற செல்வாக்கான அமெரிக்க, காஷ்மீர் வர்த்தகர்களின் தலைமையிலான இந்த கா.ஆ.கு. அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகளையும் மாஜி இராஜதந்திரிகளையும் கொண்டிருந்தது. இது இந்தியன் காஷ்மீர் மாநிலம் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட காஷ்மீர் பகுதியும் இரண்டு இறைமை கொண்ட பகுதிகளை அல்லது தமது பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரங்களில் சொந்த கட்டுப்பாட்டினைக் கொண்ட ஒரு தனி அரசாக ஒன்றிணைக்கப்பட வேண்டும் என பிரேரித்தது.

இந்த அமெரிக்க ஆரம்ப நடவடிக்கைகளை இடம் பெற்று வந்த அதே வேளையில் சிரேஷ்ட ஹிஸ்புல் தளபதிகள் இந்த ஆண்டின் தொடக்கத்தில் அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட காஷ்மீர்காரர்களை. இந்திய அரசாங்கத்திடம் யுத்த நிறுத்தக்கை உணர்ந்து அறிபவர்களாக அனுப்பி வைத்ததாக சொல்லப்படுகின்றது. இதற்கான பிரதிபலிப்பாக இந்திய பிரதமர் அலுவலகம் ஒரு இரகசிய பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் பொருட்டு ஹிஸ்புல் தலைவர்களை தளமாகக் கொண்டுள்ள பாகிஸ்தானுக்கு ஒரு மத்தியஸ்தரை அனுப்பி வைத்தது. ஏப்பிரலில் ஹிஸ்புல் தளபதி அப்துல் மஜித்தார் தனது கனிஷ்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபடுவதற்காக இராணுவ பிரிவுகளின் பாதுகாப்பு உத்தரவாதத்துடன் இந்தியாவின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள காஷ்மீருக்கு திரும்ப இந்தியா அனுமதித்தது.

வாஜ்பாய் அரசாங்கம் அனைத்துக் கட்சி மகாநாடு (APHC) அமைப்பின் பல தலைவர்களை ஏப்பிரலிலும் மேயிலும் சிறையில் இருந்து விடுதலை செய்ததோடு அரசியலமைப்புக்கு அமைவான பேச்சுவார்த்தைகளை நடாத்தவும் அழைப்பு விடுத்தது. இந்திய அரசாங்கத்தின் முன் நிபந்தனைகளை நிராகரித்த அதே சமயம் ஹுரியட் (Hurriyat) தலைவர்கள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் ஆயத்தத்தைக் காட்டிக் கொண்டனர். உத்தியோக பற்றற்ற பேச்சுக்களும் தொடர்புகளும் இடம் பெற்று வந்தன.

இதே காலப்பகுதியில் ஒரு கோஷ்டி அரசியல்வாதிகளும் அதிகாரிகளும்- இந்தியன் காஷ்மீர் மாநில தேசிய காங்கிரஸ் அரசாங்கத்தின் ஒரு கிளர்ச்சியாளர் உட்பட- மாஜி அமைச்சர் சைபுதீன் சோஸ், காஷ்மீர் விவகாரம் தொடர்பான இந்திய உள்நாட்டு அமைச்சின் ஒரு மாஜி அதிகாரியும் வாஷிங்டன் சென்றனர். அவர்கள் புறப்படுவதற்கு முன்னதாக காஷ்மீர் பிரிவினைவாதக் குழுக்களுடனும் சில தனியாட்களுடனும் ஒரு தொகை கலந்துரையாடல்களை நடாத்தியதாகச்

19ம் பக்கம் பார்க்க



காஷ்மீர் முதலமைச்சர் பாருக் அப்துல்லா, இந்தியப் பிரதமர் வாஜ்பாய் உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்

# குடியரசுக் கட்சி வேட்பாளர் ஜோர்ஜ்.டபிள்யு.புஷ்: முதன் முதலாக மக்கள் முன் தோன்றியுள்ளார்

பரிகிறே
ஆகஸ்ட் 8, 2000

ஜோர்ஜ்.டபிள்யூ.புஷ் குடியரசுக் கட்சி உச்சி மகாநாட்டுக்கு கவணினால் (கெட்டப்போல்) எய்யப்பட்டு, அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படும் ஒரு நல்ல வாய்ப்பினைக் கொண்டுள்ளார். அமெரிக்க அரசியலின் பாரம்பரிய அந்தஸ்துகளை நோக்குமிடத்து இது ஒரு குறிப்பிடத்தக்க அபிவிருத்தியாகும். அரசாங்க அதிகாரம் நிறைந்த எந்த ஒரு பதவிக்கும் பொறுக்கி எடுக்கப்படக் கூடிய ஒருவராக அதுவும் உலகில் ஒரு பெரிதும் சிக்கலானதும் சாத்தியமான ஸ்திரமின்மையும் கொண்ட நாட்டின் அரச தலைவராக அவரது சாதனைகள் எதுவும் அவரை காட்டிக்கொள்வதாக இல்லை.

இவர் முதல் நான்கு தசாப்தங்களிலான தனது வாழ்க்கையை எல்லா விதத்திலும் குறிக்கோள் இல்லாது செலவிட்ட ஒரு மனிதன் ஆவார். இவர் வியட்நாம் யுத்தத்தை எதிர்க்கவில்லை. ஆனால் பல வசதி வாய்ப்புக்கள் படைத்த இளைஞர்களைப் போல தனது குடும்ப உறவுகளைக் கொண்டு படைக்கு ஆள்திரட்டும் இந்த விதியை தவிர்த்துக் கொண்டவர். டெக்சாஸ் எண்ணெய்க் கைத்தொழிலில் ஏற்பட்ட பல தோல்விகளின் பின்னரும் காங்கிரசில் ஒரு ஆசனத்தை வெற்றி கொள்ளும் முயற்சி தோல்வி கண்டு போன பின்னரும் அவர் குடும்ப சகாக்களின் ஒரு முயற்சி காரணமாக ஒரு தொழில்சார் "பேஸ்போல்" (Baseball) விளையாட்டு கோஷ்டியின் ஒரு துணைச் சொந்தக்காரராகியதன் மூலம் ஒரு கோடீஸ்வரரானார்.

ஜோர்ஜ்.டபிள்யூ.புஷ் அரசியலில் இறங்கும் ஒரு பெரும் முயற்சியில் மீண்டும் ஈடுபட்டார். ஏனெனில் அவர் வாழ்க்கையில் வேறு எதைத்தான் செய்வது என அறியாது போனார். 1994ல் தனது பெற்றோர்களின் அறிவுரைக்கு மாறாக அவர் டெக்சாஸ் மாநில ஆளுனர் (Governer) பதவிக்கு போட்டியிட்டு, வெற்றி பெற்றார். தற்சமயம் 5 1/2 வருடகாலம் ஆளுனராகப் பதவி வகித்ததன் பின்னர் தேசிய அரசியலில் அடியோடு அனுபவமே இல்லாமலும் உலக விவகாரம் பற்றி குறைந்தளவு அறிவு தன்னும் இல்லாமலும் ஆங்கிலத்தைச் சரியாகப் பேசவோ எழுதவோ தெரியாமலும் அவர் வெள்ளை மாளிகை வாயிலில் நின்று கொண்டுள்ளார்.

இந்த உறவுகள் காரணமாகவும் குடியரசுக் கட்சியின் தலையிடாக் கொள்கைப் பரிகார்த்துக்கான சமூக நிலையத்துக்கு உகந்தவராகியுள்ள ஜோர்ஜ்.டபிள்யு.புஷ்சின் முதிர்ச்சி பருவத்தில் பெரும் பகுதி, அரசியலில் எந்த ஒரு சிறப்பான அக்கறையையும் காட்டிக் கொண்டது கிடையாது. அவர் நீண்ட அரசியல் உறவுகள் கொண்ட ஒரு குடும்பத்தில் வாழ்க்கையைக் கழித்துள்ளார். ஆனால் அவர் அந்த அனுபவத்தில் இருந்து எதையும் உள்ளீர்த்துக் கொண்டதற்கான அறிகுறிகள் தென்படுவதாக இல்லை.

அவர் ஏதேனும் படிப்பினைகளைப் பெற்றிருப்பாரானால் அவை சரியான உறவுகள், தொடர்புகள் மூலம் செல்வத்தையும் அதிகாரத்தையும் கொணர முடியும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயேயாகும். அவரின் வெற்றியின் அடிப்படை என்ன? சிலரின் கருத்துப்படி அவர் ஒரு நல்ல புன்னகையைக் கொண்டுள்ளார்; அவர் அதிகார வர்க்க வட்டாரங்களில் வசதியான முறையில் நடமாடக் கூடியவராக உள்ளார். அவர் டெக்சாஸ் மாநில ஆளுனராக இருந்த போது சமூக முரண்பாடுகளை எதிர் கொண்டது போல், அவை மோசடி சுலோகங்கள் மூலம் பூசி மெழுகப்பட முடியும் என்ற முடிவுக்கும் வந்தார்.

ஜோர்ஜ் புஷ்சின் குடியரசுக் கட்சி நியமனத்தின் பிரச்சாரத்தின் ஆரம்பக் கட்டத்தில் எங்கும் வியாபித்திருந்த அவரின் மோசடியான புன்னகை, சில பிரச்சினைகளை ஏற்படுத்தியதில் ஒரு முக்கியத்துவம் இருந்து கொண்டுள்ளது. ஒருவரின் வாழ்க்கைப் பயணத்தில் குணநலமும் உளவியலும் ஒருவரின் வெளிவாரி முகபாவனைகளில் தனது தடயத்தை பதித்துச் செல்வதுண்டு. மேலும் அவர் தான் ஆபத்தில் மாட்டிக் கொண்ட போது ஏனையவர்களைக் கொண்டு தன்னை பிணையில் விடுவிக்கச் செய்துள்ளார்.

வாசிக்கும் பழக்கம் இல்லாதவரும் எதுவிதமான புத்திஜீவி இரசனை இல்லாதவருமான ஜோர்ஜ்.டபிள்யூ.புஷ், அமெரிக்கன் சமுதாயத்தின் சுவையற்றதும் ஊழல்மிக்கதும், வேஷம் நிறைந்ததுமான அனைத்தையும் பளிச்சிட வைக்கும் கண்ணாடி.

புஷ்சை பெரும் அடி ஆழத்தில் இருந்து ஒரு சாதாரணமானவராக இனங்கண்டுள்ள ஒரே சாதனம் *உலக சோசலிச வலைத் தளம் (WSWS)* மட்டும் அன்று. நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை குடியரசுக் கட்சி வேட்பாளரைப் பற்றிய ஒரு குறிப்படத் தக்க சித்திரத்தில் கூறுவதாவது: "திரு.புஷ் ஏறக்குறைய ஒரு திடீர் வேட்பாளர். ஒரு அகம்பாவமும் மகிழ்ச்சியும் நிறைந்த பேர்வழி. தனது வாழ்க்கையில் பெரும் பகுதியை அலைந்து திரிந்து செலவிட்டவரும் 5 1/2 வருடங்களுக்கு முன்னர் அவர் முதலாவது அரசியல் பதவியை பொறுப்பேற்பதற்கு முன்னர் ஐக்கிய அமெரிக்க அரசுகளுக்கு பெரிதும் அறிமுகமற்ற பேர்வழியுமாக விளங்கினார். இருப்பினும் அவர் இப்போது தேர்தலில் முன்னணியில் நிற்பதோடு, தேர்தலில் வெற்றி பெறுமிடத்து கடந்த ஒரு நூற்றாண்டின் அரசாங்க சேவையில் இருந்த ஒல்லியான ஜனாதிபதிகளில் ஒருவராகவும் விளங்குவார்.

"திரு.புஷ்சின் விதிவிலக்கான நெழிவுசுழிவுகள், முரண்பாடுகளைக் கொண்ட தட்டினரால் சல்லடைப் போடப்பட்ட ஒத்தடம் ஆகவும் விளங்குவதைக் குறிக்கின்றது. இது அவரைக் குடியரசுக் கட்சியின் குருட்டுத் திகதியாக வருணிப்பதற்கு மேலதிகமானது. ஆனால் அவரது நம்பிக்கைகள், தலைமைப் பாணி- அவர் எந்த வகையறாவைச் சேர்ந்த தலைவராக விளங்குவார்- ஆகிய பெருமளவிலான விடயங்கள் இன்னமும் மூடு மந்திரமாகவே உள்ளன".

## அரசியல் ஈடுபாடற்றவர்

நூலாசிரியர்கள், தொழில்சார் முதலாளித்துவ பத்திரிகையாளர்கள் நாட்டின் ஒரு பதவிக்கு முக்கியமாக ஒரு அரசியல் ஈடுபாடு இல்லாத பேர்வழியில் தள்ளப்பட்டுள்ள முரண்பாடுகள் சம்பந்தமாகவே அடிக்கடி திரும்பத் தள்ளப்பட்டுள்ளனர். 1990களின் ஆரம்ப காலத்தில் ஜோர்ஜ்.டபிள்யூ.புஷ்சின் தகப்பனாரின் ஜனாதிபதி பேச்சாளராக விளங்கிய மார்லின் பிட்ஸ் வோட்டரின் பின்வரும் வருணனையை அவர்கள் மேற்கோளாகக் காட்டுகின்றனர்:

"ஜோர்ஜ்.டபிள்யூ ஏறக்குறைய அரசியலில் அல்லது கொள்கையில் ஒரு போதும் ஆர்வம் காட்டியதே கிடையாது. உண்மையில் நாம் கொள்கையைப் பற்றி எப்போதாவது பேசிக் கொண்டதாக எனக்கு ஞாபகம் இல்லை... ஜோர்ஜ்.டபிள்யூ. ஜனாதிபதி பதவியையும் குடும்பத்தையும் அந்த விதத்தில் அரசியல் சூன்யமாகவே அணுகி வந்தார். அவர் (டெக்சாஸ்) ஆளுனராக போட்டியிட்டதைக் கண்டு நான் அதிர்ச்சி அடைந்தேன்."

அந்தக் கட்டுரை மேலும் தொடர்ந்து கூறுவதாவது: "1978ல் அவர் காங்கிரசுக்கு போட்டியிட்டுத் தோல்வி கண்ட சமயம் நண்பர்கள், அவர் ஆழமான சித்தாந்த திடநம்பிக்கையினால் ஊக்குவிக்கப்படவில்லை. ஆனால் ஒரு காங்கிரஸ் அங்கத்தவராக இருப்பது குளிர்ச்சியானதாக விளங்கும் என நினைத்தனர்.

"வயது முதிர்ச்சி அடைந்த நிலையில் வெளிச்சத்துக்கு வரவும் உங்களின் ஜோக்குகளுக்கு பெரும் சிரிப்புகளைத் திரட்டவும் சிறந்த வழி, அரசியலில் வெற்றி காண்பதே. திரு.புஷ் அரசியல் நம்பிக்கைகள் இல்லாமலும், அதை அனுபவித்து ரசிப்பதாலும், அதில் வல்லவராக இருப்பதாலும் நோக்கி தள்ளப்பட்டார் போல் தெரிகின்றது."

இதைத் தொடர்ந்து இந்தப் புளிப்பான பார்வை வெளிப்படுகின்றது: "திரு.புஷ் விடாப்பிடியான முறையில் புத்திஜீவி எதிர்ப்பாளர். ஒரு அரசியல் தத்துவம் பற்றி சிந்தித்ததற்கான ஒரு அற்ப சொற்ப சாட்சியமும் கிடையாது. பல விவகாரங்களில் விசிறிக் கொள்கின்றார். நிறைவேற்றுக் குழு சுருக்க அறிக்கைகளை வாசிப்பதிலான பிரியத்தையிட்டு அடிக்கடி பகிடிவிடுகின்றார். நீண்ட அறிக்கைகளை தட்டிக்கொண்டே போகின்றார். இவை எல்லாம் அவர் சரியாக ஒரு வெறும் சிலேட் மட்டுமல்லாது, சார்பு ரீதியில் புரிந்து கொள்ள முடியாதவராகவும் இருக்கின்றார் என்பதைக் காட்டுகின்றது."

ஜோர்ஜ்.டிபிள்யூவின் சகோதரரும் புளோரிடா ஆளுனருமான ஜெப் புஷ் குடியரசுக் கட்சி மகாநாட்டில் ஒரு தொலைக்காட்சி சேவைக்கு பேட்டி அளிக்கையில், "ஒரு ஆண்டுக்கு முன்னர் எனது சகோதரன் குடியரசுக் கட்சி ஜனாதிபதி வேட்பாளராக வருவார் என நம்பவில்லை" எனத் தெரிவித்தார்.

ஜோர்ஜ்.டபிள்யூ.புஷ்சை அடையாளம் காணச் செய்யும் ஒரே விடயம் அவரது குடும்பப் பெயரே. அரசியல் பரம்பரை,



*ஜோர்ஜ்.டபிள்யுபுஷ்*

அமெரிக்க அரசியலில் ஒரு நீண்டகாலப் பாத்திரத்தை வகித்துள்ளது. அதற்கு தள்ளுபடி வழங்கும் இடத்தில் கூட இளைய புஷ் திடீரென பிரசித்தி பெற்றது, ஒரு அசாதாரணமான அபிவிருத்தியாகும். இன்றைய சூழலில் புஷ்சின் பெயர் ஜோர்ஜ்.டபிள்யூவை அரசியல் அரங்கில் பெரிதும் கிராக்கியான பண்டமாக்கியுள்ளது.

சந்தைப்படுத்தும் மூலோபாயம் "இரக்கமுள்ள பழமைவாதிகள்" என்ற சுலோகமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் புஷ்சின் வாழ்க்கை வரலாற்றில் ஒன்றில் கல்லூரிக் களியாட்டக்காரனாகவோ அல்லது டெக்சாஸ் வர்த்தகராகவோ அல்லது ஆளுனராகவோ எந்தவிதத்திலான இறக்கமும் இருந்ததாக குறிப்பிடுவதாய் இல்லை. நாம் நன்கு அறிந்தது போல் புஷ், டெக்சாஸ் மாநில மாளிகையில் இருந்த போது, 130க்கும் அதிகமான மரண தண்டனைகளுக்கு தலைமை தாங்கியுள்ளார். அவர் கூட்டுத்தாபனங்களுக்கும், செல்வந்தர்களுக்கும் வரிச்சலுகைகள் வழங்கி அனுதாபத்தைக் காட்டிக் கொண்டார். சூழல் பாதுகாப்பு விதிகளை தளர்த்தினார். ஆனால் ஏழைகளின் பரிதாப நிலையைப் போக்கும் எந்த ஒரு நடவடிக்கையையும் எதிர்த்தார். "இரக்கமுள்ள பழமைவாதம்", அவரின் சொந்த வலதுசாரிக் கொள்கைகளால் பாதிக்கப்பட்டவர்கள் அழுது வடிக்கும் கண்ணீரில் கொதித்துப் பறக்கின்றது.

இத்தகைய ஒரு அற்பத்தனமான பேர்வழி அமெரிக்கன் அரசியல் மையத்துக்காகத் துடிப்பது ஏன்? அவரது வேட்பாளர் அந்தஸ்த்து அமெரிக்காவில் உள்ள விவகாரங்களின் நிலைமையை அம்பலப்படுத்துவதும் என்ன? ஒரு மட்டத்தில் புஷ்சினது நன்கு நிர்ணயம் செய்யப்படாத அரசியல் முன்னோக்கு அவரை கம்பனி உரிமையாளர்களிடையே மிகவும் கவர்ச்சியான முன்னணி ஆளாகக் காட்டலாம். இவையே இவரது வேட்புரிமையை ஊக்குவிக்கின்றன. அத்தகைய மேலோட்டமான ஒரு மனிதனை மிகவும் சாதுரியமாகக் கையாள முடியும். ஆனால் மிகவும் அடிப்படையான மட்டத்தில் ஜோர்ஜ்.டபிள்யூ.புஷ்சின் எழுச்சியானது அமெரிக்கன் சமூகத்திலும் அரசியலிலும் உள்ள புறநிலைப் போக்குகளைப் பிரதிபலிக்க வேண்டும்.

அமெரிக்க வெள்ளை

17ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிஜி இராணுவத் தலைவர்கள் இனவாதிகளின் கோரிக்கைகளுக்கு சம்மதம் தெரிவித்துள்ளனர்

மைக் ஹெட்
ஜூலை 12, 2000

இராணுவச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டு ஒரு மாதத்துக்குப் பின்னர் பிஜி நாட்டின் இராணுவத் தளபதிகள் தமது நோக்கம், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதும் நாட்டின் அரசியலமைப்பு சட்டத்தை கடைப்பிடிப்பதும் மே 19 ம் திகதி ஜோர்ஜ் ஸ்பெயிட்டும் இராணுவத்தின் எதிரப்புரட்சி பிரிவின் அங்கத்தவர்களும் பாராளுமன்றத்தைக் கைப்பற்றியதனால் உருவான பணயக் கைதிகள் நெருக்கடியை முடிவுக்கு கொணர்வதுமே எனப் பிரகடனம் செய்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஸ்பெயிட்டின் சகல கோரிக்கைகளுக்கும் சம்மதம் தெரிவித்து ஆயுதப் படைகளின் தளபதி பிராங் பெயினிமாரமா கைச்சாத்திட்ட உடன்படிக்கை, ஆரம்பத்தில் இருந்தே இராணுவம் சதிப்புரட்சி முயற்சி தொடர்பாகப் பிளவுண்டு போனதையும் ஸ்பெயிட்டினதும் அவரின் குண்டர்களதும் இனவாத இந்திய எதிர்ப்புக் கோரிக்கைகளுக்கு அடிப்படையில் இணக்கம் தெரிவித்ததையும் எடுத்துக் காட்டுகின்றது. இதுகாலம் வரையும் இராணுவ உயர் மட்டப் புள்ளிகள் ஸ்பெயிட்டை அடியோடு எதிர்த்து வந்தனர். அவர்கள் பெரும் வர்த்தக நிறுவனங்களின் ஒரு பகுதியினரதும் பெரும் வல்லரசுகளதும் உக்கிரமான நெருக்குவாரங்களுக்குப் பதிலளிக்க நேரிட்டது.

இந்தத் திருப்பம் ஏற்பட்ட போதும் அனைத்துலக தனிமைப்படுத்தலும் பொருளாதார வீழ்ச்சியின் சாத்தியங்களும் பெயினிமாராமா ஜூலை 9ம் திகதி முனைக்கா (Munaikau Accord) உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல் இருப்பதை அசாத்தியமாக்கிவிட்டது. இந்த உடன்படிக்கையின் படி அவர் நாளை கூடவிருக்கும் படைத் தளபதிகளின் மாபெரும் சபையினால் (Great council of Chiefs) தெரிவு செய்யப்படும் ஒரு ஜனாதிபதியிடம் அதிகாரத்தைக் கையளிக்க இணங்கியுள்ளார். இச்சபை பதவியேற்றதும் அது கடந்த ஒரு வாரத்துக்கு முன்னதாக இடைக்கால பிரதமர் லைசேனியா குவாசினால் நிறுவப்பட்ட அரசாங்கத்தை இரத்துச் செய்யும்.

ஒரு சில வாரங்களுக்கு ஸ்பெயிட்டுக்கு விட்டுக் கொடுத்ததன் பின்னர் கடந்த வாரம் அவருடன் இடைக்கிடையே பேச்சுவார்த்தைகள் நடாத்திய இராணுவம் கடந்த வாரம் தனது சொந்த சிவிலியன் நிர்வாகத்தை அமைத்ததோடு பணயக் கைதிகள் நாடகத்தை முடிவுக்குக் கொண்டுவர ஸ்பெயிட்டுக்கு ஒரு காலக்கெடுவும் வழங்கியது. ஆனால் இராணுவம் பிளவுபட்டுப் போனமை உடனடியாகவே வெளிப்படையாகியது. ஒரு இராணுவப் படையாட்களின் வதிவிடத்தையும் ஆயுதக் களஞ்சியத்தையும் ஸ்பெயிட் ஆதரவாளர்களிடம் ஒப்படைத்துவிட்டு கனிஷ்ட படை அதிகாரிகளும் சில சிப்பாய்களும் படையில் இருந்து விலகிக் கொண்டனர். பெயினிமாராவும் அவரது ஆலோசகர்களும் பாராளுமன்றக் கட்டிடத்தைச் சூழ ஒரு தடைசெய்யப்பட்ட பிராந்தியத்தை அமைக்க உடனடியாக ஆதரவளித்தனர்.

ஸ்பெயிட்டினால் துண்டாடப்பட்ட பல்வேறு ஆயுதம் தாங்கிய கும்பல்களும் பாராளுமன்றக் கட்டிட குண்டர் கும்பல்களுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடத் தொடர்ந்து மறுத்துவந்த இராணுவத்தினால் ஊக்குவிக்கப்பட்ட நிலையில், நாட்டின் பல பகுதிகளை ஸ்தம்பிதம் அடையச் செய்தன. அவர்கள் ஒரு மின்சார நிலையத்தைக் கைப்பற்றியதோடு தலைநகர் சுவாவுக்கான மின்சார விநியோகத்தையும் துண்டித்தனர். ஒரு கிராமத்தில் பாய்ந்து விழுந்த அவர்கள் 30 இந்திய-பிஜி இனத்தவர்களை பணயக் கைதிகளாக பிடித்தனர். முக்கிய வீதிகளை தடை செய்ததோடு, பல இராணுவ, பொலிஸ் நிலையங்களையும் கைப்பற்றினர்.

இராணுவத் தளபதிகள் ஏறக்குறைய உடனடியாகவே ஸ்பெயிட்டின் அதிகாரத்தினுள் கொணரப்பட்டனர். உடன்படிக்கையின் கீழ் புதிய ஜனாதிபதி பெருமளவுக்கு ஸ்பெயிட்டினால் பொறுக்கியெடுக்கப்பட்ட வேட்பாளர் ரட்டு ஜோசேபா இலொயினா குறைந்த பட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு பிஜியை ஆட்சி செய்ய ஒரு அரசாங்கத்தை தெரிவு செய்வார். இந்த ஆட்சிப் பீடம் ஒரு சில குவாரேசின் வர்த்தகர்களைக் கொண்ட அமைச்சரவை, அதிகாரத்துவத்துடன் ஸ்பெயிட் குழுவின் அங்கத்தவர்களையே பெரிதும் கொண்டிருக்கும். அத்தோடு இராணுவம் ஏற்கனவே செல்லுபடியற்றதாக்கிய 1997ம் ஆண்டின் அரசியலமைப்புக்குப் பதிலாக ஒரு இனவாத அடிப்படையிலான புதிய பத்திரத்தை வரைவதற்கு ஜனாதிபதி ஒரு கமிட்டியை நியமனம் செய்வார்.

ஸ்பெயிட்டும் அவரின் சகாக்களும் அத்தோடு அவரின் ஆதரவாளர்களும் மே 19 -ஜலை 15க்கும் இடைப்பட்ட காலத்தில் இழைத்த சகல குற்றங்களுக்காக வழக்குத் தொடர்வதில் இருந்து விடுவிக்கப்படுவர். இந்தக் குற்றங்களுள் இந்திய- பிஜியன் வீடுகள், கிராமங்கள், பண்ணைகள், கடைகளில் தொடர்ந்து இடம் பெற்றுவரும் கொள்ளையடிப்புகளும் அடங்கும்.

## புதிய அரசியலமைப்பு

இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதன் பின்னர் ஸ்பெயிட் தான் "ஆச்சரியமும் பரவசமும்" அடைந்து போனதாக தெரிவித்தார். இது "பிஜி மக்களுக்கு ஒரு மாபெரும் நாள்" என அவர் கூறிக் கொண்டார். இப்போது ஒவ்வொருவரினதும் அசல் கோரிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. பிரதமர் மகேந்திர சௌத்ரியின் தொழிற்கட்சி தலைமையிலான கூட்டரசாங்கம் பதவி நீக்கம் செய்யப்பட்டதோடு ஒரு கம்பளியால் மூடிமறைக்கப்பட்ட மன்னிப்பு வழங்கப்பட்டது. ஸ்பெயிட்டின் சதிகார அங்கத்தவர்கள் பதவிகளில் அமர்த்தப்படுவர். இந்தோ- பிஜியன்களை- சனத்தொகையில் 44 சதவீதத்தினர்- உயர் பதவிகளில் இருந்து நீக்கும் பொருட்டு ஒரு புதிய அரசியலமைப்புச் சட்டம் வரையப்படும்.

ஸ்பெயிட் படைத் தளபதிகளை சந்திப்பதற்கு முன்னதாக சௌத்ரியையும் மற்றும் 26 அரசாங்க பணயக் கைதிகளையும் வியாழக்கிழமை காலை விடுதலை செய்யப் போவதாக கூறியிருந்தார். ஆனால் வெற்றி கிட்டியதும் இதை அமுல் செய்வதை சந்தேகத்துக்கு இடமாக்கினார். நேற்றைய தினம் அவர் பணயக் கைதிகள், கூட்டத்துக்கு (படைத் தளபதிகள்) முன்னர் விடுதலை செய்யப்படாது போகலாம் எனப் பிரகடனம் செய்தார். புதன்கிழமை அதிகாலை 9 பணயக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். இன்னமும் 18 பேர் பாராளுமன்றக் கட்டிடத்தின் உள்ளே துப்பாக்கி முனையில் சிறை வைக்கப்பட்டு உள்ளனர்.

ஸ்பெயிட்டினாலும் அவரது கையாட்களாலும் தூண்டிவிடப்பட்ட பல்வேறு போக்குகளையும் இந்த உடன்படிக்கை மேலும் கிண்டிவிட்டுக் கொண்டுள்ளது. இது கைச்சாத்திடப்பட்டதில் இருந்து குண்டர் கும்பல்கள் கட்டிடங்களுக்கு தீவைத்தன; கடைகளைக் கொள்ளையடித்தன; மீன்களை தகரத்தில் அடைக்கும் பக்டரியை கைப்பற்றின; ஒரு பொலிஸ் நிலையத்தை கைப்பற்றியதோடு நாடி (NADI) யில் உள்ள சர்வதேச விமான நிலையத்தைக் கைப்பற்றப் போவதாகவும் பயமுறுத்தின. தொலைத் தொடர்பு அதிகாரிகள், இந்தியன் முகாமையாளர்களை வேலைநீக்கம் செய்யும்படி கோரி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். பிஜி தீவு மக்கள் ஒரு சிறிய விமான தரிப்பிடத்தையும் ஒரு உல்லாசப்பயணிகள் உறைவிடத்தையும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளனர். சிறைக் கைதிகள் நபோரோவில் உள்ள அதிபாதுகாப்பு சிறையை உடைக்க முயன்றுள்ளனர். தமது நிலத்தில் ஒரு அணைக்கட்டு கட்டுவதற்கு நஷ்டஈடு கோரி கிராமவாசிகள் ஒரு ஹைட்ரோ மின்சார நிலையத்தைக் கைப்பற்றியதோடு அங்கிருந்து வெளியேறவும் மறுத்துவிட்டனர்.

பிஜி நாட்டின் ஆளும் பிரமுகர்களில் ஒரு பகுதியினர்- படைத்தளபதிகளின் மாபெரும் சபை (GCC) யின் சிரேஷ்ட அங்கத்தவர்கள் உட்பட- இத்தகைய ஒரு இயக்கமானது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாக சுற்றிச் சுழன்று, பல்வேறு குழுக்களும் தமது சொந்தக் கோரிக்கைகளை முன்வைப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாக்கிக் கொள்ளுமோ என அஞ்சுகின்றனர். ஸ்பெயிட்டின் ஆதரவாளர்களில் பலரும் அதிருப்தி கண்ட கிராமவாசிகளாகவும், வேலையற்ற இளைஞர்களாகவும் உள்ளனர். தற்போதைக்கு ஸ்பெயிட் அணிதிரட்டிக் கொண்டுள்ள வர்த்தக நிறுவனங்களின் சொந்தக்காரர்களும் கனிஷ்ட நிலவுடமையாளர்களும் இந்த விரக்திகளை இந்திய எதிர்ப்பு இனவாதமாகவும் தொழிலாளர் வர்க்கத்தையும் ஏழைகளையும் பிளவுபடுத்தும் திசையிலும் வழிப்படுத்திக் கொண்டுள்ளனர். ஆனால் இது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் உட்பட்ட ஏனைய வர்த்தக நலன்களையும் ஊடறுத்துச் செல்ல வாய்ப்புண்டு.

படைத் தளபதிகளின் மாபெரும் சபையின் (GCC) நாளைய கூட்டத்திற்கு முன்னதாக ஸ்பெயிட் கனிஷ்ட படைத் தலைவர்களின் ஒரு கூட்டத்தைக் கூட்டியுள்ளார். தனது நிலைப்பாட்டுக்கு மேலும் ஆதரவு திரட்டவே அவர் இதைச் செய்துள்ளார். படைத் தளபதிகளின் மாபெரும் சபையின் தலைவராக 1987 இராணுவ சதிப் புரட்சித் தலைவர் சிட்டிவேணி ரபுக்கா விளங்குகின்றார். இவர் சமீப நாட்களாக தம்மை ஸ்பெயிட்டின் முகாமில் இருந்து அன்னியப்படுத்திக் கொண்டுள்ளார். ரபுக்கா படைத் தளபதிகளின் மாபெரும் சபை ஸ்பெயிட்டினால் தெரிவு செய்யப்பட்ட ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றக் கட்டிடத்தில் அல்லாது குயின் விக்டோறியா இராணுவ 'பராக்'க்கில் கூட வேண்டும் என வலியுறுத்தினார். இந்தக் கூட்டத்தில் மாஜி- பிரதமர் ரட்டு கமிசேச மாராவும் கலந்து கொள்வார். இவர் ஜனாதிபதி பதவியில் இருந்து வழக்காறான முறையில் இராஜினாமாச் செய்ததோடு இவருக்கு பெரும் வர்த்தக நலன்களும் இருந்து கொண்டுள்ளன.

வெளிநாட்டு மூலதனத்தைத் தருவிப்பதை வாபஸ் பெற்றதனாலும் உல்லாசப் பயணத் துறையின் சரிவினாலும் வியாபாரமும் வர்த்தகமும் பரந்த அளவில் பாதிக்கப்பட்டதனாலும் கடந்த வாரம் பிஜியின் முதலாளிகள் சம்மேளனமும், பிஜி 'சேம்பர் ஒப் கொமர்சும்' (Chamber of Commerce) பிஜி- அவுஸ்திரேலியா வர்த்தக சபையும் பிஜி தொழிற்சங்க காங்கிரசுடன் (FTUC) சேர்ந்து 1997 அரசியலமைப்புச் சட்டத்தை புனர்நிர்மாணம் செய்யும்படி கோரின.

இந்த கூட்டின் ஒரு பாகமாக எப்.ரீ.யூ.சி. தலைவர்கள் சீனி அறுவடையை பகிஷ்கரிப்பதை கைவிடவும் வர்த்தகத் தடைகளை நீக்குமாறும் வெளிநாட்டு தொழிற்சங்கங்களை கோரவும் இணங்கியுள்ளனர். ஆரம்பத்திலே ஸ்பெயிட்டின் சதிப்புரட்சி தொடர்பான தொழில்கொள்வோரினதும் தொழிற்சங்க அதிகாரத்துவங்களினதும் பொதுவான அக்கறையானது ஸ்திரமற்ற நிலைமையை கட்டுப்படுத்துவதாகவும் ஒழுங்கு நிலைமையை மீண்டும் ஏற்படுத்துவதாகவும் விளங்கியது. இதன் மூலம் சீனி, ஆடையுற்பத்தி, உல்லாசப் பயணம், சுரங்க கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள முதலாளிகள் இலாபம் தரக்கூடிய நடவடிக்கைகளில் மீண்டும் ஈடுபட முடியும்.



ஜோர்ஜ் ஸ்பெயிட்

## தொழிற்சங்க அடிபணிவு

பதவிநீக்கம் செய்யப்பட்ட தொழிற் கட்சி தலைமையிலான கூட்டரசாங்கத்தில் உள்ள தமது சகாக்களுடன் சேர்ந்து எப்.ரீ.யூ.சி. அதிகாரிகள் ஸ்பெயிட் இன்றைய கட்டத்துக்கு நின்று பிடிக்கும் வல்லமையை வழங்கியதற்கான முதல் அரசியல் பொறுப்பாளிகள் ஆவார். இத்தொழிற்சங்கத் தலைவர்கள், இனக்குழு அடிப்படையில் இனவாதிகளுக்கு எதிராக தொழிலாளர் வர்க்கத்தை எந்தவிதத்திலும் அணிதிரட்ட எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இராணுவம் இறுதியாக ஸ்பெயிட்டுக்கு இணங்கிப் போனதற்கு பின்னரும் கூட எந்த ஒரு வேலை நிறுத்தத்துக்கோ அல்லது ஆர்ப்பாட்டத்துக்கோ அழைப்புவிடாதது இதற்கு நல்ல உதாரணமாகும்.

இருப்பினும் ஸ்பெயிட்டின் சதிப்புரட்சிக்கு சுதேச பிஜி வாசிகள் இந்தோ- பிஜிவாசிகளிடையே ஒரே மாதிரியான பரந்த எதிர்ப்புக்கான அடையாளங்கள் இருந்து கொண்டுள்ளன. கடந்த வார இறுதியில் சுவாவில் உள்ள கிளர்ச்சிப் படைகளின் வீதித் தடைகளில் நிறுத்தப்பட்ட கார் சாரதிகளிடம் பிஜியில் உள்ள 'இன்டர் நெட் நியூஸ் சேவை' யினால் நடாத்தப்பட்ட பேட்டிகளில் இதை நோட்டம் விடக் கூடியதாக இருந்தது. ஒரு சாரதி கூறியதாவது: "நான் ஒரு பிஜியன். இவர்கள் போராடுவது இந்த இலட்சணத்திலான உரிமைகளுக்கு தானா? சுதேசிகளின் உரிமைகளுக்கு போராடுபவர்களாகக் கூறிக் கொள்ளும் இவர்கள் எனது குடும்பத்தை பராமரிப்பார்களா?" இந்தச் சாரதி தான் 1987 லும் இதே மாதிரியான கோசங்களைக் கேட்டுள்ளதாகக் கூறியதோடு சதிப்புரட்சித் தலைவர்கள் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மறந்து விட்டு, தமது சொந்த 'பொக்கட்டுகளை' (Pocket) நிரப்பிக் கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

ஜூலை 4ம் திகதி பதவி நீக்கம் செய்யப்பட்ட சௌத்ரியின் பொதுஜன கூட்டரசாங்கத்தின் பதில் தலைவர்கள் இராணுவச் சட்ட ஆட்சியாளர் தொடர்பான தமது முன்னைய நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள முயன்றது தெரிந்தது. "ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட ஒரு அரசாங்கத்தை சட்டவிரோதமாக பதவி நீக்கம் செய்ததில் இராணுவம் "முற்றிலும் தவறாக நடந்து கொண்டுள்ளது" என்ற ஒரு அறிக்கையுடன் அவர்கள் குவாரசேயின் அமைச்சர் அவையின் நியமனத்தை இளக்கரமானதாக கருதினர். பத்திரிகை அறிக்கைகள் அடிமட்டத்தில் இருந்து முழு சதிப் புரட்சியையும் நிராகரிக்கும்படி கோரும் நெருக்குவாரத்தின் வளர்ச்சியை தெளிவாக பிரதிபலித்தன.

எவ்வாறெனினும் இந்த வார்த்தை ஜாலங்களில் ஈடுபட்ட அதே வேளையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி–8 உச்சிமாநாடு கூடும்போது கடன் குரல்வளை நெரிப்பு இறுக்கமாகின்றது

நிக் பீம்ஸ்
ஜூலை 22, 2000

1999ல் ஜேர்மனியின் கொலோன் (cologne) நகரில் ஏழு முக்கிய முதலாளித்துவ நாடுகளும் ரஷ்யாவும் ஜி-8 உச்சி மகாநாட்டில் சந்தித்த பின்னர் உலகிலுள்ள வறிய நாடுகளின் குரல்வளையை சுற்றியுள்ள கடன்பிடி தளர்ந்துவிடுமென கூறும் அறிக்கைகளால் வானம் நிரம்பியிருந்தது.

வறிய நாடுகளுக்கான 100 பில்லியன் டாலர் கடனை வெட்ட முன்வந்துள்ளமை "உலகின் வறியநாடுகள் வளர்ச்சி பெறவும், சுதந்திரம் அடையவுமான உதவியில் ஒரு வரலாற்றுப் படி என" அமெரிக்க ஜனாதிபதி அறிவித்தார். பிரித்தானிய பிரதமர் தனது பாணியான போலித்தனத்துடன் "இது பாரிய முன்னோக்கிய அடி எனவும், ஆரம்ப கடனான பில்லியன் கணக்கான டாலர்களை நாங்கள் இரத்து செய்யவுள்ளோம். இம்மாநாடு நாங்கள் பல வருட காலம் எதிர் நோக்கிய கடன் தொடர்பாக பாரிய முன்னேற்றத்தை குறிக்கும்" எனவும் தெரிவித்தார்.

1999ல் ஜேர்மனின் கொலோன் நகரத்திலும், 1998ல் இங்கிலாந்தின் பேர்மிங்ஹாம் (Birmingham) நகரத்திலும் ஆயிரக் கணக்கில் கூடிய கடன்-எதிர்ப்பு ஆர்ப்பாட்டக் குழுக்களும் கூட இவ்வுடன்பாடு ஒரு முன்னோக்கிய படியென்ற கருத்தை முன்வைத்தன.

ஒரு வருடத்தின் பின்னர் தென் ஜப்பானிய தீவான ஒக்கினோவாவில் (Okinawa) ஜி-8 ன் தலைவர்கள் 2000 உச்சி மாநாட்டிற்காக கூடியபோது கொலோன் உச்சிமாநாட்டில் கூறப்பட்ட கருத்துக்கள் இலட்சோப இலட்சம் மக்களை நோய்களாலும் வறுமையாலும் இளம் வயதில் பலிகொள்ளும் கடன் சுமைக்கு மற்றொரு நல்ல கசப்பான உதாரணமாகும்.

கடன் நிவாரணம் வழங்க உறுதி கூறிய 40 நாடுகளில் 10 நாடுகள் மட்டுமே உண்மையாக கடன்களை குறைக்கும் திட்டத்தில் ஈடுபட்டதுடன், ஒரு நாடு மட்டுமே கடன்களை இரத்துச் செய்தது.

2000 ஜூபிலி (Jubilee) ஸ்தாபகரான ஆன் பெட்டிபோரின் (Anne Pettifor) கருத்தின்படி பெரிதும் கடனாளியான வறிய நாடுகள் திட்டத்தின்படி (HIPC) உலக வங்கியாலும் சர்வதேச நாணய நிதியத்தாலும் வழங்கப்பட்ட நிவாரணம் ஏற்றுக்கொள்ள முடியாத நிபந்தனைகளை கொண்டுள்ளது.

"முழு நோக்கமும் இவ்வகை அடிமைத்தனத்தையும், நவீன-காலனித்துவத்தையும் இல்லாதொழிப்பதாக இருக்கையில் சர்வதேச நாணய நிதியம் இதற்கு மாறாக இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி' இந்நாடுகளின்

பொருளாதாரத்தின் மீது தனது கட்டுப்பாட்டை திணிக்க முயல்கின்றது என" அவர் மேலும் தெரிவித்தார்.

ஒக்ஸ்பாம் இன்டர்நஷனல் (Oxfam International) பேச்சாளரான பில் ரைபோட் (Phil Twyford) இக்கடனுதவி "உறைநிலையை அடைந்துள்ளதாகவும்" கொலோன் உச்சி மாநாட்டில் வழங்கப்பட்ட "வரலாற்று வாக்குறுதிகள்" அனைத்தும் "காற்றில் பறந்து போய்விட்டதாகவும்" தெரிவித்துள்ளார்.

ஜூபிலி 2000 த்தினால் தயார் செய்யப்பட்ட புள்ளிவிபரங்கள் கடன் நிவாரணங்களை தாம் பெறும் போதும் கூட இதுவரை இத்திட்டத்தில் சேர்ந்து கொண்டுள்ள 10 நாடுகள் சுகாதார நலன்களின் பேரில் செலவிடுவதைக் காட்டிலும் கடன் சேவைக் கட்டணங்களாக வங்கிகளுக்கும் அனைத்துலக நிதி நிறுவனங்களுக்கும் 1/3 பங்கு கூடுதலாக செலவிட வேண்டியுள்ளதாகக் காட்டியுள்ளது. கொலோனில் தருவதாக வாக்களிக்கப்பட்ட 100 பில்லியன் டாலர்களில் 5 பில்லியன் டாலர்கள் மட்டுமே இவ்வாண்டின் இறுதிவரை வழங்கப்படும். 2005ம் ஆண்டில் அல்லது சிலவேளை அதற்கு பின்னர் இந்த மொத்த தொகை 40 பில்லியன்களை எட்டும். 10 பில்லியன் ஒரு போதும் இரத்துச் செய்யப்படமாட்டாது.

தற்போது இக்கடன் மேலும் குரல்வளையை நெரிக்கத் தொடங்கியுள்ளது. வறிய நாடுகளிலிருந்து சர்வதேச வங்கிகளுக்கும், நிதி நிறுவனங்களுக்கும் தினமும் 60 மில்லியன் டொலர் மாற்றப்படுவதாக கணிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான சமூகச் செலவீனம் கணிப்பிட முடியாதது. உதாரணமாக சுகாதார சேவைகளுக்கும், கல்விச் சேவைகளுக்கும், சுத்தமான குடிநீருக்கும் செலவிடுவதற்கு பதிலாக வெளிநாட்டு கடன் வழங்குபவர்களுக்கு பணம் செலுத்தப்படுவதால் நாளாந்தம் 19,000 குழந்தைகள் இறக்கின்றன.

பல வறிய நாடுகளுக்குள் பெரிதும் கடனாளியான நாடுகள் திட்டத்தின் (பெ.க.நா.தி) நிபந்தனைகளை நிறைவேற்றமுடியாது போனதால் பல வறிய நாடுகள் எந்தவொரு உதவியும் வழங்கப்படவில்லை. உதாரணமாக தலா வருமானம் 300 டொலருக்கு குறைவாகவுள்ளபோதும், வருடாந்த ஏற்றுமதிக்கும் கடனுக்குமான விகிதாசாரம் 250 வீதத்துக்கும் அதிகமாக இருக்கின்றபோதும் நைஜீரியாவுக்கு எந்தவொரு உதவியும் வழங்கப்படாதுள்ளது. இதேபோல் லத்தீன் அமெரிக்காவின் வறிய நாடான ஹைட்டியில் இதேபோல் கடனுக்கும் ஏற்றுமதிக்குமான வீதாசாரம் 171 விகிதமாக இருந்த போதும் கடனுதவி மறுக்கப்பட்டுள்ளது.

வரவுசெலவு திட்டத்தின் மீதான வெட்டுக்கள் மூலமாகவும், "மறுசீரமைப்பு திட்டங்களாலும்" இந்நிபந்தனைகளை அடையமுயலும் நாடுகளுக்கு கூட எவ்வித முன்னேற்றம் அல்லது சிறியளவு முன்னேற்றமும் இல்லை. உண்மையில் தன்சானியா காட்டிக் கொண்டுள்ளது போல் அவற்றின் நிலைமை இன்னும் மோசமடையும்.

அங்கு கடந்த மே மாதம் தனது மொத்த வருமானத்தில் 27% க்கு மேலாக [இது 1 பில்லியன் டொலருக்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது] வெளிநாட்டு கடன்களுக்காக செலுத்தப்படும். நடப்பு வருடத்தில் இது பெரும் கடனாளியான நாடுகள் திட்டத்தினுள் நுழைவதற்கு முன்னர் இருந்ததை விட அதிகமானதுடன், இவ்வருடத்தில் 290பில்லியன் டொலர் செலுத்தவேண்டியுள்ளது.

ஆபிரிக்க நாடுகள் மொத்தத்தில் வெளிநாட்டுக் கடனுக்காக தமது வருமானத்தில் 2/5 பகுதியை செலுத்த வேண்டியுள்ளதுடன் நிலைமை இன்னும் மோசமடைகின்றது.

1990ம் ஆண்டு தசாப்தத்தில் அவர்கள் 105 பில்லியன் டொலரினை முக்கிய முதலாளித்துவ கடன் வழங்கும் நாடுகளுக்கு கடன் கொடுப்பனவாக செலுத்தியுள்ளன. இதனையும் விட நிலுவையிலுள்ள கடனின் அளவு 1998ல் 230 பில்லியன் டொலராக அதிகரித்துள்ளது. 1988ல் இருந்து கடனின் 65% ஆன அதிகரிப்பானது புதிதாக பெற்ற கடன்களால் அல்லாது முன்னர் பெற்ற முதலுக்கான வட்டியையும், நிலுவைகளையும் உள்ளடக்கியுள்ளது. 1980 க்கும் 1997 க்கும் இடையே வருடாந்தம் பெ.க.நா.தி.கடன் 7.4% அதிகரித்ததோடு அந்நாடுகளின் மொத்த தேசிய உற்பத்தி வருடாந்தம் 1.1% ஆல் மட்டுமே அதிகரித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித அபிவிருத்தி திட்டத்தின்படி ஆபிரிக்க நாடுகளால் கடனுக்காக செலவளிக்கப்பட்ட பணத்தின் மூலம் ஆண்டுதோறும் 7 மில்லியன் குழந்தைகளின் உயிர்களை காப்பாற்றியிருக்கலாம். இதன் கருத்து என்னவெனில் இதன் மூலமாக இவ்வருடத்தில் இன்றுவரை மட்டும் 3 மில்லியனுக்கும் அதிகமான குழந்தைகள் இறந்துள்ளன.

இவ்வருட உச்சி மாநாடும் வறுமையை முடிவிற்கு கொண்டுவரும் தேவைக்கான வழமையான வார்த்தைஜாலங்களுடன் இணைந்துள்ளது. உலக வங்கித் தலைவரான ஜேம்ஸ் வூல்பென்சன் (James Wolfenson) "வழமையான நடைமுறை" பாணி அணுகுமுறைக்கு இயைந்து போக வேண்டாம் எனக் கோரி ஜி-8 தலைவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.அவர் மேலும்" இந்த உலகத்தில் பணம் படைத்தோர் மேலும் பணக்காரர் ஆவதும் வறிய நாடுகள்கைவிடப்படுவதும் பாதுகாப்பும் ஸ்திரத்தன்மையும் கொண்டதாக இருக்காது. மேலும் கடன் சுமையை இலகுவாக்கும் "விரைவானதும் ஈய்ந்து போகக் கூடியதுமான" முறைகளுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

ஒக்கினாவாவுக்கு (Okinawa) வரமுன்னர் விடுத்த அறிக்கையில் கிளின்டன் "இந்த உச்சி மகாநாடு கடந்த வருடத்தின் ஆரம்பிப்பின் அடித்தளத்தில் கட்டப்படும் எனவும், தொற்று நோய்களுக்கு எதிரான போராட்டமும் கல்வியறிவுக்கான வசதிகளை பெருக்குதலும் தகவல் தொழில்நுட்பத்தின் ஊடாக சந்தர்ப்பங்களை அதிகரிக்கவும் ஒரு கட்டமைப்பு உருவாக்கப்படும் எனவும்" கூறியுள்ளார்.

நைஜீரிய ஜனாதிபதியான ஒலுசேகுன் ஒபசஞ்சோ (Olusegun Obasanjo) பத்திரிகையாளர் மாநாட்டில் "நாங்கள் என்ன செய்யவேண்டும் என்பது தொடர்ந்தும் ஒரு பிரச்சினையல்ல. நாம் எல்லோரும் என்ன செய்ய வேண்டும் என்பது எமக்கு தெரியும். கேள்வி என்னவெனில் எமக்கு அரசியல் நோக்கம் இருக்கின்றதா என்பதுதான்" எனக் கூறியுள்ளார்.

கடந்த வாரம் பிரான்ஸ் ஜனாதிபதி சிராக் வறிய நாடுகளுக்கு கிடைக்கும் மருத்துவ வசதியின் அளவை அதிகரிக்க ஜி-8 அங்கத்தவர்களுக்கு அழைப்பு விடப்போவதாக தெரிவித்தார்.

ஆனால் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. வியாழக்கிழமை ஜி-7 தலைவர்களுக்கும் ஜி-7 குழு நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் இடையேயான டோக்கியோ மாநாட்டில் கிளின்டனுக்கு பதிலாக கலந்துகொண்ட அமெரிக்க திறைசேரி செயலாளரான லோரன்ஸ் சமர்ஸ் (Lawrence Summers) வறிய நாடுகளுடன் இணைந்து இயங்கும் பல தரப்பட்ட விடயங்கள் குறித்து மாநாடு இறுதிமுடிவு எடுக்குமென கூறினார். ஆனால் மேலதிகமாக கருத்து எதையும் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

கனடிய பிரதமரான ஜீன் செர்டின் (Jean Chretin) யப்பானிய பிரதமரான யொசிறோ மோரியை (Yoshiro Mori) சந்தித்த பின்னர் உலக வங்கியாலும் சர்வதேச நாணய நிதியத்தாலும் திணிக்கப்படும் முடமாக்கும் நிபந்தனைகளை பாதுகாத்தார். அவர் "அவர்கள் ஆயுதம் வாங்கவும், நட்சத்திர யுத்தத்தை தொடங்கவும் நாங்கள் கடன் நிவாரணம் வழங்கப் போவதில்லை" என தெரிவித்தார்.

இறுதி அறிக்கையில் வறுமைக்கு முடிவுகட்டும் சில வார்த்தைகளும், கடன் நிவாரணம் பற்றிய வாக்குறுதிகளும் இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அவை இதற்கு முந்திய வாக்குறுதிகள் போல் வெறுமையானவை என்பதை நிரூபிக்கும். இதே வேளை உலக முதலாளித்துவத்தின் நிதி நிறுவனங்கள் உலகின் வறிய நாட்டு மக்களின் இரத்தத்தை உறிஞ்சும் "வழமையான நடைமுறையை" தொடரும்.

---

இந்த அறிக்கை கூட்டரசாங்கத்தின் முன்னைய கோரிக்கையான செளத்ரி அரசாங்கத்தை மீண்டும் பதவியில் அமர்த்தும் படி கோருவதையும் கூட பெரிதும் கைநழுவவிட்டது. அதற்குப் பதிலாக இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் உள்ள சகல அரசியல் கட்சிகளது அங்கத்தவர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் ஒரு இடைக்கால நிர்வாகத்தை நியமனம் செய்வதை இராணுவம் கணக்கிலெடுக்க வேண்டும் எனக் கோரியது. இது முதலீட்டாளர்களின் அபிலாசைகளைத் திணிக்கும் விதத்தில் முழு இராணுவ-வர்த்தக பிரமுகர்களின் ஆதரவு கொண்ட தேசிய ஐக்கிய அரசாங்கத்தை அமைப்பதற்கு சமமானதாகும்.

ஜூலை 7ம் திகதி இதே கூட்டரசாங்கத்தைச் சேர்ந்த தலைவர்கள்- கல்வி அமைச்சரான பிரதாப் சந்தும் பிஜியன் அசோசியேசனின் பதில் தலைவர் இசிமாலி கொகனசிகாவும்- மற்றுமொரு அறிக்கையை வெளியிட்டனர். "நாட்டில் சிவில் குழப்பங்களும் அராஜகமும் ஏற்படுவதற்கான பெரிதும் நிஜ சாத்தியத்தை" தவிர்க்கும்படி இராணுவத்திடம் மன்றாடும் விதத்தில் இந்த அறிக்கை அமைந்திருந்தது. பணயக்கைதிகள் நெருக்கடியைத் தீர்த்து வைப்பதற்கான தொழில்சார் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுமாறு ஐக்கிய நாடுகள் சபையை அல்லது பிரித்தானிய பொதுநலவாயத்தை இது வேண்டுவதாக விளங்கியது.

ஐக்கிய நாடுகள் சபையினதோ அல்லது பொதுநலவாயத்தினதோ எந்த ஒரு தலையீட்டினதும் நோக்கம் பிஜி நாட்டின் தொழிலாளர்கள், கிராமவாசிகள், ஏழைகளது ஜனநாயக உரிமைகளைக் காப்பது அல்ல. இது தென் மேற்கு பசுபிக் பிராந்தியத்தில் மேலாதிக்கம் கொண்டுள்ள அவுஸ்திரேலியா போன்ற மேற்கத்தைய நாடுகளதும் பூகோளரீதியான நிதி அமைப்புக்களதும் பன்நாட்டுக் கம்பனிகளதும் நலன்களை அமுல் செய்வதாக இருக்கும். உள்ளூர் செயற்பாட்டாளர்களாக விளங்கும் ஸ்பெயிட்டினதும் அவரது [illegible] நோக்கம், பொருளாதாரத்தின் சில துறைகளை கட்டுப்பாட்டுக்குள் கொணர்வதாக விளங்கும் வரை இந்த நலன்கள் ஓரளவுக்கு இனவாத கைப்பற்றல்களின் மூலம் சவால் செய்யப்பட்டுள்ளது.

எனவேதான் அமெரிக்க கிளின்டன் ஆட்சியாளர்கள் ஸ்பெயிட் முகாமின் கோரிக்கைகளுக்கு இராணுவம் உடன்பட்டு போவதையிட்டு கவலை தெரிவித்துள்ளது. கடந்த வாரம் குவாசி அமைச்சரவையை இராணுவம் நியமனம் செய்ததைத் தொடர்ந்து அமெரிக்கா தனது தூதுவரான ஓஸ்மான் சித்தீக்கை ஆலோசனைக்காக பிஜியில் இருந்து திருப்பியழைத்ததன் மூலம் இது வெளிப்பாடாகியது. ஓஸ்மான் சித்தீக் புறப்பட்டதும் அமெரிக்க தூதரகம், பிஜியில் "பாரதூரமான தாக்கங்களை" உருவாக்கும் நடவடிக்கைகளை எடுப்பதையிட்டு வாஷிங்டன் ஆராய்ந்து வருவதாக எச்சரிக்கை செய்தது.

கன்பராவில் உள்ள அவுஸ்திரேலிய ஹவார்ட் அரசாங்கம் அந்தப் பிராந்தியத்தில் தொடர்ந்தும் தனது மேலாதிக்கத்தை கொண்டிருக்கும் விதத்தில் சற்று மாறுபட்ட அணுகுமுறையைக் கடைப்பிடித்துள்ளது. அது இராணுவம் ஸ்பெயிட்டுடன் கொண்டுள்ள உறவுகளை ஒரேயடியாகக் கண்டனம் செய்ய மறுப்புத் தெரிவித்து விட்டது. வெளிநாட்டு அமைச்சர் அலெக்சாண்டர் டோவ்னர் உடன்படிக்கை வரவேற்கப்படுவதாக தெரிவித்தார். அது பணயக் கைதிகளை விடுதலை செய்வதற்கான வழிவகைகளை வழங்குவதாக அவர் தெரிவித்துள்ளார். இது 1987ல் ஹொவ்க் அரசாங்கம் கடைப்பிடித்த விதிமுறைகளுக்கு பெரிதும் சமமானது. அன்று ரபுக்காவின் இராணுவச் சதிக்கு வாயளவிலான எதிர்ப்பு தெரிவிப்பதை அது உடனடியாக கைவிட்டதோடு அவுஸ்திரேலியாவின் மலிவு உழைப்புக்கான முதலீடுகளுக்கு பொருளாதாரத்தை திறந்து விடும் விதத்தில் ரபுக்காவுடன் ஒன்றுபட்டுச் செயற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்க்சிச அனைத்துலகவாதம் எதிர் தீவிரவாத எதிர்ப்பு முன்னோக்கு

## பூகோளமயமாக்கல் தொடர்பான பேராசிரியர் சோசுடோவ்ஸ்கியின் விமர்சனத்திற்கு ஒரு பதில்


நிக் பீம்ஸ்

*பேராசிரியர் மைக்கேல் சோசுடோவ்ஸ்கியால் எழுதப்பட்டு, உலக சோசலிச வலைத் தளத்தில் (WSWS) 15 ஜனவரி 2000ல் பிரசுரிக்கப்பட்ட "சியாட்டிலும் அதற்கு அப்பாலும்: புதிய உலக ஒழுங்கை பலவீனமாக்கல்" என்ற கட்டுரைக்கு பதிலளிக்கும் முகமாக, உலக சோசலிச வலைத் தளத்தின் (WSWS) ஆசிரியர் குழு உறுப்பினரும் அவுஸ்திரேலிய சோசலிச சமத்துவக் கட்சியின் தேசிய செயலாளருமான நிக் பீம்ஸினால் எழுதப்பட்ட கட்டுரையின் இரண்டாம் பாகத்தை இங்கே வெளியிடுகின்றோம்)*

நிக் பீம்ஸ்
பெப்பிரவரி 23, 2000

பாகம்-2


பூகோள முதலாளித்துவத்தினது உலக வர்த்தக அமைப்பு (WTO) மற்றும் ஏனைய நிறுவனங்கள் தொடர்பான பேராசிரியர் சோசுடோவ்ஸ்கியின் அடிக்கடி உணர்ச்சி வசப்பட்ட கண்டனங்கள் அனைத்தின் ஊடாகவும் இழையோடிக் கிடப்பது ஒரு திட்டவட்டமான அரசியல் வேலைத்திட்டமாகும். அவரது கண்ணோட்டத்தில் உலக வர்த்தக அமைப்பு போன்ற "சர்வ அதிகாரங்கள்" கொண்ட அமைப்புக்களினால் கீழ்ப்படுத்தப்பட்டு இருக்கின்ற தேசிய அரசின் இறைமையையும் அதிகாரத்தையும் புனரமைப்பதன் மூலமாக பூகோளமயமாக்கல் கட்டாயம் எதிர்க்கப்பட வேண்டும் என்பதாகும்.

சோசுடோவ்ஸ்கியின்படி, உ.வ.அ. நிறுவிய 1994 உடன்படிக்கை, "ஒவ்வொரு அங்கத்துவ நாடுகளதும் ஜனநாயக விதிமுறைகளைக் கடந்து சென்றுவிட்டது". அத்துடன், பூகோள வங்கிகளுக்கும், பன்னாட்டுக் கம்பனிகளுக்கும் பேரளவு அதிகாரம் வழங்குவதன் மூலமாக தேசிய சட்டங்களையும் அரசியலமைப்பு விதிமுறைகளையும் வேண்டுமென்றே சீரழிக்கின்றது.

அவர் பின்வருமாறு தொடர்கிறார்: "வேறு வார்த்தைகளில் சொன்னால், உருகுவே சுற்று பேச்சுவார்த்தைகளின் இறுதி நடவடிக்கையை தொடர்ந்து உ.வ.அ. உருவாக்கப்பட்ட முறை, அப்பட்டமான 'சட்டவிரோதம்' ஆகும். தேசிய அரசாங்கங்களின் இறைமையையும், உரிமைகளையும் சீரழிக்கும், ஒவ்வொரு நாட்டுமட்டத்தில் பொருளாதார மற்றும் சமூகக் கொள்கைகளை மேற்பார்வை செய்யும் சர்வதேச சட்டத்தின் கீழ் 'சர்வ அதிகாரங்கள்' கொண்ட அரசாங்கங்களுக்கிடையிலான அங்கம் என்று அழைக்கப்படும் ஒன்று ஜெனீவாவில் தற்காலிகமாக நிறுவப்பட்டது. "உ.வ.அமைப்புடனான தங்களது அரசாங்கங்களின் அங்கத்துவத்தை காலதாமதமின்றி திரும்பப்பெறவும், ரத்துச் செய்யவும் தங்களது அரசாங்களுக்கு அழுத்தம் கொடுக்கவும், "உ.வ.அமைப்பின் அங்கத்துவ நாடுகள் தேசிய அரசியல் சட்டங்களையும் உள்நாட்டுச் சட்டங்களையும் அப்பட்டமாக மீறுவதைச் சுட்டிக்காட்டி, தேசிய நீதிமன்றங்களில் அவற்றுக்கெதிராக" சட்டரீதியான வழக்கு நடவடிக்கைகளை முன்னெடுக்க வலியுறுத்தியும் அழுத்தம் கொடுப்பதற்கு, "உலகெங்கும் உள்ள மக்கள் இயக்கங்களுக்கு" சோசுடோவ்ஸ்கி அழைப்பு விடுக்கிறார்.

உண்மையை அம்பலப்படுத்தலையும் விமர்சன ரீதியான விவாதத்தையும் தடுப்பதற்காக வெகுஜன ஊடகங்களை சோசுடோவ்ஸ்கி கண்டனம் செய்கின்றார். அத்துடன், "சுதந்திர சந்தை" யின் ஒரே வாக்குறுதி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் உ.வ.அமைப்பு ஆகியவற்றால் வழங்கப்பட்ட "கசப்பான பொருளாதார மருந்தால்" ஏற்பட்ட பொருளாதாரச் சீரழிவுதான் மக்களது வாழ்க்கைத் தரத்தை அழிக்கின்றது என்று சுட்டிக்காட்டுகிறார். பின்னர் அவர் "நாம் கட்டாயம் உண்மையை மீட்கவேண்டும், நமது நாடுகளுக்கும் நமது நாட்டு மக்களுக்கும் இறைமையை மீண்டும் கட்டாயம் நிலைநாட்ட வேண்டும் என பிரகடனம் செய்கின்றார்.

பூகோள முதலாளித்துவத்துக்கும் அதன் நிறுவனங்களுக்கும் எதிரான தேசிய எல்லைகளைக் கடந்து சர்வதேச தொழிலாளர் வர்க்கத்தை ஒன்றிணைப்பதன் அடிப்படையிலான போராட்டமான சோசலிச கொள்கைகளை கொண்ட எதிர்ப்புக்கும், தேசிய அரசின் அதிகாரத்தை மீளமைக்க "மக்கள் இயக்கத்துக்கு" அழைப்பு விடுக்கும் பூகோளமயமாக்கலுக்கு எதிரான குட்டி முதலாளித்துவ எதிர்ப்புக்கும் இடையிலான அடிப்படை வேறுபாட்டிற்கு இதைவிட தெளிவான விளக்கம் வேறெதுவும் இருக்க முடியாது.


அமெரிக்காவில் டிட்ரோய்டில் உணவுக்காக காத்திருக்கும் ஏழைகள்

இந்த பிரச்சினைகள் எவ்வகையிலும் தற்போது முதல் முறையாக வெளிப்படவில்லை. ஏகாதிபத்திய மையப்படுத்தலையும் தேசிய ஒடுக்குமுறையின் எல்லா வடிவங்களையும் எதிர்த்துப் போராடுகின்ற அதே வேளையில், "நமது கண்டம் முழுவதும் மட்டுமல்லாது மேலும் பூகோளம் முழுவதுமாக திட்டமிடப்பட்ட அமைப்பை நோக்கிய, நவீன, தடை செய்ய முடியாத மற்றும் ஆழமான பொருளாதார வாழ்க்கைப் போக்கின் வழியில் 'தேசியக் கொள்கையை' ஈடுபடுத்த பாட்டாளி வர்க்கம் அனுமதிக்கக் கூடாது". என ட்ரொட்ஸ்கி முதலாவது உலக யுத்தத்தின் மத்தியில் விளக்கினார்.

அவர் தொடர்ந்தார்: "நவீனப் பொருளாதாரம் முன்னர் வட்டார மற்றும் பிராந்திய எல்லைக்குள் சிறைப்பட்டுக் கிடந்ததுடன் தன்னைத்தானே கிழித்துக் கொண்டு வந்ததுபோல, குறுகிய தேசிய நோக்கின் பைத்தியக்காரத்தனத்திலிருந்து தன்னையே முற்று முழுதாகத் துண்டித்துக் கொண்ட இந்தப் போக்கின் முதலாளித்துவ கள்ள வெளிப்பாடுதான் ஏகாதிபத்தியம். ஏகாதிபத்திய வடிவிலான பொருளாதார மையப்படுத்தலுக்கு எதிராகப் போராடுகின்ற அதே வேளையில், அது ஒரு குறிப்பிட்ட போக்கு என்பதற்காக சோசலிசம் ஒரு போதும் அதை எதிர்ப்பதில்லை, மாறாக அந்தப் போக்கினை தனது சொந்த வழி காட்டும் கொள்கையாக்குகின்றது".1

இந்த தொடரின் முடிவுப் பகுதியில் இந்தவழி காட்டும் கொள்கையின் விளைபயன்களின் சிலவற்றை நாம் கவனிப்போம். இந்தக் கட்டத்தில் சோசுடோவ்ஸ்கியால் முன்னெடுக்கப்படும் தேசியவாத வேலைத்திட்டத்தின் விளைவுகளை நாம் ஆராய்வோம்.

பேராசிரியர் சோசுடோவ்ஸ்கியின் கண்டனங்களை வாசிக்கும் பொழுது உ.வ.அ. மற்றும் அவர் அழைக்கின்ற புதிய உலக ஒழுங்கு ஒரு போதும் பூகோள முதலாளித்துவ ஒழுங்கு அல்ல, இதேவேளை இது பற்றி அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் உள்ள அதிதீவிர வலதுசாரி தேசியவாதிகளின், மக்கள்வாத மற்றும் நவீன பாசிச அமைப்புக்களது பிரகடனங்களை கூட ஒருவர் நினைவு கூராமல் இருக்க முடியாது.

அமெரிக்காவில், பட்ரிக் புக்கானனின் [Patrick Buchanan] ஆதரவாளர்களும் ஏனைய வலதுசாரி அரசியல்வாதிகளும் புதிய உலக ஒழுங்கு, உ.வ.அ. மற்றும் ஐக்கிய நாடுகள் சபை போன்றவற்றை" உலக அரசாங்கத்தின்" உறுப்புகள் என கூறி நிராகரித்து அமெரிக்க அரசாங்கத்தின் அதிகாரங்களையும் இறைமை உரிமைகளையும் அழிவுக்கு ஆளாக்குகின்றன என்று கண்டனம் செய்கின்றனர். ஐரோப்பாவில் இதே போன்ற நிலைப்பாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்தின் எதிர்ப்பாளர்களான வலதுசாரி மற்றும் நவீன பாசிசவாதிகள் மத்தியில் காணப்படுகின்றன. உ.வ.அ, ஐரோப்பிய ஒன்றியம் என்ற இந்த இரண்டையும் சோசலிஸ்டுகளும் எதிர்க்கிறார்கள் தான். ஆனால் இதில் தீர்க்கமான பிரச்சினை யாதெனில் அந்த எதிர்ப்பு அடிப்படையாகக் கொண்டிருக்கும் வேலைத்திட்டமாகும்.

இந்த உள்ளடக்கத்தில் வெர்செயில்ஸ் உடன்படிக்கை [Versailles Treaty] தொடர்பான ட்ரொட்ஸ்கியின் நோக்கை நினைவு கூருதல் பயனுள்ளதாகும். கம்யூனிஸ்டு அகிலம் இந்த உடன்படிக்கையை முற்றாக எதிர்த்த அதேவேளை, ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சி "வெர்செயில்ஸ் ஒழிக" என்று வெறுமனே முழக்கத்தை முன்னெடுக்க முடியாதிருந்தது. ஏனெனில் அவ்வாறு செய்வது அதனைத் தவிர்க்க முடியாதபடி நாசிகள் மற்றும் ஏனைய வலதுசாரி தேசியவாதக் குழுக்களின் அரசியலுடன் அணி சேர்த்துவிடும். இன்னும் சொல்லப் போனால், வெர்செயில்ஸ் மற்றும் அது அறிமுகப்படுத்திய "புதிய உலக ஒழுங்கு" ஆகியவற்றுக்கு எதிரான அரசியல் எதிர்ப்பை, ஐரோப்பிய ஐக்கிய சோசலிச அரசுகளுக்கான போராட்டத்தின் அடிப்படையில் அவர் நிலைநாட்டி வந்தார்.

சந்தேகத்துக்கிடமின்றி பேராசிரியர் சோசுடோவ்ஸ்கி, உ.வ.அவிற்கு எதிரான வலதுசாரி தேசிய எதிர்ப்பாளர்களுக்கு குரோதமானவர்தான். ஆனால் அரசியலில் அது ஒருவரின் விருப்பங்கள் பற்றிய பிரச்சனை அல்ல, மாறாக ஒருவர் போராடும் வேலைத் திட்டத்தின் உள்ளடக்கம் மற்றும் புறநிலை தர்க்கமும், அத்துடன் அந்த வேலைத்திட்டம் எந்தச் சமூக சக்திகளின் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது என்பதே முக்கியமாகும். உ.வ.அ. மீதான எதிர்ப்பானது. தேசிய அரசைப் பலப்படுத்தவும் அதன் அரச உரிமைகளை புனருத்தாரணம் செய்யவும் அழைப்புவிடும் வேலைத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு. அந்த தேசிய அரசின் உரிமைகளை கீழ்ப்படுத்துவதால் உ.வ.அ.வை "சட்ட விரோதமானது" என்று கண்டனம் செய்வது வலதுசாரி தேசியவாத அரசியல் போக்குடன் அரசியல் அணிசேர்தலையே உருவாக்க முடியும்.

உ.வ.அ.வுக்கு "மனிதாபிமான முகத்தை" வழங்கியும் அதனுடைய ஜனநாயக பண்பில் பிரமைகளை ஊட்டியும் வருவதில் அரசு சாரா அமைப்புகள் மற்றும் செய்தி நிறுவனங்களின் பாத்திரத்தை பேராசிரியர் சோசுடோவ்ஸ்கி தனது கட்டுரை முழுவதும் அம்பலப்படுத்த விழைகிறார். ஆனால் தேசிய அரசு தொடர்பாக வருகையில் அவர் தானே பிரமைகளையும், கட்டுக்கதை புனைவதையும் ஊக்குவிக்கின்றார். அவர் அரசு நிறுவனங்கள் தம்மை நிதி நிறுவனங்களின் பிடியில் இருந்து விடுவித்துக்கொள்ளவும் நேரடி உற்பத்தியாளர்களின் உரிமைகளை மீட்கவும் அரசு நிறுவனங்களின் மாற்றத்திற்கு அழைப்புவிடுக்கிறார். அவரது நோக்கம் தேசிய அரசாங்கங்களுக்கு அழுத்தம் கொடுக்கவும் இறுதியில், முதலாளித்துவ அரசின் சீர்திருத்தத்தை நிறைவேற்றவும் "மக்கள்" இயக்கத்தை வளர்த்தெடுப்பதுதான். ஆனால் வரலாற்று ஆதாரங்கள் அத்தகைய திட்டத்தின் சாத்தியமின்மையை எடுத்துக்காட்டுகிறது. முதலாளித்துவ தேசிய அரசு என்பது சக்திமிக்க பொருளாதார நலன்களால் கைப்பற்றப்பட்டிருக்கும் சமுதாயத்துக்கு மேலாக நிற்கும் ஏதோ நடுநிலையான அரசியல் நிறுவனம் அல்ல. அது முதலாளித்துவ வர்க்கத்தின் சிருஷ்டியும் அதன் அமைப்பும் ஆகும். இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சந்தேகத்துக்கிடமின்றி பேராசிரியர் சோசுடோவ்ஸ்கி, உ.வ.அ.விற்கு எதிரான வலதுசாரி தேசிய எதிர்ப்பாளர்களுக்கு குரோதமானவர்தான். ஆனால் அரசியலில் அது ஒருவரின் விருப்பங்கள் பற்றிய பிரச்சனை அல்ல. மாறாக ஒருவர் போராடும் வேலைத் திட்டத்தின் உள்ளடக்கம் மற்றும் புறநிலை தர்க்கமும், அத்துடன் அந்த வேலைத்திட்டம் எந்தச் சமூக சக்திகளின் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது என்பதே முக்கியமாகும். உ.வ.அ. மீதான எதிர்ப்பானது, தேசிய அரசைப் பலப்படுத்தவும் அதன் அரச உரிமைகளை புனருத்தாரணம் செய்யவும் அழைப்புவிடும் வேலைத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, அந்த தேசிய அரசின் உரிமைகளை கீழ்ப்படுத்துவதால் உ.வ.அ.வை "சட்ட விரோதமானது" என்று கண்டனம் செய்வது வலதுசாரி தேசியவாத அரசியல் போக்குடன் அரசியல் அணிசேர்தலையே உருவாக்க முடியும்.*

அரசு பரந்த மக்கள் திரளால் எப்படியோ "கைப்பற்றப்பட்டு" அவர்களின் நலன்களின் பேரில் ஜனநாயகப்படுத்தப்பட முடியாதது. இதன் கருத்து தொழிலாளர் வர்க்கமும் அதன் கூட்டணியும் ஜனநாயகக் கோரிக்கைகளுக்காகப் போராடக்கூடாது; அல்லது இதற்கான போராட்டத்திற்கு ஏனைய சமூக வர்க்கங்களிலிருந்து வென்றெடுக்க முடியாது என்று அர்த்தப்படவில்லை. மாறாக, பூகோள முதலாளித்துவ சந்தையின் சர்வ அதிகாரத்துக்கும் எதிரான போராட்டத்தில் ஜனநாயகக் கோரிக்கைகள் மிக முக்கியத்துவத்தை பெறுவதுடன், பெறவும் முடியும். ஆனால், தொழிலாளர் இயக்கத்தின் அரசியல் போராட்டத்தின் முழு வரலாறும் காட்டுவது போல், அதனுடைய வடிவம் எப்படிப்பட்ட "ஜனநாயக" மானதாக இருந்தாலும் இந்தக் கோரிக்கைகளுக்கான போராட்டம் முதலாளித்துவ அரசினூடாக அல்லாது அதற்கு எதிரான போராட்டத்தினூடாகத்தான் மேற்கொண்டு முன் செல்லமுடியும்.

பூகோள "சுதந்திர சந்தை" யின் நடவடிக்கையால் இப்பொழுது உண்டுபண்ணப்பட்டிருக்கும் சமூக மற்றும் பொருளாதார சீரழிவுக்குக் காரணம் மூலதனம் இலாபத்திற்கான அதன் பூகோளப் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபடும் தேவைக்காக சமுதாயத்தின் ஒவ்வொரு அம்சமும் மூலதனத்தின் தேவைகளுக்கு கீழ்ப்படுத்தப்படுகின்றதாலாகும். இதற்கான தீர்வு பொருளாதாரத்தை மேலிருந்து கீழாக மறு சீறமைப்பை செய்வதும் மற்றும் பரந்த பெரும்பான்மையினரது தேவைகளை நிறைவு செய்ய விஞ்ஞான மற்றும் கலாச்சார முன்னேற்றங்களின் பயன்படுத்தல்களின் அடிப்படையில் முற்றிலும் புதிய சமூக முன்னுரிமைகளை நிறுவுதலை தவிர குறைவான எதையும் வேண்டி நிற்கவில்லை.

ஆனால், பேராசிரியர் சோசுடோவ்ஸ்கி சந்தேகத்திற்கிடமின்றி ஏற்றுக்கொள்ளும் முன்னோக்கான முதலாளித்துவ அரசின் மூலம் அது அடையப்பட முடியுமா? அதற்கு பரந்த ஜனத்திரள் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தும் புதிய வடிவிலான அமைப்பின் உருவாக்கத்தையும் அரசியல் அமைப்புமுறையை முழுவதுமாக மாற்றி அமைப்பதையும் தனது இலக்காகக் கொண்டுள்ள ஒரு அரசியல் இயக்கம் தேவையில்லையா? இதற்கு எதிரான அனைத்தும் நிச்சயமாக பிரமைகளை உண்டுபண்ணுவதும், உ.வ.அ.வின் ஆதரவாளர்களால் ஊட்டிவளர்க்கப்பட்டு வருபவை போல அதே அளவு ஆபத்தானதுமாகும்.

பேராசிரியர் சோசுடோவ்ஸ்கியின் முன்னோக்கின் ஒருங்கிணைந்த உள்ளடக்கம் "சுதந்திர-சந்தை" நடவடிக்கைகளால் உருவாக்கப்பட்ட சமூக மற்றும் பொருளாதாரச் சீரழிவு தடுக்கப்படுவதற்கு, தேசிய அரசாங்கங்களுக்கும் அவற்றின் நிதி நிறுவனங்களுக்கும் தேசிய பொருளாதார ஒழுங்கு முறை கொள்கைகளுக்குத் திரும்புமாறு நிர்ப்பந்தித்து அழுத்தம் கொண்டு வந்தால் முடியும் என்ற அவரது நம்பிக்கை தான். இது யுத்தத்துக்கு பிந்திய செழிப்பைப் பண்பிட்டுக் காட்டும் தேசிய பொருளாதார ஒழுங்கமைப்புக் கொள்கைகளின் மூலதாரியான பிரித்தானிய பொருளியலாளரான ஜோன் மேனார்ட் கீன்சின் [John Maynard Keynes] ஆய்வை அடிப்படையாகக் கொண்டதாகும்.

அனைத்து கீன்சிய ஆதரவாளர்களைப் போலவே சோசுடோவ்ஸ்கியும் முதலாளித்துவப் பொருளாதார நெருக்கடியின் ஊற்றிற்கு பொருளாதார தேவையின் [Economic demand] பற்றாக்குறையை காரணம் காட்டுகிறார். இதை மிகத் தெளிவாக அவரது புத்தகமான "வறுமையின் பூகோளமயமாக்கல்" என்பதில் நிலை நிறுத்துகிறார். சர்வதேச நாணய நிதியத்தினால் உதவி வழங்கப்படும் சீர்திருத்த திட்டங்கள் வேலையின்மையை உருவாக்கலும், "உற்பத்தி செலவைக் குறைத்தல்" போன்றவற்றால் உலக மக்களில் பெரும் பகுதியினரின் வறுமைக்கு வழிவகுக்கும் மற்றும் "கொள்வனவு செய்யும் சக்தியை பாரியளவில் சுருங்கச் செய்யும்" என எழுதுகிறார். "அபிவிருத்தி அடைந்த மற்றும் அபிவிருத்தி கண்டு வரும் நாடுகளில் முறையே, குறைந்த மட்டத்திலான வருவாய்கள் உற்பத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தி மேலும் தொடர்ச்சியான ஆலை மூடல்களுக்கும் வங்குரோத்துகளுக்கும் வழியமைக்கின்றன. இந்த நெருக்கடியின் ஒவ்வொரு நிலையின் இயக்கமானது பூகோளரீதியான மிகை உற்பத்தியையும் நுகர்வோர் தேவையின் வீழ்ச்சியையும் நோக்கியிருக்கும். சமூகத்தின் நுகர்வதற்கான தகமையின் குறைவு மூலம், உலக ரீதியில் பிரயோகிக்கப்படும் உலக ரீதியான பொருளாதார [Macro-economic] சீர்த்திருத்தங்கள் இறுதியில் மூலதனம் பெருகுவதற்கு தடையாகிறது."2

முதலாளித்துவ பொருளாதார நெருக்கடியின் இத்தகைய ஆய்விலிருந்து திட்டவட்டமான அரசியல் முடிவுகள் ஊற்றெடுக்கின்றன என்பது தெளிவாகிறது. பேராசிரியர் சொசுடோவ்ஸ்கி நிலைநாட்டுவது போல், பூகோள நிதி நிறுவனங்களால் திணிக்கப்படும் வேலைத்திட்டம் இறுதியில் மூலதனம் விரிவடைய தடையாக இருந்தால், அங்கே அப்பொழுது இந்தக் கொள்கைகளை பின்நோக்கி திருப்பும் நோக்கம் கொண்ட அரசியல் இயக்கம் வளர்வது சாத்தியப்படும். அத்தகைய பின்நோக்கி திருப்பம் இறுதி விளைவாக மூலதனத்திற்கே நன்மை விளைக்கும் அரசியல் இயக்கம் வளர்வதை சாத்தியப்படுத்தும். எவ்வாறாயினும், நாம் எடுத்துக்காட்டப் போவது போல், இலாப முறைக்குள் இருக்கும் முரண்பாடுகளால் எழும் நெருக்கடிகளும், தேவையின் பற்றாக்குறையும் தவறான கொள்கைகளின் விளைபொருள் அல்ல. மாறாக அது மிக அடிப்படையான போக்குகளின் வெளிப்பாடாகும். அப்படியானால், தேவையினை விரிவடையச் செய்வதன் அடிப்படையிலான சீர்திருத்த வேலைத்திட்டம் அதனைத் தீர்க்காது என்பது தெளிவு.

சோசுடோவ்ஸ்கி" வாங்கும் திறனையும் ('தேவைப்பகுதி'), உலகரீதியான வேலை வாய்ப்பின் உருவாக்கத்தையும், வறுமையைக் குறைக்கும் உலகரீதியான கொள்கைகளை விரிவாக அடக்கிய புதுச் சட்டங்கள் மூலம் வர்த்தகத்தை ஆளுமை செய்ய அழைப்பு விடுக்கிறார்3. 1998-ல் வெளியிடப்பட்ட, நிதி யுத்தம் எனத் தலைப்பிடப்பட்ட கட்டுரையில், அவர் முன்னெடுக்கின்ற வேலைத்திட்டத்தை தெளிவாய் விளக்குகிறார்: "யுத்தத்துக்கு பிந்திய காலகட்டத்தை அடுத்து பிரதான முதலாளித்துவ சக்திகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, கொள்கைகளுக்குத் திரும்பவேண்டும், அவற்றை பூகோள அளவில் பயன்படுத்தவேண்டும்".4.

அவர் எழுதுகிறார், "உலக ரீதியான நெருக்கடி மத்தியப்படுத்தப்பட்ட வங்கி முறை அழிதலைக் குறிக்கிறது. அதன் பொருள் தேசியப் பொருளாதார இறைமையின் குறைவும், சமுதாயத்தின் சார்பில் பணம் உருவாக்கப்படுவதைக் கட்டுப்படுத்த தேசிய அரசால் இயலாமல் போனமையும் ஆகும்". அவர் நிற்கின்ற அறிவியல் மற்றும் அரசியல் மரபுகள் இறுதிப் பந்தியில் வெளிக்காட்டப்படுகிறது. சோசுடோவ்ஸ்கி எழுதுகிறார்: "தற்போதுள்ள நிதி நெருக்கடியானது உலகெங்கும் உள்ள தேசிய அரசு நிறுவனங்களின் அழிவை மட்டும் உண்டுபண்ணவில்லை, 1944-ல் பிரெட்டன் வூட்ஸ் [Bretton Woods] மாநாட்டில் நிறுவன முன்னோடிகளால் ஏற்படுத்தப்பட்ட யுத்தத்துக்கு பிந்திய நிறுவனங்களின் படிப்படியாக சிதறுண்டு போதலையும் (மற்றும் தனியார்மய சாத்தியத்தினை) கூட கொண்டிருக்கிறது. சர்வதேச நாணய நிதியத்தின் தற்போதைய நாசகாரப் பாத்திரத்திற்கு மாறாக இந்த நிறுவனங்கள் அவற்றை வடிவமைத்தவர்களால் தேசியப் பொருளாதாரங்களின் உறுதிப்பாட்டைப் பாதுகாக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டது. (1944ஜூலை 22) மாநாட்டுக்கு தனது முடிவுரையில், அமெரிக்க திறைசேரி செயலாளர் ஹென்ரி மோர் கென்த்தா [Henry Morgenthau] பின்வருமாறு கூறினார்: "தற்போதைய யுத்தத்திற்கு இட்டு சென்ற 'பணமதிப்பிறக்கப் போட்டி மற்றும் வர்த்தகத்திற்கு அழிவுகரமான முதுகுக்குப் பின்னான வேலைகள் போன்ற இப்பொருளாதாரத் தீமைகளை ஒழிக்கும் வழிமுறைகளை வகுப்பதற்கு நாம் இங்கு வந்துள்ளோம்".

தேசிய பொருளாதார ஒழுங்கமைப்பின் கொள்கைகளுக்குத் திரும்புமாறு இதே போன்று அழைப்பு விடுக்கும், பூகோள அமைப்பு முறையின் ஏனைய அநேக விமர்சகர்களைப் போலவே சொசுடோவ்ஸ்கி, கீன்சியன் பாணி நிர்வாகத்தினை அடிப்படையாகக் கொண்ட யுத்தத்துக்குப் பிந்திய பொருளாதார ஒழுங்கு ஏன் முதல் தடவை உடைந்து போனது என்ற கேள்விக்கு ஒரு போதும் பதிலளிக்கவில்லை.

இதுவரை அத்தகைய விமர்சகர்களால் வழங்கப்படும் எந்த விளக்கமும் போல, அது றீகன் மற்றும் தட்சரால் முன்முயற்சி எடுக்கப்பட்ட கொள்கை மாற்றத்திற்கும் "சுதந்திர சந்தை" தத்துவத்தின் தோற்றத்தினையும் வழக்கம் போல காரணம் காட்டுவதாக இருக்கும். அத்தகைய ஆய்வு எவ்வாறாயினும் றீகன் மற்றும் தட்சர் போன்ற சிறிய மற்றும் மிகக் குறிப்பிட்ட வரையறைக்குட்பட்ட தனி நபர்கள் எப்படி "உலக வரலாற்று மனிதர்களாக" உருமாற்றம் செய்யப்பட்டார்கள் என்றோ, அல்லது 1960களில் பொருளாதார கிறுக்கன் ஆக குறிப்பிடப்பட்ட சிக்காகோ "சுதந்திர சந்தை" பள்ளியின் தந்தை மில்டன் பிரீட்மேன் [Milton Friedman] 1980 களில் பொருளாதார அறிவுடைமையின் ஊற்று என குறிப்பிடப்பட்டார் என்றோ விளக்க முடியாது.

"சுதந்திர சந்தையின்" தோற்றத்திற்கான வேலைத் திட்டத்தினை யுத்தத்திற்கு பிந்திய பொருளாதார ஒழுங்கின் நெருக்கடி, அபிவிருத்தி, அதன் தோற்றம் ஆகியவற்றை ஆய்விற்கு உட்படுத்துவதன் மூலமே விளங்கிக்கொள்ள முடியும்.

பிரெட்டன் வூட்ஸ் உடன்படிக்கையை உருவாக்கவும், மற்றும் அதனை அடுத்த ஆண்டுகளில் அபிவிருத்தி செய்யப்பட்ட கொள்கைகள் முதலாவதாக யுத்தத்தின் கடைசிக் காலகட்டத்தில் வளர்ச்சியடைந்த நாடுகளிலும் காலனித்துவ நாடுகளிலும் ஒரே மாதிரியாக வளர்ச்சியடைந்த மக்கட் திரளின் உள்ளுறைந்த புரட்சிகர இயக்கத்திற்கு பதில் ஆகும்.

முதலாளித்துவ வர்க்கத்தின் மிகவும் தொலை நோக்கு கொண்ட அரசியல் பிரதிநிதிகள் மூலதனத்தின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் மற்றும் வாழ்க்கைத் தரங்களை பொதுவில் அபிவிருத்தியடையச் செய்வதை உறுதிப்படுத்தும் வரிசைக் கிரமமான நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் தாம் வரிசையாய் எழுச்சிகளை எதிர்கொள்ள நேரிடும் என்பதை உணர்ந்தனர். அவை முதலாம் உலக யுத்தத்தைத் தொடர்ந்து வந்ததை விடவும் பரந்த அளவில் எழுவதும் சாத்தியம் என்பதை உணர்ந்தனர். வேறு விதமாகச் சொன்னால், இரு உலக யுத்தங்களுக்கும் மாபெரும் வீழ்ச்சி எனும் பொருளாதார அழிவுக்கும் பிறகு, முதலாளித்துவ பொருளாதாரம் மேலிருந்து திரும்பக்கட்டி அமைக்கப்படாவிட்டால், அங்கு கீழிருந்து அதனைத் தூக்கி வீசும் உண்மையான ஆபத்து உள்ளது என்பது உணரப்பட்டது. சுதந்திரச் சந்தையின் தங்கு தடையற்ற நடவடிக்கைகளின் சமூக மற்றும் அரசியல் விளையபன்கள் பற்றிய பீதியே பிரெட்டன் வூட்ஸ் அமைப்பின் பிரதான உள்ளடக்கமாகும். அதற்கான நடவடிக்கைகளாக நிலையான நாணய உறவுகளை உருவாக்கல், மூலதனக் கட்டுப்பாடுகள், தேசியப் பொருளாதாரத்தினை கட்டுவதற்கான அரசாங்கங்களை தூண்டுதல், மற்றும் பரந்த சமூகநலநடவடிக்கைகளை அமைத்தல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டன. இவை யுத்தத்திற்கு பின்னான விரிவாக்கத்திற்கான கட்டமைப்பை வழங்கின.

ஆனால் இந்தக் கொள்கை முன் முயற்சிகள் முக்கியமானவையாக இருந்தும், அவை தாமாகவே வெற்றி பெறமுடியவில்லை. முதலாளித்துவத்தின் வரலாற்றில் நீண்ட செழிப்பான காலப்பகுதியான- யுத்தத்திற்கு பின்னான விரிவாக்கத்தின் அடிப்படைக் காரணம் 1920-களிலும் 1930-களிலும் ஐக்கிய அமெரிக்க அரசுகளிலும், அங்கிருந்து ஏனைய வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலும் அபிவிருத்தியடைந்த ஒன்றிணைக்கும் தொழிற்பிரிவு [Assemble line] முறையை அடிப்படையாகக் கொண்ட புதிய முதலாளித்துவ உற்பத்தி வழிமுறையின் விஸ்தரிப்பாகும். இந்த புதிய உற்பத்தி முறைகளும் அவற்றுக்கு இணைந்து போகும் அரசியல் மற்றும் சமூக கட்டமைப்பின் நிறுவலும் இலாப வீதங்களை மீட்டமைத்தலை சாத்தியமாக்கின.

இறுதி ஆய்வில் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் நீண்ட எழுச்சிக் காலப்பகுதியானது அது அரசாங்கக் கொள்கைகளால் முன்னெடுக்கப்பட்டிருக்கலாம் அல்லது தடுக்கப்பட்டிருக்கலாம், அதன் விளைவு இலாபங்களின் விரிவாக்கம் ஆகும். அதிகரித்த இலாபங்கள் அதிகரித்த முதலீடுகளுக்கு வழிவகுத்தன. அவை மேலும் விரிவாக்கம் இடம்பெறும் வண்ணம் முறையே கூடுதல் வேலைவாய்ப்புகளையும், நுகர்வோர் தேவைகளின் விரிவாக்கத்திற்கும், புதிய சந்தைகளின் உருவாக்கத்திற்கும் வழிவகுத்தன.

இந்த ஒழுங்கான வட்டம் தொடர்கின்றவரை, வர்த்தக சுழற்சியில் ஏற்ற இறக்கங்கள் இருந்த போதும் முதலாளித்துவப் பொருளாதாரம் தொடர்ந்து விரிவடைந்தது. ஆனால் மார்க்ஸ் ஆய்வு செய்தவாறு இலாப முறைக்கும், மூலதனத் திரட்சிக்கும் உள்ளே அடிப்படை முரண்பாடுகள் இருக்கின்றன. அதன் அர்த்தம் சில நிலைமையில் அது கட்டாயம் உடையும்.

16ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம் இலங்கைக் கிராமத்தின் வாழ்க்கையை தவிடு

## "புர ஹந்த கலுவர" (பௌர்ணமி தின மரணம்)

திரைக்கதை, நெறியாழ்கை: பிரசன்ன வித்தானகே



புரஹந்த திரைப்படத்தில் வன்னிஹாமியாக நடிக்கும் ஜோ அபேவிக்ரம

பியசீலி விஜேகுணசிங்க
பெப்பிரவரி 29, 2000

இலங்கை அரசாங்கமும் அரச நிர்வாகத்துக்குட்பட்ட இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனமும் பிரசன்ன வித்தானகேயின் "புரஹந்த கலுவர" திரைப்படம், திரையிடப்படுவதைத் திட்டமிட்டுத் தடை செய்து வருகின்றன. இதற்கான காரணம் தெளிவானது. 'புர ஹந்த கலுவர' (பௌர்ணமி தின மரணம்) தீவின் வடக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெறும் இலங்கை அரசின் 16 வருடகால காட்டுமிராண்டி யுத்தத்தினால் மக்களின் வாழ்க்கை நிலைமைகளில் ஏற்பட்ட பேரழிவைச் சித்தரிக்கின்றது.

இந்தத் திரைப்பட விமர்சனத்தை எழுதுபவர், இலங்கையில் உள்ள பிரான்சிய தூதரகத்துடன் இணைந்த 'அலயன்ஸ் பிரான்சிஸில்' (Alliance Francise) இடம் பெற்ற சமீபகால இலங்கைத் திரைப்பட விழாவில் கலந்து கொண்டதன் மூலம் இந்தத் திரைப்படத்தைத் தரிசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இந்தத் திரைப்பட விழாவில் படத்தின் ஒரு 'வீடியோ' ஒரு பெருந்திரையில் போட்டுக் காண்பிக்கப்பட்டது. இந்த இலட்சணத்தில் விமர்சகன் படத்தைத் தரிசிப்பதானது அதை ஒரு நியாயமான முறையில் ஆய்வு செய்வதைத் தடுக்கின்றது. இத்தகைய ஒரு பாதகமான நிலைமையிலும் கூட வித்தானகேயின் திரைப்படம் ஒரு சக்திவாய்ந்த படைப்பு; 55000 உயிர்களைப் பலிகொண்டதும் இன்னும் பல்லாயிரக் கணக்கானோரை அங்கவீனர்களாகவும், அகதிகளாகவும், வறியவர்களாகவும் ஆக்கியதுமான ஒரு யுத்தத்தின் எண்ணற்ற துயரங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டவர்களின் வாழ்க்கையில் எதிரொலிக்கும் ஒன்று.

'புர ஹந்த கலுவர' 80,000 (அமெரிக்க) டாலர்கள் மட்டும் செலவழித்துத் தயாரிக்கப்பட்ட ஒரு திரைப்படம்; இலங்கையில் ஆண்டுதோறும் தயாரிக்கப்படும் ஒரு சில கனதிமிக்க படங்களில் இதுவும் ஒன்றாகும். பிரசன்ன வித்தானகேயின் சுயநம்பிக்கை மிக்கதும் உணர்ச்சி பூர்வமானதுமான நெறியாள்கையும் முக்கிய பாத்திரமான வன்னிஹாமியாக நடிக்கும் பிரபல நடிகர் ஜோ அபேவிக்கிரமவின் அபூர்வமான நடிப்பும் சங்கமமாகி, யுத்தத்தின் அவஸ்தை நிறைந்த துன்பங்களை எதிர்த்து போராடும் ஒரு மனிதனின் உன்னதமான கதை இங்கு சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளது.

இத்திரைப்படம் இலங்கையின் வடபாகத்தின் உலர் வலயத்தில் உள்ள ஒரு சிங்களக் கிராமத்தில் வாழும் ஒரு முதிய விவசாயியான வன்னிஹாமியின் கதையைக் கூறுகின்றது. ஆரம்பத்தில் நாம் ஒரு நீண்ட வரட்சியினால் வரண்டு போன ஒரு நிலத்தையும், தண்ணீர் தட்டுப்பாட்டினால் பெரும் சங்கடங்களுக்குள்ளாகி உள்ள வன்னிஹாமி உட்பட்ட கிராமத்தவர்களையும் தரிசிக்கின்றோம். வன்னி ஹாமி கண் பார்வை இழந்து போன நிலையிலும் அனுபவம் மிக்க ஒரு விவசாயி. அவர் நான்கு நாட்களுக்குள் மழை பெய்யும் எனக் கட்டியம் கூறுகின்றார். எதிர்காலத்தில் தனது மருமகனாக வரவுள்ள ஒருவரின் துணையோடு பருவகால மழைக்குத் தாக்கிப் பிடிக்கக் கூடிய விதத்தில் மண்குடிசையின் மைத்துப்போன கூரையை சீர் செய்வதில் ஈடுபடுகின்றார்.

வன்னிஹாமிக்கு இரண்டு பெண் பிள்ளைகளும் ஒரு மகனும் உள்ளனர். மூத்த மகளான சுமணா (நயனா ஹெட்டியாராச்சி) திருமணமாகி, வீட்டில் இருந்து வெளியிடத்தில் வாழ்கிறார். இளைய மகளான சுனந்தா (பிரியங்கா சமரவீர) கிராமத்தில் உள்ள ஒரு இளைஞனை மணம் செய்யும் எதிர்பார்ப்புடன் தந்தையுடன் வசிக்கிறாள். வன்னிஹாமியின் ஏக புத்திரன் வடக்கில் யுத்தம் செய்ய இராணுவத்தில் சேர்ந்து கொண்டுள்ளான்.

படம் பௌத்த சித்தாந்தங்களை இசைகூட்டி இசைக்கும் 'காதா' (Gathas) ஒலியுடன் (புத்தங் சரணங் கச்சாமி...) ஆரம்பிக்கின்றது. பௌத்தம் மக்கள் மீது கொண்டுள்ள செல்வாக்கின் ஆளுமை பின்னர் படத்தில் கடும் விமர்சனத்துக்கு இலக்காகின்றது. இந்தச் சித்தாந்தத்தை இசைப்பதானது பௌத்தம் வாழ்க்கையை உள்ளீர்த்துக் கொள்ளும் முறைக்கும் யுத்தத்தினால் நாசமாக்கப்பட்ட ஒரு நாட்டின் யதார்த்தத்துக்கும் இடையே இருந்து கொண்டுள்ள ஒரு மாபெரும் சமத்துவமின்மையை சினிமா ரசிகனும் புரிந்துகொள்ளச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்பது தெளிவு. இங்கு இசைக்கப்படும் சித்தாந்தக் கவிகள் "மூன்று இரத்தினங்கள்" (Triple Gems) (புத்தர், அவரின் சித்தாந்தம், அவரின் சீடர்கள் -பௌத்த பிக்குகள்) கடவுள் பக்தி கொண்டவருக்கு ஆசீர்வாதங்கள் கிட்டும் என்பதையும் அவரை ஆபத்துக்களில் இருந்து பாதுகாக்கும் என்பதையும் இது இங்கு குறித்து நிற்கின்றது. படத்தின் தொடக்கத்தில் இந்தப் பாடல் வரிகளை பின்னணி இசையுடன் சேர்த்து இசைப்பதானது இப்படத்தைத் தரிசிப்பவருக்கு பாரம்பரியமான ஒன்றைத் தவிர வேறு எந்த அர்த்தத்தையும் வழங்கும் சாத்தியத்தைக் கொண்டதாக இல்லை. அந்தக் கீதமானது காற்றினால் அள்ளிச் செல்லப்பட்டு, கிராமத்தின் தூர அடிவானத்தில் எதிரொலிப்பதாகவும் கூட ஒருவர் குறிப்பிடலாம். அது ஒரு அஜாக்கிரதையான பார்வையாளர் மீது அதன் தலைமுறைக் கணக்கான பாரம்பரிய தாக்கங்களையும் ஏற்படுத்த முடியும். மனிதன் மீது இழைக்கப்பட்ட எந்த ஒரு சமூக அட்டூழியத்தையும் சிந்திக்காது ஏற்றுக்கொள்ளச் செய்யும் விதத்தில் ஸ்தம்பிக்க வைக்கவும் செய்யும்.

### பௌர்ணமி தினம்

பௌத்தர்களுக்கு மத ரீதியில் பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்த பௌர்ணமி தினம் வருகின்றது. பௌத்தர்கள்- இந்த நாள் "உலகளாவிய ரீதியில் அஹிம்சை" (எந்த உயிருக்கும் தீங்கிழைக்கக் கூடாது) நிலவ வேண்டிய ஒரு நாள் எனக் கொள்கிறார்கள். மனித இனத்தின் சிந்தனையிலும் செயலிலும் பேச்சிலும் சாந்தம் மேலாதிக்கம் செலுத்த வேண்டிய

*அவசரகாலச் சட்டம் பிரசன்ன வித்தானகேயின் 'புரஹந்த கலுவர' திரைப்படத்துக்கு எதிராக பயன்படுத்தப்பட்டுள்ளது*

# இலங்கை அரசாங்கம் யுத்த எதிர்ப்பு திரைப்படத்தை தடை செய்துள்ளது

டயன்னே ஸ்ரேகெஸ்
ஆகஸ்ட் 7, 2000

கலையின் கருத்துச் சுதந்திரத்துக்கும் ஜனநாயக உரிமைக்கும் ஒரு நேரடியான தாக்குதலாக, பிரசன்ன வித்தானகேயினால் எழுதப்பட்டு நெறிப்படுத்தப்பட்ட ஒரு அனைத்துலகப் புகழ் பெற்ற திரைப்படமான *புரஹந்த கலுவர (பௌர்ணமி தின மரணம்)* திரைப்படத்தை இலங்கையின் பொதுஜன முன்னணி அரசாங்கம் தடைசெய்துள்ளது. இந்த திரைப்படம் ஜூலை 28ம் திகதி திரையிடப்பட இருந்த போதிலும் விசேட பணிகள் அமைச்சின் தலையீட்டின் பேரில் காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. ஏப்பிரல் கடைப் பகுதியில் யாழ்ப்பாணக் - குடா நாட்டில் ஏற்பட்ட இராணுவ பின்னடைவுகளைத் தொடர்ந்து அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்ட முதல் திரைப்படம் இதுவாகும்.

*புரஹந்த கலுவர* கடந்த வருடம் சிங்கப்பூர் திரைப்பட விழாவில், சிறந்த நடிகருக்கான விருது உட்பட பரந்தளவிலான அனைத்துலகப் பாராட்டை வெற்றி கொண்ட ஒரு திரைப்படமாகும். இது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு (LTTE) எதிரான 17 வருடகால யுத்தம், ஒரு பார்வை இழந்த ஒடுக்கப்பட்ட ஏழை சிங்களக் கிராமத்தவர் மீது ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பான சக்திவாய்ந்த ஒரு சிருஷ்டியாகும். தனது பிரதேசத்தில் தொழில் கிடைக்காத காரணத்தால் இராணுவத்தில் சேரத் தள்ளப்பட்ட அந்தக் கிராமவாசியின் மகன், இராணுவ நடவடிக்கையொன்றில் கொல்லப்படுகின்றான். அரசாங்கம் வழங்கிய நஷ்டஈட்டை நிராகரிக்கும் தந்தை, தனது மகன் இறந்து போய்விட்டதையும் நம்ப மறுக்கின்றார்.

பொதுஜன முன்னணியின் விசேட பணிகள் அமைச்சர் சரத் அமுனுகம, விதானகேயின் திரைப்படத்தை ஜூலை 21ம் திகதி தடை செய்தார். படம் திரையிடப்படுவதை நிறுத்துவதற்கு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட முயற்சி, அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட தொடர்பு சாதனங்கள் மீதான தணிக்கை, சட்டத்துக்கு ஒவ்வாதது என மே 3ம் திகதி உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைத் தொடர்ந்து பலனற்றதாகியது. அரசாங்கத்தின் தொடர்புசாதன தணிக்கைக்கான தகுதிவாய்ந்த அதிகாரி நீதிமன்றத் தீர்ப்பிற்கு இணங்கும் வகையில் குறிப்பிட்டதாவது: தொடர்பு சாதனங்கள் "யுத்தம் சம்பந்தமான" விபரங்களை வெளியிடும் போது "சுய தணிக்கை" யை கடைப்பிடிக்க வேண்டும் அல்லது குற்றச்சாட்டுகளுக்கு முகம் கொடுக்க வேண்டும்.

இந்தத் தீர்ப்பு தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனத்துக்கு (NFC) பிரயோகிக்கப்பட்டபோது, பலம்வாய்ந்த பொதுஜன கோரிக்கைகளுக்கு மத்தியில் ஜூலை 28ம் திகதி தொடக்கம் வித்தானகேயின் திரைப்படத்தை வெளியிட திரைப்படக் கூட்டுத்தாபனம் தள்ளிப்போட்டது. ஜூலை 17ல், திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் திஸ்ஸ அபேசேகர திரைப்படத்தை வெளியிடுவது தொடர்பான சில பம்மாத்துகளின் பேரில் ஒரு பத்திரிகையாளர் மகாநாட்டிற்கு அழைப்பு விடுத்தார். உண்மையில் திரைப்படம் சட்டரீதியில் அல்லது சட்டவிரோதமான தாக்குதல்களுக்கு இலக்காகுமானால் அதைப் பாதுகாப்பதற்கான தயாரிப்புகள் எதுவும் இடம்பெறவில்லை என்பதை தே.தி.கூ. தலைவர் தெளிவுபடுத்தினார்.

தகுதிவாய்ந்த அதிகாரியால் அனுப்பிவைக்கப்பட்டிருந்த ஒரு கடிதத்தை திஸ்ஸ அபேசேகர வாசித்தார். அதில், எதிர்காலத்தில் இடம்பெறவிருக்கும் புரஹந்த கலுவர திரையிடல்களுக்கு தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனமும் பிரசன்ன வித்தானகேயுமே பொறுப்பு எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் இறுதிப் பொறுப்பு தயாரிப்பாளர் மீதே சுமத்தப்பட்டுள்ளதாக கூட்டுத்தாபனத்தின் தலைவர் குறிப்பிட்டார்.

பயமுறுத்தல்களை நிராகரித்த வித்தானகே, திட்டமிட்டபடி ஜூலை 28ம் திகதி திரைப்படம் திரையிடப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

அவர் பத்திரிகையாளர் மகாநாட்டில் உரையாற்றுகையில், "பொறுப்பு வாய்ந்த பதவியில் உள்ளவர்கள் அதன் பெறுமதியை (*புறஹந்த கலுவர*) உணராததனால்' திரைப்படம் அனைத்துலக ரீதியில் பெற்றுக் கொண்ட பரிசில்களையும் பாராட்டுக்களையும் பற்றி நான் பேசப்போவதில்லை. கலைஞர்களின் சொந்தக் கருத்துச் சுதந்திரத்துக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைப் பற்றி மட்டுமே நான் பேசுவேன். இந்தத் திரைப்படத்தை திரையிடும் போது இராணுவத்தினரின் மனோதிடத்தையிட்டு எனக்கு அக்கறையில்லை.

"இலங்கையில் நான் கண்ட ஆழமான சமூகப் பிரச்சினைகளின் தாக்கத்தை என் திரைப்படத்தின் ஊடாக மீள நிர்மாணம் செய்வதில் நான் தற்போது ஈடுபட்டுள்ளேன். எனது திரைப்படத்தில் இடம்பெற்றுள்ள பாத்திர வார்ப்புகளும் ஏனையவையும் இன்னமும் கிராமங்களில் இடம்பெற்று வருபவை. நான் எனது படத்தை திரையிடாமல் அவர்களின் உண்மையான அபிலாஷைகளை பலவந்தமாக என்னுள் முடக்கிக் கொள்வதா?

"அரசாங்கம் சமாதானம் அவசியம் என சொல்லும் போது சமாதானத்திற்காக எதையாவது நிர்மாணிக்கவும், யுத்தம் அவசியம் என சொல்லும்போது யுத்தத்துக்காக எதையாவது நிர்மாணிக்கவும்- கலைஞர்கள் அரசாங்கத்தின் கோரிக்கைகளுக்கு இணங்க திரைப்படங்களை தயாரிக்க வேண்டிய அவசியம் இல்லை.

திரைப்படங்கள் மீதான இனவாதக் குண்டர்களின் தாக்குதல் அச்சுறுத்தல்களின் போது அரசாங்கத்தினதும் திரைப்படக் கூட்டுத்தாபனத்தினதும் பிரதிபலிப்புக்கள் எவ்வாறு அமைய வேண்டும் என ஒரு பத்திரிகையாளர் கேள்வியெழுப்பிய போது, அபேசேகர பல அர்த்தத்தில் குறிப்பிட்டதாவது: "விளம்பரப் பலகைகளுக்கு தீ மூட்டியும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டு பொடியாக்கியது எப்படி?

அன்றைய தினம் வன்னிஹாமியின் மகனது சவப் பெட்டி கிராமத்துக்கு வந்து சேர்கிறது. திரைப்படம் முக்கியமாக தனது மகனின் மரணம் பற்றிய வன்னிஹாமியின் உணர்வுகளைத் தொட்டுக் காட்டுகின்றது. தனது மகன் யுத்தத்தில் கொல்லப்பட்டு விட்டான் என்ற சகல சாட்சிகளுக்கும் முரணான விதத்தில் அவர் அதை நம்ப மறுக்கும் விதத்தைச் சிறப்பாகக் காட்டுகின்றது. இறந்த படையாளின் குடும்பத்தின் அங்கத்தவர்களுக்கு நஷ்டஈடாக வழங்கப்பட்ட பணத்தையும் வன்னி ஹாமி ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்.

அங்குதான் திரைப்படத்தின் முக்கியமான அடிப்படை இருந்து கொண்டுள்ளது. வடக்கில் இடம்பெறும் யுத்தம் தமது யுத்தம் என மக்களால் கணிக்கப்படவில்லை. சாதாரண மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் எந்த ஒரு பாத்திரமும் யுத்தத்தில் கலந்து கொள்வதையிட்டோ அல்லது அதை வெற்றி கொள்வதையிட்டோ உணர்ச்சி வசப்பட்டுப் பேசுவதாக இல்லை. இது உண்மையில் அவர்களின் அடிப்படை அவசியங்களுக்கு அப்பாற்பட்டது. ஆனால் அது அதே சமயம் வாழ்க்கை நிலைமைகள் பெரிதும் கஷ்டமானதும் பிரச்சினைக்கு உரியதுமானதாகும் போது ஒரு ஜீவனத்துக்கு "அவசியமான கெடுதியாக" வரும் விதத்தில் கபடத்தனமான முறையில் நிர்வகிக்கப்படுகின்றது.

யுத்தத்துக்கு ஆதரவான ஒரே பாத்திரமாக கிராம விகாரையின் பௌத்த பிக்குவே விளங்குகின்றார். அந்த பௌத்த பிக்குவே யுத்தத்துக்கு ஆதரவான தேசாபிமான உரை நிகழ்த்துகின்றார். அவர் வேறு சில கிராமவாசிகளுடன் துயரத்தில் ஆழ்ந்து போன வன்னி ஹாமியிடம் விஜயம் செய்கின்றார். இந்தப் பிக்கு தாய் நாட்டுக்காகத் தன்னை அர்ப்பணம் செய்து கொண்ட படையாளான வன்னிஹாமியின் மகனை கௌரவிக்கும் விதத்தில் ஒரு பஸ்தரிப்பு ஒதுங்கிடத்தை (A bus shelter) அமைக்க வேண்டும் என கிராமவாசிகளிடம் கூறுகின்றார். ஒரு பஸ்தரிப்பு ஒதுங்கிடத்தை எதற்காகத்தான் அமைத்தாலும் அது மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என வன்னிஹாமி எடுத்த எடுப்பில் பதிலளிக்கின்றார்.

இத்திரைப்படம் கிராமவாசிகள் பொருளாதார ரீதியில் அவஸ்தைக்குள் தள்ளப்பட்டுள்ள ஒரு நிலைமையில் மட்டுமே இராணுவத்தில் சேர முயற்சிக்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. உதாரணமாக வன்னிஹாமியின் எதிர்கால மருமகனாக வர இருப்பவர், இந்த நிலை இப்படியே தொடருமானால் தானும் இராணுவத்தில் சேரவேண்டி நேரிடும் எனக் கூறுகின்றார். வன்னிஹாமியின் மகன் இராணுவத்தில் சேர்ந்தது, தனது குடும்பத்துக்கென ஒரு நல்ல வீட்டைக் கட்டவும், தனது இளைய சகோதரிக்கு ஒரு கண்ணியமான திருமணத்தை செய்து வைப்பதை உத்தரவாதம் செய்யும் நோக்கத்துடனுமே. யுத்த முனையில் இருந்து இளைஞன் அனுப்பிவைத்த கடிதம் அவனின் மரணத்தின் பின்னரே குடும்பத்துக்குக் கிடைக்கிறது. கடிதம் அவன் விரைவில் வீடு திரும்ப உள்ள விருப்பையும் தனது பொறுப்புக்களை நிறைவேற்றி வைப்பதில் ஈடுபட முடியும் என்பதையும் தெரிவிக்கின்றது. வன்னிஹாமி இந்தக் கடிதத்தில் தொங்கிக் கொள்கிறார். ஏனெனில் அது அவரது மகன் இறந்து போய்விடவில்லை என்ற அவரின் நம்பிக்கையினை மீண்டும் ஊர்ஜிதம் செய்கின்றது. சவப்பெட்டி. அதிகாரிகளால் "சீல்" வைக்கப்பட்ட நிலையில் வந்து சேர்கின்றது. அத்தோடு எவரும் மையத்தின் மிச்ச சொச்சங்களை பார்க்க முடியாது உள்ளமையானது முதியவரின் திட நம்பிக்கையை மேலும் பலப்படுத்துகின்றது. தனது மகன் இறந்து போய்விட்டான் என்பதை ஏற்றுக் கொள்ள வன்னிஹாமி மறுப்பதானது வாழ்க்கை பற்றிய அவரின் சொந்த மனோபாவத்துடன் பிணைந்துகொண்டுள்ளது. வன்னிஹாமி அவரின் பார்வையிழந்த பரிதாபமான உடல் பலவீனத்துக்கிடையேயும் படத்தின் சகல காட்சிகளிலும் வெற்றியீட்டிக் கொண்டுள்ளார். அவர் வயலில் வீழ்ந்து, கிராமத்தவர்களால் வீட்டுக்குத் தூக்கிச் செல்லப்படும் போது மட்டுமே நாம் அவரை ஒரு வலது குறைந்தவராகக் காண்கின்றோம். மற்றைய தருணங்களில் அவரின் சுறுசுறுப்பும், உஜாரும், சுயநம்பிக்கையும் அந்தளவுக்கு உயர்ந்து விளங்குவதால் பார்வையாளர்கள் வன்னிஹாமி ஒரு குருடர் என்பதை மறந்து போய்விடுகின்றார்கள். அவர் எதுவித சிரமமும் இல்லாத விதத்தில் படத்தில் ஒரு பலம் வாய்ந்த கதாபாத்திரமாக நின்று கொள்கிறார். கஷ்டங்களை வெற்றிகொள்ளும் தனது சக்தியில் வன்னிஹாமி கொண்டுள்ள நம்பிக்கை அவரை தனது மகனைப் பற்றி அத்தகைய விசுவாசம் கொள்ளச் செய்கின்றது. தனது குடும்பத்தின் முன்னோடிகளில் ஓடிய இரத்தம் தனது நரம்புகளிலும் தனது மகனின் நரம்புகளிலும் கூட ஓடிக் கொண்டுள்ளதாக அவர் கூறுகின்றார்.

இறந்து போன இளைஞனின் பேரில் ஒரு தானம் கொடுக்கும் வைபவம் இடம்பெறுவதற்கு ஒரு சில தினங்களுக்கு முன்னர், இரண்டு படையாட்கள், இருட்டில் வருகை தருகின்றனர். தாம் தானத்தின் பேரில் ஒரு அன்பளிப்பைக் கொண்டு வந்துள்ளதைக் கூற தனது குடிசையின் முன்னால் இருந்து கொண்டுள்ள வன்னிஹாமியை நெருங்குகின்றனர். அவரது மகனின் இராணுவப் பிரிவு அங்கத்தவர்கள் இந்த அன்பளிப்பை வழங்கியதாக அவர்கள் விளக்குகின்றனர். அவரின் மகனின் மரணத்தை நிரூபிக்கும் இந்தப் புதியதும் மறுக்க முடியாததுமான சாட்சியத்தை எதிர்கொள்ள முடியாமல் முதியவர் திண்டாடுவதை நாம் காண்கின்றோம். இது படத்தில் மனதை உருக்கும் மிகவும் சக்திவாய்ந்த ஒரு கட்டமாகும்.

மறுநாள் அதிகாலை அடி வானம் சிறிது செந்நிறமாக நிறம் பெயர்ந்தது தான் தாமதம் வன்னிஹாமி தனது மண்வெட்டியை தோளில் போட்டுக் கொண்டு வயல்புறமாகச் செல்வதை நாம் காண்கின்றோம். நாம் தனது மகன் இறந்து போனான் என்ற உண்மையை வன்னிஹாமி இறுதியாக ஒப்புக்கொண்டுவிட்டாரோ என ஆச்சரியப்படுகின்றோம். ஆனால் எதிர்பாராத ஒன்று இடம்பெறுகின்றது. வன்னிஹாமி தனது மகனின் புதைகுழிக்குச் சென்று அதைத் தோண்டத் தொடங்குகின்றார்.

இது இலங்கை அரசினால் எதிர்பாராத விதத்திலும் பலாத்காரமான முறையிலும் யுத்தம் திணிக்கப்பட்டுள்ளதைத் தெளிவுபடுத்துகின்றது. இலங்கையில் இடம் பெறும் உள்நாட்டு யுத்தம் மனிதன் மீது ஏற்படுத்தும் தாக்கங்களைப் புரிந்து கொள்ள முயலும் ஒவ்வொருவரும் நிச்சயம் பார்க்க வேண்டிய படம், *'புர ஹந்த கலுவர'.*

தண்ணீர் அள்ளக் கிராமக் குளத்துக்கு வந்த ஒரு பெண் வன்னிஹாமியை கண்டுவிடுகிறாள். அதைக் கிராமத்தவர்களுக்குத் தெரிவிக்கின்றாள். அவர்கள் உடனடியாக ஸ்தலத்துக்குச் சென்று சவப்பெட்டியை தோண்டி எடுக்கும் பணியில் ஈடுபடுகின்றார்கள். வன்னிஹாமியை சீண்டிவிட்டுக் கொண்டுள்ள சந்தேகங்களைத் தணிய வைக்கும் நோக்குடன் அவர்கள் ஈடுபட்டுள்ளது தெளிவாகின்றது. அவர்கள் சவப்பெட்டியை தோண்டி எடுத்து. 'சீலை' உடைத்து. அதனைத் திறக்கின்றார்கள். இடம் பெற்று வரும் சகலதையும் கண்டு உத்சாகமாக இருந்து வந்த வன்னிஹாமி, சவப் பெட்டிக்குள் கை வைத்து அதனுள் இருப்பதை தடவுகின்றார். சவப் பெட்டிக்குள் சில மரக்கட்டைத் துண்டுகளும் ஒரு பெரும் கல்லுமே கிடந்தன. வன்னிஹாமியின் மகனின் மரணத்தை நிரூபிக்கும் எதுவுமே இருக்கவில்லை. சுடலையில் இருந்து வன்னிஹாமி வெளியேறும் போது அவர் ஒரு தோல்வி கண்டவராகவோ அல்லது மனமுடைந்து போனவராகவோ இல்லை. தனது மகன் இன்னமும் உயிருடன் இருக்கின்றான் என்பதில் நம்பிக்கை கொண்டவராக அவர் இருப்பது தெளிவாகின்றது.

19ம் பக்கம் பார்க்க



பிரசன்ன வித்தானகே

"அவர் குறிப்பிடுவது தவறானது. நான் எந்தவித சுய தணிக்கையையும் செய்துகொள்ளவில்லை" என வித்தானகே குறிப்பிட்டார். "இராணுவத்தினரதும், பாதுகாப்பு அமைச்சினதும் விசனத்திற்கு மத்தியில் திரைப்படம் உருவாக்கப்பட்டதனால், தணிக்கை குழு அதனை தடை செய்யும் ஆபத்து நிச்சயம் இருந்து கொண்டுள்ளதை எண்ணி நான் எச்சரிக்கையாக இருந்தேன். சர்வதேசத் திரைப்பட விழாக்களில் திரையிடுவதன் மூலம் அனைத்துலக அவதானத்தையும் பாராட்டுக்களையும் பயன்படுத்தி உள்நாட்டில் திரையிடுவதற்கு தடைவிதிக்கும் ஆபத்தில் இருந்து தப்பிக்கொள்வதே எனது நோக்கமாக இருந்தது".

ஆனால் பத்திரிகையாளர் மகாநாட்டில் "சுய தணிக்கையை" நிராகரிப்பதாக வித்தானகே அறிவித்த நான்கு நாட்களின் பின்னரும், படம் உத்தியோகபூர்வமாக திரையிடப்பட இருந்த ஒரு வாரத்திற்கு முன்னரும், திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரத்தின் கீழ், திரையிடப்படுவது காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட வேண்டும் என விசேட பணிகளுக்கான அமைச்சர் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு எழுத்து மூலம் பணித்திருந்தார். அமுனுகமவின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது: "நாடு தற்போது யுத்த சூழ்நிலையில் உள்ளதைக் கருத்தில் கொண்டு இந்த பணிப்புரையை நான் விடுக்கின்றேன்."

தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத வேறுவிதமான இடையூறுகளையும் ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். இறுதி தீர்மானமானது திரைப்படக் கூட்டுத்தாபனத்தினதோ, நீதிமன்றத்தினதோ அல்லது கலைஞனினதோ கைகளில் அல்லாது, மக்களின் கைகளிலேயே உள்ளது. இந்த திரைப்படம் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்களுக்கு உளவியல் தாக்கத்தையோ அல்லது எதேச்சையான கோபத்தையோ தூண்டிவிடுமானால் அதற்கு முகம் கொடுக்க வேண்டி நேரிடும். மனித இனத்திற்கு அவதூறு விளைவிப்பதாக அமையுமானால், மக்களிடமிருந்து தப்பிக்க வழியில்லை."

திரைப்படத்தை தயாரித்த பின்னர் ஒன்றரை வருடகாலமாக தணிக்கை சபைக்கு முன்வைக்காத காரணத்தினால் வித்தானகே "சுய தணிக்கை" செய்துகொண்டதாக அபேசேகர தெரிவித்தார். ஆனால் செய்தியாளர் மகாநாட்டிற்குப் பின்னர், வித்தானகே உலக சோசலிச வலைத் தளத்திற்கு வழங்கிய பேட்டியில் திரைப்படக் கூட்டுத்தாபனத் தலைவரின் கருத்தை நிராகரித்தார்.

யுத்தத்தை நேரடியாகச் சவால் செய்யும், கிராமப்புற சிங்கள ஏழைகள் மற்றும் இளைஞர்களை துன்பத்தில் ஆழ்த்தும் அரச அதிகாரத்துவத்தினதும் பௌத்த பிக்குகளினதும் நடவடிக்கைகளையும் வெளிக்கொணரும் *புரஹந்த கலுவர*, தனது யுத்த நடவடிக்கைகளுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் என பொதுஜன முன்னணி அரசாங்கமும் ஏனைய இலங்கையின் ஆளும் வர்க்கங்களும் பீதி கொண்டுள்ளன. தமிழர் விரோத இனவாதத்தை தூண்டிவிடுவதற்காக, அரசாங்கத்தினாலும் ஏனைய வலதுசாரி குழுக்களினாலும் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு எதிராக, தெற்கில் யுத்தத்துக்கு எதிரான சிங்கள மக்களின் எதிர்ப்பும் வளர்ச்சி கண்டுவருகின்றது. இது இராணுவத்தை விட்டு ஓட்டம் பிடிப்பவர்களின் தொகையின் அதிகரிப்பு, வீழ்ச்சியடைந்து வரும் மனோதிடம், இராணுவத்தினர் பிரிந்து செல்லல் என்பவற்றால் இராணுவத்தினர் மத்தியில் நெருக்கடி உருவாகியுள்ளது. பங்களாதேஷ், கனடா, பிரான்ஸ், நோர்வே, சுவிற்சலாந்து, துருக்கி, ஐக்கிய அரேபியா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் தொடர்ச்சியாகத் திரையிடப்பட்ட *புரஹந்த கலுவர* திரைப்படத்தை தடை செய்யும் தீர்மானமானது, அனைத்துலகக் கலைஞர்களுக்கும் ஜனநாயக உரிமைகளுக்கும் எதிராகத் தொடுக்கப்படும் மோசமான தாக்குதலாக அமைவதோடு, இலங்கையின் தொழிலாளர்- ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு எதிரான தொடர்ச்சியான தாக்குதல்களுக்கான முன் எச்சரிக்கையாகவும் விளங்குகின்றது. *உலக சோசலிச வலைத் தளம்* (WSWS) திரைப்படத் தயாரிப்பாளர்கள், கலைஞர்கள், மாணவர்கள் தொழிலாளர்களை அனைத்துலக ரீதியிலும், தேசிய ரீதியிலும் *புரஹந்த கலுவர* மீதான தடைக்கு எதிர்ப்புத் தெரிவிக்க முன்வருமாறு அழைப்பு விடுக்கும் அதே வேளை, திரைப்படத்தை இலங்கையில் திரையிடுவதற்கு பிரசன்ன வித்தானகேக்கு உள்ள உரிமையைக் காப்பது தொடர்பாக ஒரு நிலைப்பாட்டை எடுக்குமாறும் வேண்டுகின்றது. இந்தத் தடை சவால் செய்யப்பட்டு, தோற்கடிக்கப்படாவிட்டால் அரசாங்கம் தனக்கு ஆபத்தானதாகக் கருதும் அனைத்துலகத் திரைப்படங்களையும் ஏனைய கலைப் படைப்புகளையும் தணிக்கை செய்வதற்கு முயற்சி செய்யும்.

உங்களின் கண்டனக் கடிதங்களையும் அறிக்கைகளையும் அஞ்சல் அல்லது பக்ஸ் மூலம் அனுப்புங்கள்:

சரத் அமுனுகம,
வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர்,
இலக்கம் 14, நான்காம் மாடி
BOI கட்டிடம்
சேர் பாரொன் ஜயதிலக மாவத்த
கொழும்பு-1
இலங்கை.
பக்ஸ்: 94-1-424109

திஸ்ஸ அபேசேகர,
இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்,
224, பௌத்தலோக மாவத்த,
கொழும்பு-07
இலங்கை
பக்ஸ்: 94-1-585526
மின்னஞ்சல்: filmcorporation@net.lk

தயவுசெய்து உங்கள் கண்டனக் கடிதங்களினதும் அறிக்கைகளினதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பொதுஜன முன்னணி அரசாங்கம் சிங்கள சோவினிஸ்டுகள் பக்கம் திரும்பியுள்ளது

சரத்குமார, கே.ரத்னாயக
ஆகஸ்ட் 18, 2000

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பொதுஜன முன்னணி அரசாங்கம், அதனது அரசியலமைப்பு சீர்திருத்தப் பொதியை வாபஸ் பெற்றதைத் தொடர்ந்து அது இரண்டு தோணியில் கால்வைக்கும் கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்றது. இந்த அரசியல் பொதி தமிழ் மக்கள் வாழும் வடக்கு-கிழக்கு மாகாணங்களிலான கடந்த 17 வருடகால யுத்தத்தை முடிவுக்கு கொணர்வதை இலக்காகக் கொண்டு இருந்தது.

ஒரு புறத்தில் இது அரசியலமைப்பு திருத்த மசோதாவை வாபஸ் பெறத் தள்ளிய இனவாத பௌத்த பிக்குகளதும் சிங்கள சோவினிச குழுக்களதும் பிரச்சார இயக்கத்தை குற்றம் சாட்டுகிறது. மறுபுறத்தில் இது ஒரு புதிய யோசனைகளைக் கொண்ட மசோதாவை அறிமுகம் செய்வதன் மூலம் யுத்தத்தை முடிவுக்கு கொணரும்படி கோரும் இந்தியா, மேற்கத்தைய வல்லரசுகளையும் திருப்திப்படுத்த முயற்சிக்கின்றது.

சிங்கள சோவினிஸ்டுகளுக்கு ஆதரவு தரும் ஒரு பெரும் நடவடிக்கையாக குமாரதுங்க நோய்வாய்ப்பட்ட தனது 84 வயது தாயார் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை பிரதமர் பதவியில் இருந்து நீக்கி விட்டு அந்த இடத்துக்கு தமது நீண்ட கால சகாவான ரத்னசிரி விக்கிரமநாயக்காவை நியமனம் செய்துள்ளார். இச்சம்பவம் தொடர்பான அரசாங்க அறிக்கைகளின்படி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தாமாகவே பிரதமர் பதவியில் இருந்து விலகிக் கொண்டதாகக் கூறப்பட்டது. ஆனால் ஜனாதிபதி குமாரதுங்கவின் தம்பியான அனுர பண்டாரநாயக்க (ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவர்) தாயார் பதவி விலகும்படி நெருக்கப்பட்டதாகக் கூறியுள்ளார்.

இந்த மாற்றத்துக்கு பின்னணியில் இருந்து செயற்பட்ட தில்லுமுல்லுகள் என்னவாக இருந்த போதிலும் விக்கிரமநாயக்க பௌத்த பிக்குகளுடனும் சிங்கள அமைப்புக்களுடனும் கொண்டுள்ள நெருக்கமான உறவுகளின் காரணமாகவே இப்பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவர் பொதுஜன முன்னணி கூட்டரசாங்கத்தின் முக்கிய கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய புள்ளியாவார். 1994ல் சந்திரிகா குமாரதுங்க தமது தாயாரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து வெளியேற நெருக்கிய வேளையில் இவர் முக்கிய புள்ளியாக விளங்கினார். இது ஒரு புதிய கூட்டணியை அமைத்ததோடு அதே ஆண்டில் இடம்பெற்ற தேர்தலில் யூ.என்.பி.யின் இடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டது.

பிரதமர் பதவிப் பிரமாணம் செய்து கொண்டு நிகழ்த்திய தமது கன்னிப் பேச்சில் விக்கிரமநாயக்க, "வடக்கு-கிழக்கில் ஒரு தனிநாடு கோரும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் தொடரும். "ஜனநாயகமும் பயங்கரவாதமும் கைகோர்த்துச் செல்லமுடியாது" என குறிப்பிட்டார். "ஆதலால் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவதற்கான ஒரே வழி யுத்தம் மட்டுமே. எவ்வாறெனினும் சிறுபான்மையினருக்கு ஏதும் குறைபாடுகள் இருக்குமேயானால் நாம் அவற்றுக்கு தீர்வு காணவேண்டும்".

புதிய பிரதமரின் முதலாவது நடவடிக்கைகளில் ஒன்றாக முன்னணி பௌத்த பீடாதிபதிகளை தரிசிக்கும் விஜயம் விளங்கியது. அவர்களை சந்திப்பதில் விக்கிரமநாயக்கவுக்கு எதுவித பிரச்சினையும் இருக்கவில்லை. இந்தப் பீடாதிபதிகள் அரசியலமைப்பு பொதிக்கு எதிரான தமது பிரச்சார இயக்கத்தின் உச்சக் கட்டத்தில் இவர்கள் ஜனாதிபதியை சந்திக்க மறுப்புத் தெரிவித்திருந்தனர்.

இந்தப் பௌத்த பிக்குகளை இந்த மசோதாவுக்கான திருத்தங்களை முன்வைக்கும்படி கோரி அழைப்பு விடுக்கையில் விக்கிரமநாயக்க கூறியதாவது: "நாம் இந்த அரசியலமைப்பு வரைவின் ஒவ்வொரு பந்திக்கும், சரத்துக்கும், வரிக்கு வரியும் மகாநாயக தேரர்களின் கருத்துக்களை வேண்டுகின்றோம். அப்போது அவர்கள் நாம் எங்கே தவறு இழைத்துள்ளோம் என்பதைச் சுட்டிக்காட்டி திருத்த முடியும்". அத்தோடு விக்கிரமநாயக்க தமது தலைமையில் இந்த (அரசியலமைப்பு) சீர்திருத்த யோசனைகளில் "பிரச்சினைக்குரிய பகுதிகளை மீளாய்வு செய்யும்" ஒரு அமைச்சரவை உப-குழுவையும் நியமனம் செய்தார்.

பிரதமர் பதவியை பொறுப்பேற்றதன் மூலம் விக்கிரமநாயக்கா நான்கு தசாப்தங்களுக்கு மேலாக சிங்கள சோவினிச அரசியலில் ஈடுபாடு கொண்ட தமது வரலாற்றையும் தம்முடன் சேர்த்துக் கொண்டுள்ளார்.


விக்கிரமநாயக்க 1960 மார்ச்சில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் மக்கள் ஐக்கிய முன்னணியின் (MEP) ஒரு முக்கிய அங்கத்தவராக போட்டியிட்டதன் மூலம் தேசிய அரசியலில் நுழைந்தார். இக்கட்சி சிங்கள பௌத்தர்களின் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக் கொண்டது. 1962ல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் சேர்ந்த இவர் 1970-77 கூட்டரசாங்க காலப்பகுதியில் பிரதி அமைச்சர், அமைச்சர் பதவிகளை வகித்தார். 1977ல் ஸ்ரீ.ல.சு.க. பொதுச் செயலாளராக நியமனம் செய்யப்பட்டார்.

1977 பொதுத் தேர்தலை தொடர்ந்து ஸ்ரீ.ல.சு.க. எட்டு எம்.பீ. க்களை மட்டும் கொண்ட ஒல்லியாகிப் போன வேளையிலும் அதனது அன்றைய பாராளுமன்ற தலைவர் அனுர பண்டாரநாயக்க யூ.என்.பி.பக்கம் சாய்ந்து வந்த வேளையிலும் சந்திரிகா குமாரதுங்கவும் அவரது கணவரும் ஒரு தீவிரவாத வேஷம் போட்டுக் கொண்டனர். தொழிற்சங்கங்களை அணிதிரட்டவும் யூ.என்.பி.க்கு எதிரான பிரச்சாரத்துக்கும் அழைப்பு விடுத்தனர். விக்கிரமநாயக்க ஸ்ரீ.ல.சு.க.வில் இருந்து பிரிந்து ஸ்ரீலங்கா மக்கள் கட்சியை அமைப்பதில் ஈடுபட்டார். குமாரதுங்கவுடன் சேர்ந்து அவர் 1993ல் மீண்டும் ஸ்ரீ.ல.சு.க.வுக்கு திரும்பினார்.

சிங்கள சோவினிஸ்டுகளின் அக்கறைக்குரிய முக்கிய விடயங்களில் ஒன்றான அதிகாரப் பகிர்வு பொதியின் உத்தேச காணிக் கொள்கை தொடர்பாக விக்கிரமநாயக கருத்து வேறுபாடுகள் கொண்டவராக காட்டிக் கொண்டார். ஆனால் மத்திய அரசாங்கம் காணிகள் மீதான கட்டுப்பாடுகளை கொண்டிருப்பதை உத்தரவாதம் செய்யும் விதத்தில் கொள்கை திருத்தம் செய்யப்பட்ட போது அவர் இதற்கு ஆதரவு வழங்கினார்.

## சோவினிஸ்டுகள் எச்சரிக்கை

இந்த அரசியல் தீர்வுப் பொதியை மீண்டும் அறிமுகம் செய்ய வேண்டாம் எனவும் அங்ஙனம் செய்தால் அதற்கு எதிரான ஒரு முழுப் பிரச்சார இயக்கத்தில் இறங்குவோம் எனவும் சிங்கள-பௌத்த சக்திகள் எச்சரிக்கை செய்ததைத் தொடர்ந்து குமாரதுங்க சிங்கள- பௌத்த சக்திகளுடனான உறவுகளை புதுப்பிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். நான்கு பௌத்த பீடங்களைச் சேர்ந்த மகாநாயக்க தேரர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு கடிதத்தை அனுப்பி வைத்ததோடு இந்த மசோதா தமிழ் சிறுபான்மையினர்களுக்கு



புதிய பிரதமர் ரத்னசிரி விக்கிரமநாயக மாஜி பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவிடம் நல்லாசி பெறுகிறார்

வசதிவாய்ப்புக்களை வழங்குவதால் அவர்கள் இதை எதிர்த்து வாக்களிக்க வேண்டும் எனவும் அதில் வலியுறுத்தினர்.

ஆனால் குமாரதுங்க இந்தியாவுடன் சேர்ந்து பெரும் மேற்கத்தைய நாடுகளிடமிருந்து வந்த கோரிக்கைகளுக்கும் -யுத்தத்துக்கு ஒரு தீர்வுகாணும்படி- முகம் கொடுத்துள்ளார். இது ஆகஸ்ட் 11ம் திகதி தேசிய தொலைக்காட்சி சேவைக்கு ஜனாதிபதி வழங்கிய 1 1/2 மணித்தியால சிறப்புப் பேட்டியில் பிரதிபலித்தது. அதில் அவர் அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

குமாரதுங்க "சிங்கள உறுமய கட்சி போன்ற இனவாதிகள்" தனக்கு எதிராக சேறை வாரி அடிக்கும் முயற்சியில் வீதியில் இறங்கியுள்ளதாக" கண்டனம் செய்ததோடு "இராணுவ எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை நிரப்ப அவசியமான 20,000 ஆட்களை திரட்ட தங்களது உழைப்பை "இனவாதிகளும் பிக்குகளும்" செலவிடுவார்களா எனவும் சவால் செய்தார்.

"இந்த பிக்குகள் சம்பளங்களை அரைவாசியாக வெட்டவும் சகல அபிவிருத்தி திட்டங்களை நிறுத்தவும் அடுத்து வரும் 2 1/2 வருடங்களுக்கு எந்த ஒரு புதிய தொழில் வாய்ப்பும் வழங்காது இருக்கவும் சகல பணத்தையும் யுத்தத்துக்கு திருப்பி பணியை முடித்து வைக்கவும் என்னுடனும் எனது அமைச்சர்களுடனும் சேர வேண்டும்" எனவும் அவர் பிரகடனம் செய்தார். அத்தோடு அவர் "இன்னும் சில வருடத்தில் மற்றொரு பிரபாகரன் (LTTE) வருவார்" என எச்சரிக்கை செய்ததோடு "எமக்கு ஒரு தீர்வு வேண்டும்" எனவும் தெரிவித்தார்.

சிங்கள பௌத்த அமைப்புக்களில் சில ஏற்கனவே ஜனாதிபதியின் சவாலை ஏற்றுக்கொள்ள தமது உஜார் நிலையை காட்டிக் கொண்டுள்ளன. சோவினிச சக்திகளை தாக்கும் அதே வேளையில் குமாரதுங்க தாம் "சிங்கள பௌத்தர்களின் இதயம்" என தொலைக்காட்சி பார்வையாளர்களுக்கு கூறிவைக்கப் பெரிதும் சிரமப்பட்டார்.

இந்தத் தொலைக்காட்சி பேட்டியின் போது ஜனாதிபதி அரசியலமைப்பு திருத்த மசோதாவை நிறைவேற்ற முடியாமல் போனமை அரசாங்கத்துக்கு ஒரு பின்னடைவாகும் என்பதை ஒப்புக் கொண்டார். மேற்கத்தைய வல்லரசுகளும் உள்நாட்டு வர்த்தக நிறுவனங்களும் இரு கட்சிகளும் தமது போட்டியை நிறுத்தி ஒரு "இணக்கப்பாட்டுக்கு" வர வேண்டும் என்ற கோரிக்கைகளின் எதிரில் யூ.என்.பி. பொதுஜன முன்னணியை ஏமாற்றி விட்டதாக அவர் தெரிவித்தார். அக்டோபரில் இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் தனது அரசாங்கம் ஆட்சிக்கு வருமேயானால் அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்க உள்ளதாக குமாரதுங்க தெரிவித்தார்.

அரசியலமைப்புத் திருத்தத்துக்கு அவசியமான 2/3 பங்கு பெரும்பான்மை ஆசனங்களை பராளுமன்றத்தில் பொதுஜன முன்னணி கைப்பற்றாது, சிறுபான்மை பலத்தை பெறுமிடத்து அது பாராளுமன்றத்தை ஒரு "அரசியலமைப்பு நிர்ணய சபை"யாக மாற்றும் எனவும், அங்கு சாதாரண பெரும்பான்மையே அவசியம் எனவும், அதன் மூலம் மாற்றங்களை நடைமுறைக்கிடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இந்தப் பாணியிலான ஜனநாயக விரோத திருகுதாளங்களை இதற்கு முன்னரும் கண்டுள்ளது. 1972ல் ஆட்சிக்கு வந்த கூட்டரசாங்கம் - தொழிலாளர் வர்க்க கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட்டுக் கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில்- பாராளுமன்றத்துக்கு வெளியே "அரசியலமைப்பு நிர்ணய சபை" என்ற பெயரில் கூடி சிங்களத்தை அரச மொழியாகவும் பௌத்தத்தை அரச மதமாகவும் ஸ்தாபிதம் செய்யும் ஒரு இனவாத அரசியலமைப்புத் திட்டத்தை தயாரித்தது.

குமாரதுங்க தனது தேர்தல் வெற்றிக்கான சாத்தியங்களை வீங்கச் செய்யும் பொருட்டு சிங்கள இனவாத சக்திகளுக்கு அழைப்பு விடும் அதே வேளையில் யூ.என்.பி.யும் கூட சிங்கள சோவினிச அலையில் ஏறி மீண்டும் ஆட்சிக்கு வரத் தருணம் பார்த்துக் கொண்டுள்ளது. இக்கட்சி 18 வாரங்கள் அரசியலமைப்பு சீர்திருத்த பொதி மீதான கலந்துரையாடல்களில் பொதுஜன முன்னணியுடன் பங்கு கொண்ட போதிலும் இந்த யோசனைகளுக்கும் தமக்கும் உரிமை கிடையாது எனக் கூறியது. அத்தோடு யூ.என்.பி. தற்சமயம் ஜே.வி.பி. (JVP), தாய்நாட்டை பாதுகாக்கும் அமைப்பு, சிங்கள உறுமய கட்சி (SHP) போன்ற பௌத்த, சிங்கள அதிதீவிரவாத அமைப்புகளுடன் கூட்டுச் சேர்ந்து பிரச்சாரம் நடாத்த அவற்றுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

## யாழ்ப்பாணக் குடாநாடு

இந்தப் பிரச்சாரத்தை சுற்றி வளைக்கும் விதத்தில் பொதுஜன முன்னணி ஆட்சியாளர்கள் ஏப்ரல் கடைப்பகுதியில் இருந்து யாழ்ப்பாணக் குடா நாட்டில் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சி கண்ட சில பகுதிகளைத் தன்னும் இராணுவத் தாக்குதல்களை உக்கிரம் அடையச் செய்வதன் மூலம் திரும்பவும் கைப்பற்ற முயற்சிக்கின்றது. கடந்த வாரம் பொதுஜன முன்னணி 2800 கோடி ரூபா (356 மில்லியன் டாலர்) உபமான்ய மதிப்பீட்டை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது. இதன் மூலம் முழு (பாதுகாப்பு) வரவு செலவு திட்டத்

17 ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள சமயத்தில் பொதுஜன முன்னணி ஆட்சியில் பிளவு

1ம் பக்கத் தொடர்ச்சி

இணக்கப்பாட்டுக்கு வந்திருந்ததோடு யூ.என்.பி. இறுதி நேரத்தில் பௌத்த பிக்குகளதும் இனவாத சக்திகளதும் நெருக்குவாரத்தின் கீழ் தனது ஆதரவை விலக்கிக் கொண்டது.

பொதுஜன முன்னணி ஆகஸ்ட் 11ம் திகதி தேசிய தொலைக்காட்சிக்கு ஜனாதிபதி குமாரதுங்க வழங்கிய ஒரு பேட்டியுடன்- உடனடியாகவே ஒரு வெகுஜனத் தொடர்பு சாதனங்களின் பிரச்சார இயக்கத்தை தொடுத்தது. அதில் பல மாதகால கலந்துரையாடல்களைத் தொடர்ந்து எட்டப்பட்ட இணக்கத்தை யூ.என்.பி. காட்டிக் கொடுத்துவிட்டதாக அவர் குற்றம் சாட்டினார். ஜனாதிபதி, மசோதாவை நிறைவேற்றி வைக்கும் முயற்சியை பொதுஜன முன்னணி கைவிடாது எனவும் அவசியப்படின் அடுத்த பாராளுமன்றத்தை ஒரு அரசியலமைப்பு நிர்ணய சபையாக மாற்றும் எனவும் யூ.என்.பி.யின் ஆதரவுக்கு காத்திராது, சாதாரண பெரும்பான்மை மூலம் மசோதாவை நிறைவேற்றும் எனவும் வலியுறுத்தினார்.

பொதுஜன முன்னணி ஆட்சியாளர்கள் யூ.என்.பி.க்கு எதிராக திட்டமிடப்பட்ட குற்றச்சாட்டுக்களை சுமத்திய அதே வேளையில் ஏகாதிபத்திய வல்லரசுகளும் இந்திய ஆளும் வர்க்கத்தின் சில பகுதியினரும் யூ.என்.பி. அதனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டதையிட்டு அதிருப்தி தெரிவிக்க ஒன்றிணைந்தனர். குமாரதுங்கவின் தொலைக்காட்சி பேட்டி வெளியான அதே நாளில் வெளியான இரண்டு இந்திய தேசிய தினசரிகளான 'இந்துவும்' 'இந்தியன் எக்ஸ்பிரசும்' புதிய அரசியலமைப்பு சீர்திருத்தங்களுக்கு வாக்களிக்க யூ.என்.பி. மறுத்ததை கண்டனம் செய்தன.

'இந்து' பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கம் பின்வருமாறு குறிப்பிட்டது: "... ஐக்கிய தேசிய கட்சி- ஏனைய அரசியல் கட்சிகளைப் போல் இந்த (அரசியலமைப்பு) வரைவை உருவாக்குவதில் நெருக்கமாக பங்கு கொண்ட அது- புதிய அரசியலமைப்பு சட்டத்தை ஆதரிக்கப் போவதில்லை எனப் பிரகடனம் செய்தமை வருந்தத் தக்கது. இலங்கைப் பாராளுமன்றத்தில் உள்ள அரசியல் கணிதத்தின்படி இந்த புதிய அரசியலமைப்பை நிறைவேற்ற அவசியமான 2/3 பங்கு பெரும்பான்மை பலத்தை பெறுவது அடியோடு சாத்தியமில்லாது போய்விட்டது. யூ.என்.பி. மனதை மாற்றிக் கொண்டமை, திருமதி. குமாரதுங்க அரசியலமைப்பு மசோதா மீதான வாக்கெடுப்பை ஒத்திவைப்பதாக அறிவிப்பதைத் தவிர வேறு பதிலீடுகளை இல்லாமல் செய்துவிட்டது."

அவ்வாறே இன்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது: "பல தசாப்தகால சிங்கள அரசியல்வாதிகளின் தற்கொலைத் தனமான அரசியல் சீர்திருத்தங்களின் பின்னர் யூ.என்.பி. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி குமாரதுங்கவுடனான பேச்சுவார்த்தைகளின் சுயாட்சி விவகாரத்தை கையாள்வது தொடர்பான பிரச்சினை முன்வைக்கப்பட்ட போது வரைவு யோசனைகளை ஆதரிப்பதாக காட்டிக்கொண்டதால் வெற்றிகரமான நம்பிக்கை பிரிந்தது. எவ்வாறெனினும் இது பற்களை நறும்பும் விடயாக, உறுதியும் தூரதரிசனமும் கேள்விக்கிடமாகியதும் விக்கிரமசிங்க மனதை மாற்றிக் கொண்டார். இது ஒரு பொதுஜன அபிப்பிராயத்தின் காலதாமதமான ஒரு தாக்குதலாக அல்லது கோஷங்களை எழுப்பிய பிக்குகளின் எதிர்ப்பின் தாக்கமாக இருக்கலாம். அவர் ஒரு நிஜமான மறுசிந்தனையை கொண்டிருந்திருந்தால் ஒரு பொறுப்பு வாய்ந்த தலைவர் ஒருவர் அதைக் கண்டுபிடிப்பதற்கான உரிய சாத்தியமான தருணமாக விளங்கியிருக்கும்."

இந்த நெருக்குவாரங்கள் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஒரு பொதுத் கூட்டத்தில் யூ.என்.பி. தலைவரை தமிழர் பிரச்சினைகான ஒரு அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும் தமது விருப்பத்தை பிரகடனம் செய்யும்படி தள்ளியது. முன்னாள் யூ.என்.பி. வெளிநாட்டு அமைச்சராக விளங்கி, காலமான ஏ.சீ.எஸ்.ஹமீட்டின் முதலாவது நினைவுதினத்தின் பேரில் கூடியிருந்தவர்கள் முன்னிலையில் பேசுகையில் அவர் கூறியதாவது: "ஒரு அனைத்துக்கட்சி இணக்கப்பாடும், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கான பொதுவான நிலைப்பாடுமே ஒரு தீர்வாக விளங்கும் என திரு.ஹமீத் கனவு கண்டார்". இது நோர்வேயின் மாஜி பிரதமர் கெஜல் பொன்டிவிக்கின் நினைவுப் பேருரையைத் தொடர்ந்தே இடம் பெற்றது. பொன்டிவிக் தமது பேச்சில் வலியுறுத்தியதாவது: "யுத்தம் முடிவுக்கு வந்து அரசியல் தீர்வு பூரணமாக்கப்படும் போது இலங்கை முன்னொரு போதும் இல்லாத அளவிலான முன்னேற்றத்தை நோக்கிச் செல்லும்."

விக்கிரமசிங்க இனவாதிகளுக்கு இயைந்து போவது சம்பந்தமான அம்சத்தை சாடைகாட்டி கருத்து தெரிவிக்கையில் பொன்டிவிக் மேலும் கூறியதாவது: "கடந்த 39 ஆண்டுகாலமாக காலாநிதி. ஹமீட்டின் தொகுதியில் இடம்பெற்றவை, இலங்கை மக்கள் குறுகிய மத அல்லது இனக்குழு விவகாரங்களுக்கு மேலாக நின்று கொண்டுள்ளதை சுட்டிக் காட்டுகின்றது. பௌத்த சிங்கள சமூகத்தினரை பெரும்பான்மையினராகக் கொண்டவர்கள் ஒரு முஸ்லீமை தமது பாராளுமன்ற பிரதிநிதியாக திரும்பத் திரும்ப தெரிவு செய்ய முடியுமானால் அது மாபெரும் ஜனநாயக முதிர்ச்சியை சுட்டிக்காட்டுகின்றது."

## சி.ல.சு.க. பிளவு

தேர்தல் பிரச்சார இயக்கத்துக்கு முன்னோடியாக பொதுஜன முன்னணியின் பிரதான அரசியல் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமைப் பீடத்தில் இரண்டு முக்கியமான மாற்றங்களைச் செய்தது. அரசியலமைப்பு சீர்திருத்த மசோதாவை வரைந்து வந்த காலப்பகுதியில் தலைதூக்கிய வேறுபாடுகளுக்கு ஒட்டுப்போடும் ஒரு நடவடிக்கையாகவே இது செய்யப்பட்டது. முதலாவது, ஜனாதிபதியின் தாயாரும் 84 வயதானவருமான பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் இடத்துக்கு ரட்ணசிரி விக்கிரமநாயக்கா நியமனம் செய்யப்பட்டார். இரண்டாவது, இக்கட்சி இளைஞர் விவகார, விளையாட்டு, சமுர்த்தி (சுபீட்சம்) அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க ஸ்ரீ.ல.சு.க.வின் பொதுச் செயலாளராக நியமனம் செய்யப்பட்டார். இந்த வெற்றிடம் மாஜி செயலாளர் காலமானதால் ஏற்பட்டது.

அரசுடமை பத்திரிகையான 'டெயிலி நியூஸ்' ஆகஸ்ட் 19ம் திகதிய தனது முன்பக்க அரசியல் ஆய்வில் -புதிய பிரதமர் நியமனம் செய்யப்பட்ட பின்னர்- பின்வருமாறு குறிப்பிட்டது. "ரத்னசிரி விக்கிரமநாயக்கா மாபெரும் திறமையுடன் பௌத்த பிக்குகளுடனான பதட்ட நிலையைத் தணித்தார். அவரது இணக்க ரீதியான அணுகுமுறையும் நம்பிக்கையும் ஸ்ரீ.ல.சு.க. வின் பாரம்பரியமான வாக்காளர் இடையே ஏற்கனவே பலன் தந்துள்ளது. கட்சியில் உள்ள சில அரசியல் சந்தர்ப்பவாதிகள் முற்றிலும் ஸ்ரீ.ல.சு.க. கொள்கைகளின் அடிப்படையில் பொதுஜன முன்னணியை பிளவுபடுத்த எடுத்த முயற்சிகள் வெற்றிகரமான முறையில் முறியடிக்கப்பட்டுள்ளது" என்றது.

அரசாங்கத்தின் ஊதுகுழலும் வெகுஜன தொடர்புசாதன அமைச்சர் மங்கள சமரவீரவின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதுமான ஒன்றில் இருந்து வெளிப்பட்ட "பிளவுபடுத்த எடுத்த முயற்சி" என்ற குறிப்பானது பௌத்த சாசன அமைச்சர் லக்ஷ்மன் ஜயக்கொடி, விவசாய அமைச்சர் டீ.எம்.ஜயரத்ன போன்ற சிரேஷ்ட ஸ்ரீ.ல.சு.க. தலைவர்கள் தொடர்பான ஒரு நேரடி விமர்சனமாக கணிக்கப்பட்டுள்ளது. இவர்கள் இருவரும் பிரதமர் பதவி மீது கண் வைத்து இருந்தனர். தாம் நெருக்கடி நிலைமையில் என்றும் கட்சியுடன் நின்று வந்ததாக இவர்கள் கூறிக் கொண்டனர். மறுபுறத்தில், விக்கிரமநாயக்க 1960 பதுகளில் மக்கள் ஐக்கிய முன்னணியில் (MEP) இருந்து ஸ்ரீ.ல.சு.க.வில் சேர்ந்தார். 1980பதுகளில் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியை அமைக்க குமாரதுங்கவுடன் சேர்ந்து, கட்சியில் இருந்து வெளியேறினார். இவர்கள் இருவரும் மீண்டும் கட்சியில் சேர்ந்தது 1992ல்.

இக்கட்டுரை ஸ்ரீ.ல.சு.க.வின் "பாரம்பரியமான வாக்காளர்" எனக் கூறுவது விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பரந்த அளவிலான கிராம்ப்புற குட்டி முதலாளிகளையேயாகும். இவர்கள் பௌத்த சித்தாந்தத்தின் ஆதிக்கத்துக்கு உட்பட்டவர்கள். இவர்களின் சமூக ரீதியான முக்கியத்துவமானது இந்த இரண்டு அமைச்சர்களும்- விவசாயமும், பௌத்தமும்- சிரேஷ்ட கட்சி பெரும் புள்ளிகளை கொண்டுள்ளதன் மூலம் வெளிப்பாடாகின்றது.

ஆனால் கிராமப்புற வாழ்க்கையும், பெருமளவுக்கு நகர்ப்புற வாழ்க்கையும் கடந்த இரண்டு தசாப்த காலத்தில் தனியார்மயமாக்கம், சுதந்திர சந்தை கொள்கைகளின் அமுலாக்கத்துடன் பாரிய மாற்றத்துக்கு உள்ளாகியுள்ளன. ஒரு புதிய வசதிகள் கொண்ட மத்தியதர வர்க்கத் தட்டு, பாரம்பரிய வாழ்க்கை முறையிலான வேர்கள் இல்லாமல் தோன்றியுள்ளது. அமைச்சரவையில் உள்ள சமரவீரவும் எஸ்.பி.திசாநாயக்கவும் இந்த தட்டினருடன் மிகவும் நெருக்கமானவர்கள். இது அரசியல் ரீதியில் ஆட்டம் கண்டது; ஆட்சியாளர்களின் பொருளாதார, அரசியல் நெருக்கடி காரணமாக அதிகரித்த அளவில் அவஸ்தைக்கு உள்ளாகியுள்ளது. இதே சமயம் நாடு பூராவும் வறுமை பெருகி வரும் ஒரு நிலையில் திசாநாயக்கவின் அமைச்சின் கீழான 'சமுர்த்தி' வேலைத்திட்டம், வெகுஜனங்களில் வறுமையால் பெரிதும் பீடிக்கப்பட்ட பகுதியினரை மேற்பார்வை செய்யும் பல்லாயிரக் கணக்கான அதிகாரிகளை நியமனம் செய்துள்ளது. உணவு மானியங்களையும், மற்றும் சலுகைகளையும் வழங்கும்படி சிபார்சு செய்யும் அதிகாரங்களை இவர்கள் கொண்டுள்ளனர்.

இந்த 'சமுர்த்தி' அதிகாரிகள் கடந்த மாகாண சபைத் தேர்தல்களிலும் கடந்த ஜனாதிபதி தேர்தலிலும் பல்வேறுபட்ட பகுதிகளிலும் வாக்காளர்களை தூண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டதோடு கள்ளவாக்கு போடும் நடவடிக்கைகளை ஒழுங்கு செய்வதிலும் ஈடுபட்டனர். பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு இவர்களின் சேவை இந்த தேர்தலின் இன்னும் அதிகரித்த அளவில் அவசியமாகியுள்ளது. ஏனெனில் இது சிங்கள பௌத்த தேர்தல் தொகுதிகளில் புதிதாக அமைக்கப்பட்ட சிங்கள உறுமய கட்சி போன்ற இனவாத கட்சிகளின் கடும் போட்டியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

ஸ்ரீ.ல.சு.க. பொதுச் செயலாளர் பதவிக்கு எஸ்.பி.திசாநாயக தெரிவு செய்யப்பட்டமை பொதுஜன முன்னணி ஆட்சியாளர்கள் வாக்குகளை கைப்பற்ற பெரிதும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் இறங்குவதற்கான ஒரு முக்கிய திருப்பமாக விளங்குகின்றது. ஆகஸ்ட் 22ம் திகதி 'டெயிலி மிரர்' பத்திரிகையின் செய்தி ஆய்வாளர் எழுதியதாவது: "எஸ்.பி.திசாநாயக்க வேலைகளை செய்து முடிக்கும் ஆற்றல் படைத்தவர் எனப் புகழ் பெற்றவர். சிறப்பாக தேர்தலில் வெற்றிஈட்டுவது. அந்தக் கௌரவம் எவ்வளவுதான் போலியானதாக இருந்தாலும் 1999ம் ஆண்டின் வடமேல் மாகாண சபை தேர்தல், ஜனாதிபதி தேர்தல்களில் வெற்றியீட்டியதற்கான பெருமை அவரையே சாரும். இப்போது எஸ்.பி. கட்சி செயலாளர் என்ற விதத்தில், ஜனாதிபதி தனது உள்நோக்கத்தை தெளிவுபடுத்தியுள்ளார். எதிர்வரும் தேர்தலை எப்பாடுபட்டேனும் வெற்றிகொள்ள பொதுஜன முன்னணி சகல விதத்திலும் முயற்சிக்கும்".

ஆனால் இந்த தேர்தல் ஒரு நேர்கோட்டு விவகாரம் அல்ல. திசாநாயக்க சந்திரிகாவின் வாக்கு உட்பட மத்திய குழுவின் 16வாக்குகளை பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்டவருக்கு 12 வாக்குகள் கிடைத்தன. தோல்வி கண்ட வேட்பாளரான மகாவலி அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஸ்ரீ.ல.சு.க. வில் 1968ல் சேர்ந்தவர். கட்சியின் துணைச் செயலாளராக நீண்டகாலம் செயற்பட்டவர். இவர் கட்சியின் "பாரம்பரிய வாக்காளர்களின்" ஆதரவைப் பெற்றுக் கொண்டதாக சொல்லப்படுகின்றது. மறுபுறத்தில் எஸ்.பி.திசாநாயக்க தமது ஆரம்ப அரசியல் கல்வியை ஒரு மாணவ தலைவராக ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சியில் பெற்றதன் பின்னர் 1980பதுகளின் கடைப் பகுதியிலேயே ஸ்ரீ.ல.சு.க.வில் சேர்ந்தார்.

லங்கா சமசமாஜக் கட்சி, ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சிகளில் உள்ளவர்கள் உட்பட பதவிக்கு வருவதற்கு முன்னர் பிக்குகளின் தலைமை பிக்குகளை தரிசிக்க செல்வது அரசியல்வாதிகளின் ஒரு வழக்காறாகிவிட்டது. இந்த சீர்கெட்டுப்போன வழக்காறு தீவில் பௌத்த மதத்தின் ஆளுமையை வீங்கச் செய்ய துணை போகின்றது. விக்கிரமநாயக்க புதிய பிரதமரானதும் இந்த வழக்காறான ஆசிகளை மல்வத்த பீடத்தைச் சேர்ந்த மகாநாயக்க தேரர்களிடம் பெற்றுக் கொண்டார். ஆனால் இதே பிக்கு திசாநாயக்கவை சந்திக்கவும் புதிய பதவிக்கான ஆசிகளை வழங்கவும் மறுத்துவிட்டார். இதே பிக்குவே இரண்டு வாரங்களுக்கு முன்னர் சந்திரிகா குமாரதுங்க இவரைச் சந்திக்க கண்டிக்கு சென்ற சமயம் அச்சந்திப்பை தவிர்த்துக் கொண்டவர். வருடாந்த பௌத்த விழாவின் (கண்டி பெறஹரவை) முடிவை உத்தியோகபூர்வமாக நிறைவு செய்யவே இவர் சென்றிருந்தார்.

ஸ்ரீ.ல.சு.க. வினுள் அபிவிருத்தி கண்டுள்ள இந்தப் பிளவுகள் இலங்கையின் முழு அரசியல் அமைப்பினதும் நெருக்கடியினை அப்பட்டமாக எடுத்துக் காட்டியுள்ளது. வாக்களிப்பில் வாக்காளர் பங்கு கொள்வது அதிகரித்த அளவில் வீழ்ச்சி கண்டுவரும் நிலையில் பிரதான முதலாளித்துவக் கட்சிகளிடையேயான தேர்தல் போட்டிகள் இரத்தம் தோய்ந்த மோதுதல்களாகியுள்ளன. வாக்காளர் வாக்களிப்பதை தடுக்கவும் வாக்கு கணக்கெடுப்பில் மோசடிகளை திணிக்கவும் குண்டர் கும்பல்கள் அணிதிரட்டப்படுகின்றன. வழக்கமாக அதிகாரத்தில் உள்ள கட்சி -யூ.என்.பி. அல்லது பொதுஜன முன்னணி- ஒரு குண்டர்களின் யுத்தத்தை நடாத்துவதற்கு பெரிதும் சாதகமான நிலையில் இருந்து கொண்டு உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்க்சிச இலக்கியங்களை நீங்களும் வாசியுங்கள்!



## லியோன் ட்ரொட்ஸ்கியும் 20ம் நூற்றாண்டில் சோசலிசத்தின் தலைவிதியும்

டேவிட் நோர்த்

விலை ரூபா. 10.00



## சோசலிச சமத்துவக் கட்சியின் முன்நோக்கு

பொது மக்கள் முகம் கொடுக்கும் சகல பிரச்சினைகளும் அவர்கள் ஈடுபட்டுள்ள சகல போராட்டங்களும் முன்நோக்கு, தலைமை பற்றிய அரசியல் பிரச்சினையை உக்கிரமான முறையில் தோற்றுவிக்கின்றது. இந்தச் சவாலுக்கு முகம் கொடுக்க, அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தினால் மட்டுமே முடியும். அனைத்துலகக் குழுவின் கிளைகளால் புதிய கட்சிகளை ஸ்தாபிதம் செய்வதானது, முதலாளித்துவ முறைக்கு எதிராக தவிர்க்க முடியாத விதத்தில் போராட்டத்துக்குக் கிளம்பும் மக்களுக்கு சமூக சமத்துவத்தையும் நீதியையும் ஜனநாயக சுதந்திரத்தினையும் கொண்ட மாற்று வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஆட்சி பற்றிய முன்நோக்கில் வழிகாட்டுவதற்கே.

விலை ரூபா 40.00



## முதலாளித்துவத்தின் மரண ஓலமும்

நான்காம் அகிலத்தின் பணிகளும்

இடைமருவு வேலைத்திட்டம் நான்காம் அகிலத்தின் ஸ்தாபக மாகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

விலை ரூபா. 15.00




இலங்கையில் ட்ரொட்ஸ்கிசமும் திரிபுவாதமும்

## சமசமாஜ வரலாற்று ஏட்டிலிருந்து

கீர்த்தி பாலசூரிய

விலை ரூ. 15.00



## அடிப்படைக் கொள்கைகளுக்கும், மூலோபாயத்துக்குமான 25 ஆண்டுகால உறுதியான போராட்டம்

விஜே டயஸ்


விலை ரூ.10.00



## இலவசக் கல்வியை காப்பது எப்படி ?

விஜே டயஸ்

விலை ரூ. 10.00



ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிரான போராட்டமும்

## பேர்லின் உலக மகாநாட்டின் முன்நோக்கும்


விலை ரூ. 25.00



ஆகஸ்ட் சதியின் பின்னர்:

## சோவியத் யூனியன் எங்கே செல்கிறது?

விலை ரூ. 25.00



சோவியத் யூனியன் கலைக்கப்பட்டதன் பின்னர்

## மார்க்சிசத்துக்கான போராட்டமும் நான்காம் அகிலத்தின் பணிகளும்

டேவிட் நோர்த்

விலை. ரூ5.00



## நிரந்தரப் புரட்சியும் சோசலிச அனைத்துலக வாதத்துக்கான போராட்டமும்

கீர்த்தி பாலசூரிய நினைவுப் பேருரை

டேவிட் நோர்த்

விலை ரூ. 8.00

தொழிலாளர் பாதை வெளியீடு, 90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு 10: தொலைபேசி: 682220

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் புதிய அரசியல் அமைப்பு மீதான பாராளுமன்ற விவாதத்தில் லஞ்சமும், கெஞ்சலும், கூச்சலும்

நந்த விக்கிரமசிங்க
ஆகஸ்ட் 8, 2000

கடந்த திங்கள் (ஆகஸ்ட் 7) ஜனாதிபதி குமாரதுங்க அதிகாரத்தை பரவலாக்கும் தீர்வுப் பொதியை பாராளுமன்ற விவாதத்திற்கு முன்வைத்த வேளையில் கட்சி தாவும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு லஞ்சம், ஆளும் பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கும்படி மாஜி சோசலிஸ்டுக்களின் அவஸ்தை நிறைந்த கெஞ்சல்கள் மற்றும் பொதுவான கூச்சல்கள் என்பன குறிப்பிடத் தக்கவையாக அமைந்திருந்தன

அரசியல் சீர்திருத்தத்தில், தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாட்டின் வடக்கு- கிழக்கு பிரதேசங்களுக்கு அதிகாரத்தை பரவலாக்குவதன் மூலம், தமிழீழ விடுதலைப் புலிகளை ஓரம்கட்டி, நாட்டின் 17 வருடகால உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியும் என ஆளும் பொதுஜன முன்னணி நம்பிக்கை கொண்டுள்ளது.

அடுத்த 36 மணித்தியாலத்தில் இரண்டு சக்திகளுக்கும் இடையில் நாடக பாணியிலான மாற்றங்கள் இடம்பெறாவிட்டால், புதன்கிழமை வாக்கெடுப்பில் பொதுஜன முன்னணிக்கு அவசியமான தொகையை பெற்றுக்கொள்ள முடியாமல் போகும் என்பது தெளிவு.

இந்த அரசியல் அமைப்பு தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிராந்தியத்துக்கு 10 வருடகால இடைக்கால நிர்வாக சபையை அமைக்கும் திட்டத்தை முன்வைத்திருப்பதாலும், தற்போதுள்ள விகிதாசார தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதாலும் குமாரதுங்கவின் ஆட்சிக்காலம் முடிவடையும் வரை நிறைவேற்று ஜனாதிபதி முறையை தன் வசம் வைத்திருப்பதாலும் ஐக்கிய தேசியக் கட்சியின் (UNP) தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசியல் அமைப்பை கண்டனம் செய்ததோடு பாராளுமன்றத்தில் இருந்தும் வெளிநடப்புச் செய்தார்.

அரசியல் சீர்திருத்தத்தை நிறைவேற்ற, 225 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் 150 வாக்குகளை அரசாங்கம் வெற்றிபெற வேண்டும். தற்போது அது முஸ்லீம் காங்கிரஸ், தமிழ் குழுக்களின் உறுப்பினர்கள், அதே போல் கடந்த சில மாதங்களில் ஐக்கிய தேசியக் கட்சியில் (UNP) இருந்து மாறிய உறுப்பினர்களின் ஆதரவோடு 124 வாக்குகளையே கொண்டுள்ளது. இலங்கை தொழிலாளர் காங்கிரசின் 8 உறுப்பினர்களின் வாக்குகளையும் பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்பை அது கொண்டுள்ளது. ஆனாலும் மேலும் 18 வாக்குகள் அவசியமாகியுள்ளது.

யூ.என்.பி. தீர்வுப் பொதியை எதிர்ப்பதாக விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ள போதிலும், கட்சி மாறுபவர்களின் தொகையை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக பெரும் முயற்சி எடுக்கவேண்டியுள்ளது. இவர்களுக்கு பணம், வாகனம் மற்றும் வீடும் வழங்கப்படுவதாக கூறப்படுகிறது. இது 60 மில்லியன் ரூபாய் (750,000 டாலர்) வரை அதிகரிக்கப்பட்டுள்ளதாக யூ.என்.பி. குற்றம் சாட்டியுள்ளது.

ஒரு யூ.என்.பி. உறுப்பினர் பொதுஜன முன்னணிக்கு மாறிய போது எதிர்க் கட்சி வரிசையில் இருந்து எழுந்த கேள்வி: "உங்களுக்கு எத்தனை மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டது?" என்பதே.

லஞ்சம் கொடுத்தலும் தூண்டுதல்களும் வெளியில் தொடருகின்ற அதேவேளை, அரசாங்கத்தின் அதிகாரப் பரவலாக்கல் பொதிக்கு ஆதரவு வழங்குமாறு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் பற்றி வீரக்கோன் யூ.என்.பி. உறுப்பினர்களுக்கு வேண்டுகோள் விடுத்து பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை, அரசாங்கத்தின் நம்பிக்கையீனத்தை எடுத்துக் காட்டியது.

வீரக்கோன் லங்கா சமசமாஜக் கட்சியின் (LSSP) தலைவர். இலங்கையின் பெரும் தொழிலாளர் வர்க்கக் கட்சியாக இருந்த லங்கா சமசமாஜக் கட்சி, 1964ல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் (தற்போதைய பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு தலைமை தாங்கும் கட்சி) கூட்டரசாங்கத்தில் நுழைந்ததன் மூலம் தொழிலாளர் வர்க்கத்தையும் சோசலிசத்தையும் விட்டோடியது.

இந்தக் காட்டிக் கொடுப்பில் ஈடுபட்டதன் மூலம் இரண்டு முக்கிய முதலாளித்துவக் கட்சிகளின் சோவினிசக் கொள்கைகளுக்கு எதிராக தமிழ் மக்களைப் பாதுகாக்கும் தனது கடமையில் இருந்து ல.ச.ச.க. தவறியுள்ளது.

அமைதியான கலந்துரையாடல்களின் மூலம் சில பிரேரணைகள் தொடர்பாக இணக்கத்துக்கு வந்ததை நினைவூட்டிய வீரக்கோன் யூ.என்.பி. உறுப்பினர்கள் இந்த உத்தேச அரசியல் சீர்திருத்தத்தை ஏற்றுக்கொள்ளாவிடில் அதற்கான திட்டங்களை முன்வைக்குமாறு பரிதாபமான முறையில் கேட்டுக்கொண்டார்.

ஆனால் எதிர்க் கட்சியினரின் கூச்சல் கேள்விகளுக்கு மத்தியில் அமைச்சரின் பேச்சை செவிமடுப்பது கடினமாகியது.

வீரக்கோனின் அவஸ்தை நிலை அவரது அமைச்சரவை சகாவும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தவருமான இந்திக குணவர்தனவோடு மட்டுமே பொருந்தியது. உற்பத்தி சக்திகளின் அபிவிருத்தியில் இருந்து தேசிய-அரசு வளர்ச்சி கண்டதாக மார்க்ஸ் கூறியதாக தெரிவித்த குணவர்தன, இலங்கை அரசை கட்டிக் காக்கும் பொதுஜன முன்னணியின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க வேண்டும் எனத் தெரிவித்தார். அவர் ஸ்டாலினிசத்தின் சிடுமூஞ்சித்தனத்தின் இலட்சணங்களை வெளிக்காட்டிக் கொண்டார்.

அவர் குறிப்பிட்டதாவது: "யூ.என்.பி.யை பொதுஜன முன்னணிக்கு ஆதரவு வழங்குமாறு நெருக்குவது தொழிலாளர் வர்க்கத்தின் கடமையாகும்."- "உழைக்கும் மக்களுக்கு நாடு கிடையாது" ஆகையால் அனைத்து பிராந்தியங்களிலும் உள்ள ஒடுக்கப்படும் மக்கள் ஒன்றிணைய வேண்டும் என்பதே விஞ்ஞான சோசலிசத்தின் ஸ்தாபகர்களின் கோட்பாடாகும்.

அதேவேளை சிங்கள சோவினிச அமைப்புகள் பாராளுமன்றத்துக்கு வெளியில் தங்கள் சக்திகளை அணிதிரட்ட ஏற்பாடு செய்திருந்தன. பல தசாப்தங்களாக தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத பிரச்சாரங்களில் ஈடுபட்டுள்ள பௌத்த பிக்குகள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தமது கடைசி கருத்தை வெளியிடும் விதத்தில் அரசியல் யாப்புக்கு ஆதரவாக வாக்களிப்பவர்களின் குடும்ப அங்கத்தவர்களின் மரண வீட்டுக்கு தாம் சமூகம் தரமாட்டோம் என குறிப்பிட்டிருந்தனர்.

யூ.என்.பி, மக்கள் விடுதலை முன்னணி(ஜே.வி.பி.), இன்னும் ஒரு டசின் சிங்கள இனவாத குழுக்களின் தலைவர்கள் இணைந்து கூட்டம் நடாத்தியதோடு, அவர்கள் தொடர்ந்தும் குமாரதுங்கவின் தீர்வுப் பொதிக்கு எதிராக பிரச்சாரம் செய்வதாக அறிவித்தனர்.

அரசாங்கம் பாராளுமன்ற வளவில் பல்லாயிரக் கணக்கான பொலிசாரை கடமையில் ஈடுபடுத்தியிருந்ததோடு ஆயுதப் படைகளையும் உஜார் நிலையில் வைத்திருந்தது.

# உலகம் பூராவும் தொழிலாளர் போராட்டங்கள்

உலக சோசலிச வலைத் தளத்திலிருந்து

## இலங்கை

### புகையிரத ஊழியர் சம்பளப் போராட்டம்

மருதானை புகையிரத நிலையத்தைச் சேர்ந்த ஊழியர்கள் ஆகஸ்ட் 12ம் திகதி 6 மணித்தியால திடீர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அரசாங்கத்தின் விலைவாசி அதிகரிப்புக்களை ஈடு செய்யும் விதத்தில் தமது சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் எனக் கோரினார். வடக்கு- கிழக்கு உள்நாட்டு யுத்தத்தை நிதியீட்டம் செய்ய அரசாங்கம் பொருமளவிலான தொகையை செலவு செய்வதால் இது விலைவாசிகள் மேலும் அதிகரிக்க வாய்ப்புகள் இருந்து கொண்டுள்ளது.

புகையிரத ஊழியர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த சமயத்தில் பொலிசார் இரண்டு ஊழியர்களை கைது செய்யும் முயற்சியில் இறங்கினர். அரசாங்க ஆதரவாளர்களால் தெரிவிக்கப்பட்ட குற்றச் சாட்டின் அடிப்படையிலேயே இது இடம் பெற்றது. புகையிரத நிலைய சுப்பிரின்டன்ட் வழங்கிய வாக்குறுதியின் பேரில் தொழிலாளர்கள் மறுநாள் வேலைக்கு திரும்பினர். தொழிலாளர்களை கைது செய்ய தாம் அனுமதிக்கப் போவதில்லை என அவர் தெரிவித்து இருந்தார்.

இதே அரசாங்க சார்பு சக்திகளே ஜூலை 27ம் திகதி இடம்பெற்ற ஒரு நாள் வேலைநிறுத்தத்தின் போது தாக்குதல் நடாத்தி தொழிலாளர்களை காயப்படுத்தினர். சுமார் 25 குண்டர்கள் வாள், கத்தி சகிதம் மருதானை புகையிரத நிலையத்தை ஆக்கிரமித்து இத்தாக்குதலில் ஈடுபட்டனர். 15000 புகையிர ஊழியர்களில் பெரும் பகுதியினர் இந்த வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டனர்.

### வேயாங்கொடை ஆடைத் தொழிற்சாலை தொழிலாளர் மறியில்

வங்குரோத்தடைந்து போயுள்ள வேடெக்ஸ் பக்டரியில் இருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ள தொழிலாளர்கள் பக்டரிகளை மீண்டும் திறக்கும்படியும் 2600 தொழிலாளர்களை மிளவும் சேவையில் சேர்க்கும்படியும் கோரி ஆகஸ்ட் 15ம் திகதி கொழும்பில் உள்ள தொழில் திணைக்களத்தின் எதிரில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது இலங்கையின் இரண்டாவது பெரிய ஆடைத் தொழிற்சாலையாகும். கொழும்பில் இருந்து 35 கி.மி. தொலைவில் உள்ள இப்பக்டரி மக்கள் வங்கியால் ஜூலை 10ம் திகதி இருந்து மூடப்பட்டது.

மக்கள் வங்கி இப்பக்டரியின் முன்னைய உடமையாளர்களிடம் இருந்து கடன்களை அறிவிடுவதற்காக சட்ட நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதோடு, தொழிலாளர்களையும் நீதிமன்றத்தின் எதிரில் ஆர்ப்பாட்டம் செய்யும்படி கோரியது. ஆனால் தொழிலாளர்கள் இதற்கு இணங்க மறுத்துவிட்டனர். பக்டரி முதலாளிகளும் வங்கியும் தம்மை மோசடி செய்துவிட்டதாக அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இதற்கு முன்னர் இப்பக்டரி 5 தடவைகள் மூடப்பட்டு இருந்தது என்பதும் குறிப்பிடத் தக்கது.

## இங்கிலாந்து

### தனியார்மயத்தை எதிர்த்து ஆஸ்பத்திரி ஊழியர் வேலை நிறுத்தம்

ஆகஸ்ட் 15ம் திகதி இங்கிலாந்தின் பெஸ்ட் மிட்லண்ட் பகுதியைச் சேர்ந்த 550 ஆஸ்பத்திரி தொழிலாளர்கள் வேலையில் இருந்து வெளிநடப்புச் செய்தார்கள். இவர்கள் அங்குள்ள நான்கு ஆஸ்பத்திரிகளைச் சேர்ந்தவர்கள். இந்த வேலை நிறுத்தம் காரணமாக ஆஸ்பத்திரி அதிகாரிகள் 31 சத்திரசிகிச்சைகளை ஒத்திப்போட நேரிட்டது.

அரசாங்க சேவை தொழிலாளர் சங்கம் தேசிய சுகாதார சேவை ஒப்பந்தங்கள் தனியார் கம்பனிக்கு கைமாறுவதை எதிர்த்தே இவர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

## சிம்பாப்வே

### சிம்பாப்வே சுரங்கத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

சிம்பாப்வேயின் 60,000 சுரங்கத் தொழிலாளர்களில் 1/3 பங்கினர் ஆகஸ்ட் 14ம் திகதி சம்பள அதிகரிப்பு கோரி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இந்த வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்ட சுரங்கங்களில் இரு பெரும் தங்கம் உற்பத்தியாளர் சுரங்கங்களும் அடங்கும்.

அரசாங்கம் இந்த வேலை நிறுத்தத்தை சட்டவிரோதமானது எனப் பிரகடனம் செய்ததோடு, தொழில் பிணக்கு தீர்வாளரிடம் இருந்து 24 மணித்தியாலத்தினுள் வேலைக்கு திரும்பும்படி கட்டளையிடப்பட்டது. சுரங்க அமைச்சர் ஜூலி மோயோ சுரங்கங்களை செயற்பட வேண்டும் அல்லது வேலைநீக்கத்துக்கு தொழிலாளர் முகம் கொடுக்க வேண்டும் என கட்டளையிட்டார்.

## அமெரிக்கா

### வாஷிங்டனில் பண்ணைத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

இரண்டாயிரம் பண்ணைத் தொழிலாளர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் 4 1/2 மைல் தூரம் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர். ஐக்கிய பண்ணைத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த இத்தொழிலாளர்கள் சம்பளத்தை அதிகரிக்கும்படியும் தொழிலாளர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை நிறுத்தும் படியும் கோரினர்.

வாஷிங்டன் மாநிலத்தின் தென் மத்திய பிராந்தியத்தில் அப்பிள் பறிப்பதில் ஈடுபட்டுள்ள இத் தொழிலாளர்கள் மிகவும் தரக்குறைவான சேவை நிலைமைகளின் கீழ் தொழில் புரிய நேரிட்டுள்ளதாக குற்றம் சாட்டியுள்ளனர். இப் போராட்டம் சம்பந்தமாக பேசிய அர்னுல்போ ரமிரேஷ் என்ற தொழிலாளி கூறியதாவது; "எமக்கு கிடைக்கும் குறைந்த சம்பளத்தை கொண்டு எமது குடும்பங்களை பராமரிக்க முடியாதுள்ளது நாம் நியாயமான கூலி கிடைக்கும் விதத்தில் நாம் வேலை செய்வதை நிறுத்த உள்ளோம்" எனத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்க்சிச அனைத்துலகவாதம் எதிர் தீவிரவாத எதிர்ப்பு முன்னோக்கு...

8ம் பக்கத் தொடர்ச்சி

இறுதி ஆய்வில், முதலாளித்துவப் பொருளாதாரத்திற்குள்ளே இலாபத்திற்கான முற்றுமுழு ஊற்று தொழிலாள வர்க்கத்தின் உயிருள்ள உழைப்பிலிருந்து உபரி மதிப்பு கறந்தெடுக்கப்படுவதில் தான் இருக்கிறது. ஆனால் இலாப வீதங்கள் முதலீடு செய்யப்பட்டுள்ள மொத்த மூலதனத்துடன் தொடர்புடையன. அதாவது மூலப்பொருட்களிலும், இயந்திரத்திலும் முதலிடப்பட்டுள்ள மூலதனத்துடனும் (நிலையான மூலதனம்), உழைப்புச் சக்தியின் மீது முதலிடப்பட்டுள்ள மூலதனத்துடனும் (மாறும் மூலதனம்) ஆகும்.

மாறும் மூலதனம் உபரி மதிப்பிற்கான முழு ஆதாரமாக இருக்கும் வரையில், இந்த உபரி மதிப்பு என்றுமில்லா அளவு மொத்த மூலதனத்தை (மாறும் மற்றும் நிலையான மூலதனத்தை) அதிகரிக்கும். முதலாளித்துவ உற்பத்தியை மிக விரிவடையச் செய்யும் இம் மூலதனத் திரட்சி இலாப வீதத்தில் ஒரு போக்கினைத் தூண்டும். அது மொத்தமாக இடப்பட்டுள்ள மூலதனத்துக்கும் மொத்த உபரி மதிப்புக்கும் இடையேயுள்ள விகிதாசாரம் வீழ்ச்சியடைவதாகும். இந்த நிகழ்ச்சிப் போக்கின் தோற்றம் நெருக்கடிக்கு வழிவகுக்கும்.

இவ்வாறான நெருக்கடியின் மத்தியில் இருப்பது தேவையின் பற்றாக்குறை அல்ல மாறாக இலாபங்களின் பற்றாக்குறையே தான், அல்லது இன்னும் குறிப்பாகச் சொன்னால் முன்னைய வீதத்தில் மூலதனம் தொடர்ச்சியாக விரிவடைவதற்கு இலாபங்கள் போதுமான அளவு இல்லாமை தான்.

இலாபவீத வீழ்ச்சிப்போக்கு 1960 களின் முடிவில் எடுத்துக்காட்டப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1970 களில் ஒரு தொடர் பொருளாதார, நிதி நெருக்கடிகள் உருவாகியதுடன் நிலையான நாணயமாற்றுக்கான பிரெட்டன் வூட்ஸ் நிதியமைப்பை இல்லாதொழித்தது. இது 1974-75 இல் யுத்தகாலத்தின் பாரிய வீழ்ச்சியின் பின்னர் ஆழமான பின்னடைவை உருவாக்கியது.

இது இரண்டு முக்கிய விளைவுகளை உருவாக்கியது. முதலாவதாக, முன்னைய காலத்தில் தொழிலாள வர்க்கத்திற்கு வழங்க கடமைப்பட்ட சமூகநல நிலைமைகளை அரசாங்கங்கள் இல்லாதொழிக்க தொடங்கின. இரண்டாவதாக, இலாபவீத வீழ்ச்சியிலிருந்து மீழ்வதற்காக பூகோளமயமான உற்பத்தி முறைகளை அபிவிருத்தியை அடித்தளமாக கொண்ட மறுசீரமைப்பு போக்கை மூலதனம் ஊக்குவித்ததுடன், கணனி தொழில்நுட்பத்தையும் பிரயோகிக்க தொடங்கியது.

இந்த நெருக்கடிகளை ஆராய்வது முதலாளித்துவ வர்க்கத்தின் எந்தவொரு பிரிவோ அல்லது முழு முதலாளித்துவ வர்க்கத்தாலோ யுத்தத்திற்கு பின்னரான காலகட்டத்தால் குறிப்பிடப்பட்ட தேவையின் பெருக்கத்திற்கும், சமூகநல சலுகைகளுக்குமான கொள்கைகளுக்கு ஏன் திரும்பமுடியாது போனதற்கான சாத்தியமின்னையை வெளிப்படுத்துகின்றது. சம்பளத்தினதும், சமூகநல நடவடிக்கைகளதும் ஒவ்வொரு அதிகரிப்பும் தேவையின் அளவை கூட்டும் என்பது நிச்சயம். ஆனால் இது இலாபத்தின் எந்தவொரு பாதிப்பையும் ஏற்படுத்தாததுடன், மொத்த மூலதனத்தின் அளவிற்கு ஏற்கனவே இலாபம் பொருத்தமற்றதாக இருக்கும் நிலைமையிலும் கூட இப்படியான நடவடிக்கைகள் நெருக்கடியை தீவிரமாக்கும்.

இது தொடர்பான இன்னுமொரு அரசியல் காரணம் கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டியுள்ளது. சொசுடோவ்ஸ்கி "சுதந்திர சந்தை" யின் விளைவிற்கு எதிரான போராட்டம் "பரந்த அடித்தளத்திலும், எல்லா நாடுகளிலும் உள்ள பாரிய தாக்குதலுக்குரிய தொழிலாளர்கள், விவசாயிகள், சுய உற்பத்தியாளர்கள், சிறிய வியாபாரிகள், உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், கல்விமான்கள், மத பிரதிநிதிகள், மாணவர்கள், புத்திஜீவிகளை கொண்ட சமூகத்தின் சகல மட்டத்திலுமுள்ள சகல பிரிவினரையும் ஜனநாயக ரீதியாக உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் "என வலியுறுத்துகின்றார்.

பூகோள முதலாளித்துவத்திற்கு எதிரான போராட்டத்தில் தொழிலாள வர்க்கம் ஏனைய வர்க்கங்களினதும், நெருக்கமான சமூகத் தட்டினரதும் ஆதரவைப் பெற முயற்சிக்க வேண்டும் என்பது தொடர்பாக ஐயமெதுவும் இல்லை. ஆனால் கடந்த 25 வருட அரசியல் வரலாறு ஏன் இப்படியான ஒரு இயக்கம் கீன்சியவாத தேசிய ஒழுங்கமைப்புக் கொள்கைகளுக்கு திரும்பும் அடித்தளத்தில் உருவாக்க முடியாது என்பதை எடுத்துக்காட்டியுள்ளது. கீன்சியவாத முன்னோக்கினை சாதகமாக்கிய பொருளாதார நிலைமைகள் அதாவது 1970 களில் வீழ்ச்சிகண்ட இலாப குவிப்பின் அதிகரிப்பும் முதலீடும், இதனை அரசாங்க பற்றாக்குறையை அதிகரிக்க செய்வதன் மூலமாகவும் உயர் வரிகளினூடாகவும் நிலைத்திருக்க வைக்க முயல்வது பணவீக்கத்தின் அதிகரிப்பினை உருவாக்குவதுடன் பரந்த மத்தியதர வர்க்கத்தினரிடயே ஆழ்ந்த மனக்கசப்பை உருவாக்குவதிலேயே சென்று முடியும். சமூக சீர்திருத்தத்தின் தோல்வியின் மீதான அரசியல் எதிர்ப்புணர்வு எதிர்மாறாக றேகன் தச்சர் அரசாங்கங்களால் மேற் கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கான அரசியல் அடித்தளத்தை உருவாக்கும்.

"சுதந்திர சந்தை" முன்னோக்கினால் தொடர்ந்த அனுபவங்கள் அதன் அறிமுகத்துடன் இணைந்த நப்பாசைகளையும் இல்லாதொழித்துள்ளது. இது இந்த முன்னோக்கினால் ஒரு காலத்தில் கவரப்பட்ட மத்தியதர வர்க்கத்தினர் உட்பட சமுதாயத்தின் சகல பிரிவினரிடையேயும் ஆழ்ந்த நெருக்கடியை உருவாக்கியுள்ளது. ஆனால் அதிகரித்த வகையில் விலகிச் சென்று கொண்டிருக்கும் மத்தியதர வர்க்கத்தினரை கடந்த காலத்திற்குரிய தோல்வியடைந்த தேசிய சீர்திருத்தவாத முன்னோக்கின் அடித்தளத்தில் தொழிலாள வர்க்கத்தை நோக்கி வென்றுகொள்ள முடியாது.

மத்தியதர வர்க்கத்தினரையும் ஏனைய நெருக்கமான சமூகத் தட்டினரையும் தொழிலாளர் வர்க்கம் வென்றுகொள்ள, இலாப அமைப்பினை சீர்திருத்தும் நோக்கத்தை கொண்டிராத அதற்கு எதிரான முன்நோக்கினை முன்வைக்க வேண்டும். தொழிலாள வர்க்கம் முழு சமுதாயத்தினது உடல், மூளை உழைப்பினால் உருவாக்கப்பட்ட பாரிய உற்பத்திச் சக்திகளை தனிச்சொத்து நலன்களுக்கான ஆழுமையிலிருந்து விடுவித்து சமுதாயத்தின் சொத்துக்களாக்கி அதன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர வேண்டும். அது சொல்லிலும் செயலிலும் சமுதாயத்தை புதிய சமூக நோக்கில் மறுஒழுங்கு செய்வதன் தேவையை தவிர வேறொன்றும் இல்லை என்பதை வலியுறுத்த வேண்டும்.

பேராசிரியர் சோசுடோவ்ஸ்கி சரியாக கூறுவதுபோல், "பூகோளமயமாக்கல்", "சுதந்திர சந்தை" அமைப்பிற்கு எதிரான போராட்டத்திற்கு "உயர்ந்தளவு ஒற்றுமையும், உலக வரலாற்றில் முன்னுதாரணம் காட்ட முடியாதளவு அனைத்துலகவாதமும் தேவை". ஆனால் இங்குதான் அவரது முன்நோக்கின் அடிப்படை தவறு உள்ளது. அந்த அளவிலான சர்வதேசியவாதம் "எமது நாடுகளின் இறைமையை நிலைநாட்டுவதன்" ஊடாக அடையமுடியாது.

இந்தப் பிரச்சனைக்கான உண்மையான அடிப்படை உலகம் எதிர் எதிரானதும், போட்டி தேசிய அரசுகளுக்கிடையே அரசியல் பிளவடைந்திருப்பதே. தேசிய இறைமையை மீளமைக்க முயலும் எந்தவொரு முன்நோக்கும் அதாவது தனது எதிராளிகளுக்கும், போட்டியாளர்களுக்கும் எதிராக ஒரு நாட்டின் உரிமையை வலியுறுத்துவது தவிர்க்க முடியாதவாறு சர்வதேச ஒற்றுமையின் வளர்ச்சிக்கும், தேவையான "பூகோளமயமான" போராட்டத்திற்கு தடையாகவே இருக்கும். மேலும் தேசிய இறைமையை வலியுறுத்துவதும், தேசிய சட்டங்களை திறமையானதாக்க முன்னுரிமை வழங்குவதும் புதிய ஏகாதிபத்திய யுத்தத்திற்கான தயாரிப்பாகும். சோசுடோவ்ஸ்கி கூறுவது போல், யுத்தமும் பூகோளமயமாக்கலும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதுடன், யுத்தம் பற்றிய அபாயத்தை விளங்கிக்கொள்ளவும் வேண்டும். இது தொடர்பாக எவ்விதகருத்து வேறுபாடுமில்லை. ஆனால் இதனால்தான் தேசிய அரசையும், அதன் தேசிய இறைமையையும் அடிப்படையாக கொண்ட முன்நோக்கு முக்கியமாக எதிர்க்கப்பட வேண்டும். இப்படியான ஒரு முன்நோக்கு யுத்தத்தை நடாத்துவதற்கான அரசியல், தத்துவார்த்த நிபந்தனைகளை உருவாக்க உதவியளிக்கின்றது. சொசுடோவ்ஸ்கி நேட்டோவை இல்லாமல் செய்யவும், ஆயுத தொழிற்சாலையை கலைக்கவும் அழைப்பு விடுக்கையில், ஒரு பக்கம் இன்னொரு நாட்டின் இறைமையை உறுதிப்படுத்தவும் பாதுகாக்கவும் அழைப்பு விட்டுக்கொண்டு மறுகரையில் "தனது" ஒருநாட்டின் யுத்தத்திற்கான திட்டங்களை எதிர்ப்பது சாத்தியமல்ல.

அனைத்துலக வாதம் வெறும் நல்லுணர்வுக்குரிய கட்டாயமானதல்ல. அதற்கு அவசியமானது தேசிய வாதத்தின் குறையை இல்லாமல் செய்வதாகும். இது உலக மக்களின் தலைவிதி தேசிய அரசுடன் பிணைக்கப்பட்டிருக்கவில்லை என்பதை அடித்தள ஆதாரமாக கொண்டுள்ளதுடன், தனியார் சொத்துடமையின் கட்டமைப்பான தேசிய அரசு மனித இனத்தின் மேலாய வளர்ச்சிக்கு முக்கிய தடையாக மாறியுள்ளதுடன், அது ஓர் உயர்ந்த பொருளாதார, சமூக, அரசியல் அமைப்பினால் மாற்றீடு செய்யப்பட வேண்டும்.

முன்னோக்கி செல்வதற்கான பாதை சோசுடோவ்ஸ்கி வழிமொழிவது போல் தேசியவாத அடுப்படிக்கு செல்வதல்ல, மாறாக உலக சோசலிசத்திற்கான அபிவிருத்திக்காக போராடுவதாகும். இப்பதிலின் அடுத்துவரும் பகுதியில் பூகோள முதலாளித்துவத்தினுள் இயங்கும் போக்கினால் எவ்வாறு இப்போராட்டம் தயார்ப்படுத்தப்படுகின்றது என ஆராய்வோம்.

# இலங்கை ஜனாதிபதி ஜனநாயக விரோத அரசியல்...

3ம் பக்கத் தொடர்ச்சி

விஸ்தரிக்கப்பட்டது. 1994ல் அதிகாரத்துக்கு வந்ததும் குமாரதுங்க இதனை சிறிது காலம் தளர்த்தினார். இது 1995ல் மீண்டும் வடக்கு-கிழக்கில் அமுல் செய்யப்பட்டது. 1996ல் அவர் மீண்டும் அவசரகால நிலைமையை நாடு முழுவதற்கும் விஸ்தரித்தார்.

இந்த வருடம் மே மாதத்தில் அரசாங்கம் ஒரு படுகொடூரமான அவசரகால விதிகளைப் பிரகடனம் செய்ததோடு, செய்திகளை இருட்டடிப்புச் செய்யும் தணிக்கை விதிகளையும் திணித்தது. இதன் கீழ் சகல வேலை நிறுத்தங்களும் பொதுக் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் சட்ட விரோதமாக்கப்பட்டன. புதிய அரசியல் அமைப்புத் திருத்தம் அவசரகால விதிகளையும் அத்தோடு நாட்டின் படு கொடூரமான பாதுகாப்புச் சட்டத்தையும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் தமிழ் சிங்களத் தொழிலாளர்களுக்கு எதிராக ஒரே விதத்தில் பயன்படுத்தப்பட்ட மற்றும் அடக்குமுறைச் சட்டங்களையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கும்.

புதிய அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தம் தமிழர்களுக்கு எதிரான பாகுபாடுகளுக்கு முடிவு கட்டிவிடும் என்ற குமாரதுங்கவின் வாதத்தை சந்தியில் நிறுத்தும் விதத்தில் 1972ல் சிறீலங்கா சுதந்திரக் கட்சி லங்கா சமசமாஜக் கட்சி கூட்டரசாங்கத்தினால் அரச மதமாக பௌத்தத்தை பிரகனம் செய்யும் சரத்துக்களை தன்னகத்தே கொண்டுள்ளது. புதிய அரசியலமைப்புச் சட்டம் அரசினை "பௌத்த மதத்துக்கு முதன்மைத்தானம் வழங்குதல் வேண்டும்" என்பதோடு பௌத்த மத விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர், பௌத்த பிக்குமார் பீடத்தையும் கலந்தாலோசித்தல் வேண்டும் என்கிறது. மீண்டும் பௌத்த மதத்துக்கு ஒரு சிறப்புரிமை அரசியலமைப்பு அந்தஸ்த்து வழங்குவதோடு வலதுசாரி மேலாதிக்கம் கொண்ட பௌத்த பிக்குகளுடன் ஒரு நேரடி உறவையும் ஸ்தாபிதம் செய்கின்றது. இதன் மூலம் இந்த அரசியல் தீர்வுப் பொதி, மதப் பாகுபாட்டையும் இனவாதத்தையும் மேலும் பலப்படுத்தியுள்ளது.

மேலும் இந்த அதிகாரப் பகிர்வு யோசனைகள் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கென ஒரு இடைக்கால நிர்வாக சபையை ஸ்தாபிதம் செய்வதன் மூலம் இனவாதப் பிளவுகளை உக்கிரமாகத் தூண்டிவிடுகிறது. இந்த சபைக்கான பிரதிநிதிகள் (தேர்தல் மூலம்) தெரிவு செய்யப்படாது, தற்சமயம் உள்ள இனவாத அடிப்படையிலான கட்சிகள், அமைப்புக்களின் பிரதிநிதிகளாக ஜனாதிபதியினால் நியமனம் செய்யப்படுவர். முதல் அமைச்சர் ஒரு தமிழராகவும் முதலாவது பிரதி அமைச்சர் ஒரு முஸ்லீம் ஆகவும் இரண்டாவது பிரதி அமைச்சர் ஒரு சிங்களவராகவும் இருப்பர்.

தமிழ் கட்சிகள், காணிகள் சம்பந்தமாக இடைக்கால சபைக்கு கூடிய அதிகாரங்கள் வழங்க புதிய அரசியலமைப்பு தவறிவிட்டதாக கண்டனம் செய்துள்ளன. காணி ஒரு இனவாத விவகாரமாகியுள்ளது. ஏனெனில் 6 தசாப்தங்களுக்கு மேலாக சிங்கள முதலாளி வர்க்கம் தமிழ் பிராந்தியங்களில் தென் மாகாணங்களின் ஏழை சிங்கள விவசாயிகளை குடியமர்த்தும் ஒரு கொள்கையைக் கடைப்படித்து வந்துள்ளது. ஒரு நீண்ட காலமாக கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ள இக்கொள்கையானது சில மாவட்டங்களில் சனத் தொகை அமைப்பு முறையை மாற்றி விட்டது. சிறப்பாக கிழக்கு மாகாணத்தில் தமிழ் கிராமிய ஏழைகளிடையே ஒரு ஆழமான கசப்புணர்வையும் பதட்டத்தையும் கொழுந்து விட்டு எரியச் செய்துள்ளது.

ஒரு தொகை முக்கிய விடயங்களில் இந்த சபைகள் மொத்தத்தில் பெரும்பான்மை வாக்கை மட்டுமன்றி தமிழ், சிங்கள, முஸ்லீம் சமூகங்கள் ஒவ்வொன்றினதும் பெரும்பான்மையையும் வேண்டி நிற்கும். சிறுபான்மை சனத்தொகையினரை அப்புறப்படுத்துவதற்கான நெருக்குவாரத்தை இச்சமூகங்கள் ஒவ்வொன்றினதும் சோவினிஸ்டுகள் தூண்டிவிட்டுக் கொண்டிருப்பர். வடக்கு- கிழக்கு மாகாணங்களில் மட்டுமன்றி நாடுபூராகவும் சிங்களவர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் இருந்து தமிழர்களையும், தமிழர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட வடக்கில் இருந்து முஸ்லீம்களையும் சிங்களவர்களையும் அப்புறப்படுத்தும் ஆபத்து இருந்து கொண்டுள்ளது.

வேறு வார்த்தைகளில் சொன்னால் புதிய ஏற்பாடுகள் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு மாறாக அரசியல் வாழ்வில் இன, மதக் கட்சிகளின் பாத்திரத்தை பலப்படுத்துவதோடு, அவநம்பிக்கையையும் பதட்டத்தையும் அதிகரிக்கச் செய்யும். இது இன்றுள்ள இனக்குழுப் பிளவுகளை மேலும் இறுக்கமாக்குவதோடு பால்கன் நாடுகளைப் போன்ற ஒரு இனக்குழு சுத்திகரிப்புக்கும் இனக்கலவரங்களுக்குமான நிலைமைகளைச் சிருஷ்டிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்...

5ம் பக்கத் தொடர்ச்சி

மாளிகையைக் கைப்பற்றிக் கொண்டு இருந்தவர்கள் எப்போதுமே சிறப்புத் தகுதி வாய்ந்த மக்களாகக் கருதப்பட்டவர்கள் என்பது அல்ல. ஆனால் குறிப்பாக செல்வங்களும் தகாத நடவடிக்கைகளும் நிறைந்த காலப்பகுதிகளுள் -1920பதுகளும் 20ம் நூற்றாண்டின் இறுதி இரண்டு தசாப்தங்களும்- ஒரு மாபெரும் நெருக்கடியை நோக்கி அதிகரித்த அளவிலான முரண்பாடுகள் வளர்ச்சி கண்டு வரும் காலப் பகுதிகளிலும்- உள்நாட்டு யுத்தத்துக்கு முந்திய 1850பது போன்ற தசாப்தத்திலும்- ஜனாதிபதி பதவி இரண்டாம் தரமானவர்களாலேயே ஆக்கிரமித்துக் கொள்ளப்பட்டது.

ஒரு புறத்தில் குறிப்பாக நெருக்கடிக் காலப்பகுதிகளில் அமெரிக்க ஆளும் வர்க்கம் வெள்ளை மாளிகையில் ஆட்சிபுரிய அபூர்வமான பண்புகள் கொண்ட மனிதர்களைத் தேடிப்பிடிக்க முடிந்த காலமும் இருந்தது. ஒவ்வொரு ஜனாதிபதியிடமும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அமெரிக்க முதலாளித்துவத்தின் அடிப்படை நலன்களைக் காக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. ஆனால் சிலர் அரசியல் மூலதனத்தினை நீண்டகால அரசியல் அனுபவம், அனைத்துலக விவகாரங்களிலான ஒரு நிஜமான அறிவு. கல்வி அறிவு அல்லது பேச்சுவன்மை மூலமே ஈட்டிக் கொள்ள முடிந்தது. ஏனையோர் ஒன்றில் யுத்தம் அல்லது சமாதானம் மூலமான தனிப்பட்ட கடும் சோதனைகளுக்கு உள்ளாகினர். இது அவர்களின் பணியை இறுக்கமாக்கியதோடு அமெரிக்க முதலாளித்துவ விவகாரங்களை மேற்பார்வை செய்யும் பணிக்கு அவர்களைத் தயார் செய்தது.

தியோடர் ரூஸ்வெல்டை (Theodore Roosewelt) ஒருவர் ஒரு அரசியல்வாதியும் யுத்த மாவீரனாகவும் கருதுகின்றனர். இவர் அமெரிக்காவை ஒரு ஏகாதிபத்தியச் சக்தியாக தோன்றச் செய்வதில் வெற்றி கண்டார். இலாப அமைப்பு நீண்டகாலம் நின்று பிடிப்பதற்கு ட்ரஸ்டுகளின் (Trusts) அதிகாரத்தை ஒழுங்குபடுத்துவது அவசியம் என இவர் இனங்கண்டார். வூட்ரோ வில்சன் வெள்ளை மாளிகையில் இடம் பிடித்துக் கொண்டு அமெரிக்காவை முதலாம் உலக யுத்தத்துக்கு இட்டுச் செல்லுவதற்கு முன்னர் ஒரு பேர்போன அரசியலமைப்பு நிபுணராக விளங்கினார். 1933ல் ஆட்சிக்கு வருமுன்னர் பிராங்ளின் ரூஸ்வெல்ட் நியூயோர்க் மாநில அரசியலிலும் தேசிய அரசியலிலும் பாரிசவாதத்துடன் கூடிய அவரது போராட்டத்தின் நீதி நலன்களிலும் பல வருட கால அனுபவம் கொண்டிருந்தார். இரண்டாம் உலக யுத்த காலத்தில் வெளிக்காட்டிக் கொண்டது போல் ஐசனோவர் அமைப்பு நடவடிக்கைகளில் ஒரு மேதையாகவும் பிற்காலத்தில் அவர் மாறியது போல் கோல்ப் விளையாட்டை நேசிக்கும் ஒரு தேனியை விட ஒரு பெரிதும் முக்கியமான ஒரு பேர்வழியாக விளங்கினார். கென்னடி கூட ஜனாதிபதியாக வருவதற்கு முன்னர் யுத்தத்தை மீண்டும் ஆரம்பிக்கும் மாவீரனாகவும் காங்கிரசில் 14 வருடகாலம் இருந்ததாகவும் ஜம்பம் அடித்துக் கொண்டார். சமீபத்தில் வெளியிடப்பட்ட கியூபன் ஏவுகணை நெருக்கடி (Cuban Missile Crisis) பதிவு நாடாக்கள் அம்பலமாக்கியது போன்று, கென்னடி அசாதாரணமான திறமை படைத்த ஒரு அரசியல்வாதி.

ஜனாதிபதி பதவிக்கு அறிவும் அனுபவமும் ஒரு நிலைமையை நுணுக்கமாகவும் சிக்கலான நிலைமையிலும் உள்ளீர்த்துக் கொள்ளும் வல்லமையும் கணிசமான முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களாகும். அரசின் உச்சியில் அறியாமையும் அனுபவமின்மையும் குறுகிய பார்வையும் இருப்பதானது மறுபுறத்தில் அமெரிக்கன் ஆளும் வர்க்கத்துக்கு மட்டுமல்லாது உலகத்துக்கே பெரும் ஆபத்துக்களை கொணரும்.

புஷ் இரண்டு சமாந்தரமான போக்குகளினை -பழைய அரசியல் பிரமுகர்களின் சீரழிவையும் செல்வந்தர்கள், வசதிவாய்ப்புகள் கொண்டவர்களிடையே ஒரு புதியதும் ஆழமானதுமான பிற்போக்கு மூலகம் எழுச்சி காண்பதையும்- ஊடறுத்துச் செல்வதை பிரதிநிதித்துவம் செய்கின்றார்.

கடந்த இரண்டு தசாப்தங்களும் அமெரிக்காவில் மட்டுமன்றி அனைத்துலக ரீதியில் முதலாளித்துவக் கட்சிகளும் அரசியல்வாதிகளும் ஒரு குறிப்பிடத்தக்க வீழ்ச்சி கண்டதை தரிசித்துள்ளது. இந்த இரண்டு தசாப்தங்களும் பிரமாண்டமான சமூக மாற்றங்களைக் கொண்டிருந்தன. எல்லாவற்றுக்கும் மேலாக சமூக சமத்துவமின்மையின் வளர்ச்சியையும் பொருளாதார ஏணியின் உச்சியில் இருந்து கொண்டுள்ள ஒரு சிறிய தட்டினர் பிரமாண்டமான செல்வங்களை ஈட்டியதையும் குறித்து நின்றது. வசதிவாய்ப்புக்கள் படைத்த பிரமுகர்களுக்கும் வெகுஜனங்களுக்கும் இடையேயான இடைவெளி வளர்ச்சி கண்டதால் முதலாளித்துவக் கட்சிகளின் சமூக அடிப்படை குறுகிப் போயிற்று. அமெரிக்க முதலாளித்துவத்தின் இரு பெரும் கட்சிகளான குடியரசுக் கட்சியும் ஜனநாயகக் கட்சியும் பொதுமக்களில் இருந்து அதிகரித்த அளவில் துண்டிக்கப்பட்டுப் போய்விட்டன.

இதன் விளைவாக ஒரு அரசியல் தலைவருக்கு முன்பு அவசியப்பட்டதாக இருந்த அடிப்படை திறமைகள் கூட -கூட்டுக்களை அமைக்கும் திறமையும் சனத்தொகையின் பரந்த தட்டினருடன் சேர்ந்து செயற்படுவதும் -மதிப்பிறக்கம் செய்யப்பட்டுப் போயிற்று. இன்று அரசியல்வாதிகள் ஒரு குறுகிய வட்டத்தினாலேயே தெரிவு செய்யப்பட்டு அரிதாக சந்தைப்படுத்தப்படுகின்றனர். ஜோர்ஜ்.டபிள்யூ.புஷ் ஒரு நல்ல உதாரணம்.

அமெரிக்க மக்களில் மிகப் பெரும்பான்மையினர் அப்படி ஒருவர் இருப்பதாக அறிந்து கொள்வதற்கு முன்னரே புஷ் குடியரசுக் கட்சி ஜனாதிபதி வேட்பாளர் நியமனத்தைப் பெற்றுவிட்டார்.

இதே சமயம் ஆளும் பிரமுகர்களிடையேயும் கணிசமான அளவு மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. நீண்டு வந்த பங்குமுதல் சந்தைச் செழிப்பின் பெறுபேறாகவும் தடையற்ற ஊகத்தின் ஒரு பொது சூழல் காரணமாகவும் செல்வந்தர்களும் சமீபத்தில் செல்வம் ஈட்டிய அதிகாரம் படைத்தவர்களும் வீக்கம் கண்டனர். இவர்கள் எந்த ஒரு சொத்துக்களையும் கொண்ட வர்த்தகங்களை கட்டியெழுப்பாமலே குறுகிய காலத்தில் திகைப்புக்கிடமான அளவில் செல்வங்களை ஈட்டினர்.

ஒரு நிறுவனத்தைக் கட்டியெழுப்பும் போராட்டத்துக்கும் பாதகமான காலப்பகுதிகளில் தாக்கிப்பிடிப்பதற்குமான சோதனைகளுக்கு உள்ளாகாமல் பங்குகளின் பெறுமான அதிகரிப்போடு செல்வத்தினைக் குவித்தனர். கோடிக் கோடி டாலர்கள் வோல் ஸ்ரீட்டில் (பங்குமுதல் சந்தை) குவிந்தது. இத்தகைய பேர்வழிகளுக்கு பாரம்பரியங்கள் கிடையாது. தங்களின் உடனடி நலன்களுக்கு அப்பாற்பட்ட பார்வையும் கிடையாது.

இதை எப்படிச் சாதித்தோம் என்பதைத் தன்னும் சரியாக தெரியாமல் பிரமாண்டமான அதிஸ்டங்களை ஈட்டியோர் கொஞ்ச நஞ்சம் அல்ல. தமது துறையிலான வரையறுக்கப்பட்ட செயற்பாடுகளுக்கு அப்பால் வர்த்தகத்துக்கான ஒரு திறமை; கணனி திட்டமிடலுக்கான ஆற்றல் அல்லது ஒரு சாதுரியமான கருத்தை அபிவிருத்தி செய்யும் சக்தி இல்லாமலும் கூட பணத்தைச் சம்பாதித்துக் கொள்கின்றனர்.

இருந்த போதிலும் அத்தகையவர்கள் தமது செல்வத்தின் புண்ணியத்தினால் அரசியல் அரங்கில் ஒரு முக்கியமான விளையாட்டு வீரர்களாக முடிந்தது. ஆனால் அத்தோடு இந்த அரங்கிலும் கூட அவர்களின் நடவடிக்கைகள் குறுகிய கால நலன்களாலும் அமெரிக்க முதலாளித்துவத்தின் நலன்களைப் பற்றிய பெரிதும் தூரதிருஷ்டி கொண்ட பரந்த விளக்கமின்மையாலும் வழிநடாத்தப்பட்டது.

புஷ் பெரிதும் அத்தகைய சக்திகளின் ஒரு பேச்சாளர் ஆவார். அவர் அரசியல் பாரம்பரியங்களை கொண்ட ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவரின் நடவடிக்கைகள் ஊகங்கள் நிறைந்த ஒரு செழிப்பு காலப்பகுதியில் ஆளும் பிரமுகர்களுடன் சேர்ந்து கொண்ட ஒரு சமூகத் தட்டின் அனுபவங்களோடு பெரிதும் தொடர்புபட்டுள்ளது. கடந்த வாரம் பிலடெல்பியாவில் கூடிய பேராசையும் வசதியும் படைத்தவர்கள் புஷ்சினால் ஈர்க்கப்பட்டனர். ஏனெனில் மகாநாட்டுக்கு வருகை தந்தவர்கள் டெக்சாஸ் ஆளுனரில் தமது சொந்த பிரதிபலிப்புக்களை காண முனைந்தனர்.

ஆனால் அமெரிக்க வரலாறு எடுத்துக் காட்டுவது போல் - பிரசித்தி பெற்ற பழமொழி கூறுவது போல்- கோழிகள் வீட்டுக்கு வருவது தங்குவதற்கு என்பது போல்- எப்போதும் ஒரு காலம் வருகின்றது. அமெரிக்கன் சமுதாயத்தை பீடித்துக் கொண்டுள்ள சமூக முரண்பாடுகள் உடனடியாகவோ அல்லது தாமதித்தோ ஒருவரின் முகத்தில் வெடித்துச் சிதறுவதுடன் முடிவின்றி ஒருவர் விளையாட முடியாது.

'இன்டர்நெட்' (இணையம்) பங்குமுதல் சந்தையின் சமீபகால வீழ்ச்சி ஏற்கனவே சுட்டிக் காட்டிக் கொண்டுள்ளது போல் 'டொட் கொம்' (dot.com) மின் வீக்கம் காணச் செய்யப்பட்ட பங்கு முதல் பெறுமதிகளின் அதிசயங்கள் பிரச்சினைக்கு உரியதாகிவிட்டன. வர்த்தக நிறுவனங்கள் தமது பங்கு முதலின் விலையை நியாயப்படுத்தும் விதத்தில் ஒரு இலாபத்தை ஈட்டுமாறு வேண்டப்பட்டுள்ளன. பங்குப் பெறுமதிகள் வீழ்ச்சியடைந்து செல்வதோடு நேற்றைய சந்தையின் நட்சத்திரங்கள் இன்றைய வங்குரோத்துக்காரர்கள் ஆகின்றனர்.

இதற்கு நிகரான ஒரு தலைவிதி ஜோர்ஜ்.டிபிள்யூ.புஷ் போன்றவர்களின் வீங்க வைக்கப்பட்ட அரசியல் உற்பத்திப் பொருட்களுக்கும் ஏற்பட உள்ளது. அவர் அடுத்த ஜனாதிபதியாக வருகின்றாரோ இல்லையோ எனபதை பொறுந்திருந்தே பார்க்கவேண்டும். பூகோளத்தில் சமூக ரீதியில் குமுறி எரியக் கூடிய ஒரு நாட்டின் விவகாரங்களை கொண்டு நடாத்த ஒரு பெரும் முதலாளித்துவக் கட்சிகளில் ஒன்றால் இத்தகைய மனிதன் போட்டியில் நிறுத்தப்பட்டுள்ளமை, அமெரிக்காவின் அரசியல் நெருக்கடியின் ஆழத்தை எடுத்துக் காட்டுகின்றது.

# இலங்கை பொதுஜன முன்னணி அரசாங்கம்...

12ம் பக்கத் தொடர்ச்சி

தொகை 10300 கோடி ரூபாவாகியுள்ளது. இது வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்ட சமயம் ஒதுக்கீடு செய்யப்பட்ட (5200 கோடி) தொகையைக் காட்டிலும் இரண்டு மடங்கானதாகும். எதிர்வரும் இரண்டொரு வாரங்களில் அரசாங்கம் அரைடசன் கிபீர் ஜெட் விமானங்களையும் 24 எம்.ஐ.ஹெலிகொப்டர்களையும், துப்பாக்கி படகுகளையும் தருவிப்பதன் மூலம் ஆயுதப் படைகளை பலப்படுத்த உள்ளது.

இந்த இராணுவச் செலவீனங்களை நிதியீட்டம் செய்ய அரசாங்கம் தொழிலாளர் வர்க்கத்தின் வாழ்க்கைத் தரத்தை மேலும் வெட்டிச் சாய்க்க வேண்டியிருக்கும். ஏற்கனவே முக்கிய பண்டங்களின் விலைகள் பெருமளவு அதிகரித்துள்ளதால் இவர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

இந்த அரசியல் நெருக்கடியில் இந்திய அரசாங்கம் மற்றொரு காரணியாக விளங்குகின்றது. இந்தியா மேற்கத்தைய பெரும் வல்லரசுகளுடன் சேர்ந்து ஒரு தனித் தமிழ் அரசு அமைக்கப்படுவதை எதிர்த்துள்ளது. முழுத் துணைக்கண்டத்திலும் இது ஏற்படுத்தக்கூடிய ஸ்திரமற்ற நிலையை கருத்தில் கொண்டே இங்ஙனம் செய்துள்ளது. இந்திய வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் பொதுஜன முன்னணியின் அதிகாரப் பகிர்வு பொதிக்கு ஆதரவான செய்திகளையும் ஆசிரியத் தலையங்கங்களையும் வெளியிட்டுள்ளன. அத்தோடு கொழும்பில் வெளியான தகவல்களின்படி இந்தியன் உயர் ஸ்தானிகராலயம் தமிழர் விடுதலைக் கூட்டணியை அரசியல் பொதிக்கு ஆதரவாக வாக்களிக்கும்படி "வேண்டியது".

அரசியல் தீர்வு பொதி, நெருக்கடிக்கு எதுவிதமான தீர்வையும் காணவில்லை. மாறாக இது தமிழ், தமிழ் பேசும் முஸ்லீம்கள், சிங்கள நிர்வாகப் பிராந்தியங்களை ஸ்தாபிதம் செய்வதன் மூலம் இனக்குழு பிளவுகளை உருவாக்கும். அத்தகைய ஒரு அமைப்பு முறையானது, இனக்குழு பதட்ட நிலைமைகளை மேலும் அதிகரிக்கவும் தமது 'பிரித்தாளும்' கொள்கையை பிறிதோர் வடிவில் முன்னெடுக்கவும் ஆளும் வர்க்கங்களினால் பயன்படுத்தப்படும்.

மேலும் விக்கிரமநாயக்காவை பிரதமராக நியமனம் செய்தமை குமாரதுங்க சிங்கள சோவினிஸ்டுகளையும், இனவாத பௌத்த பிக்குகளையும் பலப்படுத்தச் செயற்படுவதை காட்டுகின்றது.

அதிகாரப் பகிர்வு அடியோடு குடை சாய்ந்து போனமையானது காலனித்துவ ஆட்சிக்கு பின்னைய இலங்கையின் முழு வரலாற்றில் இருந்தும் தலையெடுக்கும் படிப்பினைகளை சுட்டிக்காட்டுகிறது: முதலாளித்துவமும் அதன் கட்சிகளும் பெரும் முதலாளித்துவ நாடுகளுடன் சேர்ந்து இன, இனக்குழு பிளவுகளை தீர்த்து வைப்பதற்கு இலாயக்கற்றவை. மாறாக அவை இதன் ஒவ்வொரு திருப்பத்திலும் இதை உக்கிரமாக்க தொழிற்படுகின்றன.

இதற்கான தீர்வு, தொழிலாளர் வர்க்கம் தனது சொந்த சுயாதீனமான வேலைத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகள் மூலம் வெகுஜனங்களின் -சிங்கள, தமிழ் மக்களின்- அவசியங்களையும் ஜனநாயக அபிலாசைகளையும் இட்டு நிரப்புவதன் மூலம் மட்டுமே கிட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் சோசலிச சமத்துவக் கட்சி பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்றது

1ம் பக்கத் தொடர்ச்சி

இத் தேர்தலானது இந்த மாதத்தின் ஆரம்பத்தில் அவர் வாபஸ் பெறத் தள்ளப்பட்ட அதிகாரப் பகிர்வு மீதான அரசியலமைப்பு பிரேரணைகளை நிறைவேற்றுவதற்கான 2/3 பங்கு பாராளுமன்ற பெரும்பான்மையை பெறுவதற்கான ஒரு போட்டியாகும். அதைச் சாதிக்க முடியாது போய் ஆட்சிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து பொதுஜன முன்னணி ஒரு சாதாரண பெரும்பான்மையின் மூலம் இந்தப் பிரேரணைகளை நிறைவேற்றுவதற்கான ஒரு "அரசியலமைப்பு நிர்ணய சபை"யாக பாராளுமன்றம் மாற்றப்படும்.

யூ.என்.பி. பாராளுமன்றத்தில் பொதுஜன முன்னணியின் அதிகாரப் பகிர்வு பொதியை ஆதரிக்க மறுத்துவிட்ட நிலைமையில் அது ஒரு தீர்வை முன்வைக்கும்படி அனைத்துலக, உள்நாட்டு சக்திகளின் நெருக்குவாரத்துக்கு உள்ளாகியது. எவ்வாறெனினும் அதுவும் கூட இந்த சிங்கள சோவினிஸ்டுகளின் ஆதரவை கவர முயற்சிக்கின்றது. இந்த இரட்டை பாதை கொள்கையானது இதனை "தாய்நாட்டை காக்கும் தேசிய இயக்கம்" போன்ற இனவாத அமைப்புகளுடன் வெளிவெளியாக இணைந்து, பொதுஜன முன்னணியின் அதிகாரப் பகிர்வுக்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபடும் அதே வேளையில் யுத்தத்துக்கு ஒரு அரசியல் ரீதியான ஒரு தீர்வைக் காண ஏனைய கட்சிகளின் உடன்பாட்டுக்கும் அழைப்பு விடுக்கின்றது.

கடந்த 12 மாத காலத்தினுள் தமிழீழ விடுதலைப் புலிகள் ஈட்டிய இராணுவ வெற்றிகள் பாசிச, இனவாத அமைப்புகளிடமிருந்து ஒரு வெறிபிடித்த பிரதிபலிப்புகளை வெளிக் கக்கியது. ஜனதா விமுக்தி பெரமுன (JVP) சமீபகாலத்தில் அது கடைப்பிடித்த ஜனநாயக, சோசலிச வாயடிப்புகளை கைவிட்டது. அது 1980துகளின் கடைப்பகுதியில் முன்னெடுத்த "தாயகம் காப்போம்" போன்ற சுலோகத்தை புதுப்பித்துக் கொண்டது. இச்சுலோகத்தின் கீழேயே ஜே.வி.பி. தொழிற்சங்கவாதிகள், தொழிலாளர்கள், ஏனைய அரசியல் கட்சி தலைவர்களுக்கு எதிரான பாசிச பாணியிலான கொலைகளை நடாத்தியது.

யூ.என்.பி, பொதுஜன முன்னணி, ஜே.வி.பி.யில் இருந்து ஓட்டம் பிடித்த சக்திகள், சிங்கள உறுமய கட்சியை (Sinhala Heritage Party) அமைக்க ஒன்றிணைந்தன. இவை ஒரு "நிஜ யுத்தத்தை" கோரும் பிரச்சாரத்தில் வீதியில் இறங்கியுள்ளன. இந்த இனவாத அமைப்புக்கள் தமிழ் மக்களுக்கு எந்த ஒரு ஜனநாயக உரிமையையும் வழங்குவதை எதிர்க்கின்றன. இவர்கள் தமிழர்கள் பலாத்காரமான முறையில் சிங்கள பௌத்த அரசுக்கு கீழ்ப்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றனர்.

தற்போதைய அரசியல் நெருக்கடி சமீப காலத்தில் பொதுஜன முன்னணி அரசாங்கம் முகம் கொடுத்த இராணுவத் தோல்விகளால் மட்டும் ஏற்படும் ஒன்றல்ல. இது அரை நூற்றாண்டுக்கு மேலாக முதலாளித்துவ கட்சிகளினால் கடைப்பிடிக்கப்பட்ட கொள்கைகளின் உச்சக் கட்டத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றது. 1948ல் பிரித்தானிய காலனித்துவ எஜமானர்கள் அதிகாரத்தை கையளித்த நாளில் இருந்து இலங்கை முதலாளி வர்க்கம் தொழிலாளர் வர்க்கத்தையிட்டும் விவசாயிகளையிட்டும் அச்சம் கொண்டிருந்தது.

இதைத் தொடர்ந்து இம்மக்களை இன, இனக்குழு அடிப்படையில் பிளவுபடுத்துவதை இலக்காகக் கொண்டு, சிங்கள பௌத்த சித்தாந்தங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு சோவினிசக் கொள்கையைக் கடைப்பிடித்தது.

1948ல் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் எடுத்த முதல் நடவடிக்கை, தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையை ஒழித்ததேயாகும். இதைத் தொடர்ந்து 1956ல் சிங்களம் மட்டும் சட்டம் இயற்றப்பட்டது. 1972ல் பௌத்தம் அரச மதமாக அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது.

ஆனால் முதலாளித்துவத்தின் "பிரித்தாளும்" வேலைத்திட்டம், 1950களில் சிங்கள, தமிழ் வெகுஜனங்களை ஒன்றிணைக்கும் தனது சோசலிச வேலைத்திட்டத்தை சமசமாஜக் கட்சி (LSSP) வேகமாக கைவிட்டிராத நிலையில் ஒரு போதுமே முன்நோக்கிச் சென்றிருக்க முடியாது. இதன் உச்சக் கட்டமாக 1964ல் ஒரு கூட்டரசாங்கத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து கொள்வதென எடுத்த முடிவு விளங்கியது.

லங்கா சமசமாஜக் கட்சியின் இக்காட்டிக் கொடுப்பானது ஒரு புறத்தில் தமிழ் தொழிலாளர் வர்க்கம், மத்தியதர வர்க்கத்தினரிடையே தேசியவாத, பிரிவினைவாத போக்குகள் வளர்ச்சி காணவும் மறு புறத்தில் சிங்கள சோவினிசம் உக்கிரம் அடையவும் இட்டுச் சென்றது. லங்கா சமசமாஜக் கட்சியின் மாஜி. சோசலிஸ்டுகள் இதைத் தூண்டும் முக்கிய புள்ளிகளிடையே இப்போது இருந்து கொண்டுள்ளனர்.

தொடர்ந்து வந்த இந்த பாகுபாடுகள் ஆயுதம் தாங்கிய பிரிவினைவாத அமைப்புகளை -குறிப்பாக விடுதலைப் புலிகள்- தலையெடுக்கச் செய்தபோது, கொழும்பு யூ.என்.பி. ஆட்சியாளர்களின் பதிலானது 1983ல் தமிழ் வெகுஜனங்களுக்கு எதிராக ஒரு யுத்தத்தை தொடுப்பதாக விளங்கியது. சோவினிச தமிழர் எதிர்ப்பு வெறியானது தெற்கில் தீர்க்கமான மாற்றங்களை ஏற்படுத்தவும் பயன்படுத்தப்பட்டது. யூ.என்.பி. ஆட்சியாளர்கள் அதிகாரம் மிக்க ஒரு நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறையையும் ஸ்தாபிதம் செய்து, தொழிலாளர் வர்க்கத்தின் வாழ்க்கைத் தரத்தினை தாக்கினர். முன்னைய தேசிய பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை கைவிட்டு விட்டு பொருளாதாரத்தினுள் அனைத்துலக மூலதனம் ஊடுருவுவதற்கான பாதையைத் திறந்து விட்டனர்.

எவ்வளவுக்கு எவ்வளவு அவர்களது கொள்கைகள் பரந்த வெகுஜனங்களின் அவசியங்களுடனும் நலன்களுடனும் மோதிக் கொண்டதோ அவ்வளவுக்கு அவ்வளவு தொடர்ந்து ஆட்சிக்கு வந்த முதலாளித்துவ ஆட்சியாளர்கள் -பொதுஜன முன்னணி, யூ.என்.பி. இரண்டும்- தமிழர்களதும் சிங்களவர்களதும் இரத்தத்தை ஒரே விதத்தில் பெருக்கெடுக்கச் செய்தனர். வடக்கிலும் கிழக்கிலும் கொலைக் களங்களில் 60,000 பேர் இறந்துள்ளதாகவும் தெற்கில் சுமார் 100,000 பேர் கொல்லப்பட்டதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. ஏறக்குறைய வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்த மக்கள் அனைவரும் அகதிகளாக நேரிட்டது. இவர்களில் 90 வீதமானவர்கள் மரணத்துக்கும் தொற்று நோய்களுக்கும், பட்டினிக்கும், கொலைக்கும் முகம் கொடுத்த வண்ணம் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து கொண்டுள்ளனர். இதே சமயம் 500,000 மக்கள் நாட்டை விட்டு வெளியேறத் தள்ளப்பட்டனர்.

ஆயிரக் கணக்கான கிராமப்புற வேலையற்ற இளைஞர்கள் யுத்தத்தில் பீரங்கி குண்டுகளாக பயன்படுத்தப்பட்டனர். 1994ல் பொதுஜன முன்னணி ஆட்சிக்கு வந்ததில் இருந்து வாழ்க்கைச் செலவு சுட்டெண் 1066 புள்ளிகளால் அதிகரித்துள்ளது. சமூக துருவப்படுத்தல் ஆழம் கண்டுள்ளது. 1996, 97ம் ஆண்டின் உத்தியோகபூர்வமான புள்ளிவிபரங்களின்படி சனத்தொகையில் வறியவர்களான 40 வீதத்தினர் தேசிய வருமானத்தில் 15.30 சதவீதத்தையே பெறுகின்றனர். இதே சமயம் செல்வந்தர்களான 20 சதவீதத்தினர் தேசிய வருமானத்தில் 49.90 வீதத்தை அனுபவிக்கின்றனர். 1970-72ல் வறியவர்களின் எண்ணிக்கை 5.4 மில்லியன்களாக இருந்தது. 1996 97ல் இது 8.6 மில்லியன்களாக அதிகரித்தது. ஒரு நாளைக்கு 22 பேர் தற்கொலை செய்துகொள்கின்றனர். இது உலகிலேயே உயர்ந்த புள்ளியாகும். இப்புள்ளிவிபரங்கள் முதலாளித்துவ ஆட்சியின் சமூகத் தாக்கங்களின் ஒரு துளி மட்டுமே.

கடந்த மூன்று மாதங்களுள் மட்டும் பொதுஜன முன்னணி பாதுகாப்பு செலவீனங்களை- 48 மில்லியன்களால்- இரண்டு மடங்காக்கியுள்ளது. இதே சமயம் வாழ்க்கைச் செலவு சுட்டெண்ணை 115 புள்ளிகளால் அதிகரிக்கச் செய்துள்ளது. நாடு ஒரு "யுத்த நிலைமைக்கு" கொணரப்பட்டது அதிகரித்த அளவிலான அவசரகாலச் சட்ட விதிகள் ஜனநாயக உரிமைகளை தாக்கின. வெகுஜனத் தொடர்பு சாதனங்களின் சுதந்திரம் கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டதோடு வெகுஜனப் போராட்டங்கள் தடை செய்யப்பட்டன.

அத்தோடு பொதுஜன முன்னணி அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தினதும்- உலக வங்கியினதும் அடுத்த கட்ட நிகழ்ச்சி நிரலுக்கு எதிராக பரந்த அளவிலான போராட்டங்கள் வெடிக்கும் என்பதையிட்டு அச்சம் கொண்டுள்ளது. இதன் கீழ் இன்று அரசுடமையாக உள்ள மின்சாரம், நீர், தபால் சேவைகள், அரச வங்கிகள், கிராமப்புறத்தில் உள்ள பொஸ்பேட் (Phosphate) போன்ற இயற்கை வளங்கள் தனியார் மூலதனத்துக்கு திறந்துவிடப்படும்.

எவ்வாறெனினும் லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அத்தோடு தொழிற்சங்க அதிகாரத்துவங்களதும் தமிழ் முதலாளித்துவக் கட்சிகளதும் ஆதரவு இல்லாமல் ஆட்சி செய்வது என்பது முடியாத காரியமாகும்.

லங்கா சமசமாஜக் கட்சியும் இலங்கை கம்யூனிஸ்டுக் கட்சியும் ஒரு முக்கிய பாத்திரத்தை வகித்துள்ளன. 1994ல் ஆட்சியில் இருந்த யூ.என்.பி. அரசாங்கமும் பரந்தளவிலான எதிர்ப்புக்கு முகம் கொடுத்த வேளையில் இக்கட்சிகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து ஒரு முதலாளித்துவ மாற்றீடு அரசாங்கமாக பொதுஜன முன்னணி அரசாங்கத்தை அமைக்க முன்வந்தன. இவர்கள் பொதுஜன முன்னணி யுத்தத்தை நடாத்த ஆதரவளித்ததோடு நாட்டை அவசரகால பிரகடனங்களுடன் கூடிய ஒரு யுத்த நிலைமையிலும் இருத்தினர். இவ்விரு கட்சிகளும் தொழிலாளர் வர்க்கத்தை பிளவுபடுத்துவதை இலக்காகக் கொண்ட பொதுஜன முன்னணியின் அதிகாரப் பகிர்வு பொதிக்கு ஆதரவாக வக்காலத்து வாங்கின.

விலைவாசி உயர்வுக்கும், சிக்கன நடவடிக்கைகளுக்கும் எதிரான தொழிலாளர் வர்க்கப் போராட்டங்களின் பேரிலான அதிகாரத்துவங்களின் குரோதத்தை தொகுத்துக் கட்டும் விதத்தில் லங்கா சமசமாஜக் கட்சியினால் சமீபத்தில் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கை கூறியதாவது: "ஒரு நாட்டுக்கு யுத்த நிலைமையை ஈடு செய்யக்கூடிய ஒரு "யுத்தப் பொருளாதாரம்" இல்லாமல் ஒரு "யுத்த நிலைமை" இருக்க முடியாது என்பதே உண்மையாகும்" எனப் பிரகடனம் செய்தது.

இந்த நிலைமையில் சோ.ச.க.வும் அதன் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தை எதிர்த்து வந்துள்ளன. தொழிலாளர் வர்க்க ஐக்கியத்துக்காக சகல வடிவிலான இனவாதத்தையும் சோவினிசத்தையும் அவை எதிர்த்துப் போராடின. இந்தக் கொள்கைப் பிடிப்பான நிலைப்பாட்டுக்காக போராடுகையில், சோ.ச.க. வடக்கு-கிழக்கில் ஒரு முதலாளித்துவ குட்டியரசை அமைக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதக் கொள்கையையும் எதிர்த்துப் போராடி வந்துள்ளது. இது தமிழ் வெகுஜனங்களின் ஜனநாயக உரிமைகளை அடைவதற்கான ஒரு வேலைத்திட்டம் அல்ல. மாறாக இது தமிழ் பேசும் தொழிலாளர்களை அவர்களின் சிங்களம் பேசும் சகோதர, சகோதரிகளில் இருந்து பிரித்து வைப்பதை இலக்காகக் கொண்ட ஒரு முதலாளித்துவக் கொள்கையாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகள், மேற்கத்தைய வல்லரசுகளும் எல்லாவற்றுக்கும் மேலாக இந்தியாவும் தமது பிரிவினைவாத வேலைத்திட்டத்துக்கு ஆதரவளிக்கவில்லை என்பதை தெறிந்து கொண்டு, கொழும்பு ஆட்சியாளர்கள் தமிழ் பிரமுகர்களுக்கு அதிக அளவிலான அதிகாரத்தை வழங்கத் தயாரானால் இரத்தம் தோய்ந்த கொழும்பு ஆட்சியாளர்களுடன் ஒத்துழைக்கும் தமது தயார் நிலையை வெளிப்படுத்திக் கொண்டுள்ளது. அது ஒரு தனிநாட்டு வேலைத்திட்டமாக இருந்தாலும் சரி அல்லது அதிகாரப் பகிர்வு எனப்படுவதாக இருந்தாலும் சரி தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளை பேணிக் காக்கப் போவதில்லை. மாறாக அது சிங்கள, தமிழ் ஆளும் வர்க்கங்கள் இரண்டினதும் கரங்களைப் பலப்படுத்தவதாகவே விளங்கும்.

லங்கா சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் பொதுஜன முன்னணியில் சேர்ந்த வேளையில் "இடது" நவசமசமாஜக் கட்சி (NSSP) முதலாளித்துவ ஆட்சியை பேணுவதற்கு தனது பங்களிப்பை நல்ல முறையில் செய்யும் பொருட்டு அதற்கு வெளியில் நின்று கொண்டது. 1994ல் இக்கட்சி பொதுஜன முன்னணி அரசாங்கத்தை ஆட்சிக்கு கொணர ஆதரவளித்தது. குமாரதுங்க யுத்தத்துக்கு முடிவு கட்டுவார்; சமாதானத்தை ஏற்படுத்துவார்; யூ.என்.பி. ஆட்சியில் பிடுங்கிக் கொள்ளப்பட்ட ஜனநாயக உரிமைகளை மீள வழங்குவார் என்பன போன்ற நப்பாசைகளை ந.ச.ச.க. வளர்த்தது.

நவசமசமாஜக் கட்சியின் சந்தர்ப்பவாத பண்பு அது 1995-1997வரை பொதுஜன முன்னணியின் அரசியல் தீர்வுப் பொதியை தேசிய ஒடுக்குமுறைக்கான தீர்வாகக் காட்டி, ஆதரவு வழங்கியதன் மூலம் வெளிப்பட்டது. அன்றில் இருந்து ந.ச.ச.க. தனியான தமிழர் "தாயகம்" கோரிக்கைக்கு ஆதரவு காட்டி வந்த அதே வேளையில் தமிழர் விரோத சிங்கள சோவினிஸ்டுகளான ஜே.வி.பி.யுடனும் கூட்டுச் சேர்ந்து கொண்டது. எவ்வாறெனினும் ந.ச.ச.க. அதனது சகல நெழிவு சுழிவுகளுக்கிடையேயும் ஒரு உறுதியான நூலையும் பற்றிக் கொண்டு இருந்தது: அது தொழிலாளர் வர்க்கத்தின் சுயாதீனமான கொள்கையை எதிர்த்தது.

வெகுஜனங்கள் முதலாளித்துவக் கட்சிகளாலும் அவற்றின் "இடதுசாரி" ஆதரவாளர்களாலும் சிருஷ்டிக்கப்பட்ட சதுப்பு நிலத்தில் இருந்து வெளியேறுவதற்கான ஒரு பாதையை சோசலிச சமத்துவக் கட்சி வேலைத்திட்டம் மட்டுமே வழங்கும்.

## மூன்று தூண்கள்

சோ.ச.க. மூன்று தூண்களில் நின்று கொண்டுள்ளது: அனைத்துலவாதம், தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் சுயாதீனம், சோசலிச கொள்கைகள்.

*சோசலிச சமத்துவக் கட்சி யுத்தத்தை நிறுத்தும் பொருட்டு இலங்கை அரசாங்கப் படைகளை வடக்கு-கிழக்கில் இருந்து வாபஸ்பெறும்படி கோருகின்றது. பேரழிவு மிக்க யுத்தத்துக்கு ஒரு ரூபாயோ அல்லது ஒரு ஆளோ வழங்கப் படக் கூடாது என நாம் கூறுகின்றோம். இந்த யுத்தம் தொழிலாளர்களதோ அல்லது ஏழைகளதோ யுத்தம், அல்ல. இந்த யுத்தம் ஆளும் வர்க்கத்தால் சிருஷ்டிக்கப்பட்டு, பொதுமக்கள் மீது சகிக்க முடியாத சுமைகளைத் திணிப்பதன் மூலம் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது.

*அரசியலமைப்பு சட்டத்தை வரையும் பணிகள் வெகுஜனங்களின் பிரதிநிதிகளால் செய்யப்பட வேண்டுமேயன்றி ஒரு சில செல்வந்தர்களால் அல்ல. இப்போது 1948லும் 1972லும் 1978லும் போல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கும் காஷ்மீர் பிரிவினைவாதிகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகளை...

4ம் பக்கத் தொடர்ச்சி

சொல்லப்பட்டது.

இந்த நடவடிக்கைகள் காஷ்மீர் மாநில தேசிய காங்கிரஸ் அரசாங்கத்தின் முதலமைச்சர் பாரூக் அப்துல்லாவிடம் இருந்து ஒரு பிரதிபலிப்பை வெடிக்கச் செய்தது. ஜுலை 26ம் திகதி இது ஒரு சுயாட்சி மசோதாவை இயற்றியது. மாநிலத்துக்கு பரந்தளவிலான சுயாட்சியை கோரியதோடு மத்திய அரசாங்கத்தின் கரங்களில் பாதுகாப்பும், வெளிநாட்டு விவாகாரமும் போக்குவரத்து தொடர்புகளும் மட்டுமே விட்டு வைக்கப்படும் என்றது. ஆனால் தேசிய காங்கிரஸ் கட்சியையும் ஒரு பங்காளியாகக் கொண்ட புது டில்லி அரசாங்கம் இந்தத் திட்டத்தை ஒரேயடியாக நிராகரித்தது.

காஷ்மீர் அரசாங்கம் மத்திய அரசாங்கத்துக்கும் காஷ்மீர் பிரிவினைவாதிகளுக்கும் இடையேயான எந்த ஒரு தீர்விலும் தவிர்க்கப்படுவதை விரும்பப் போவதில்லை எனத் தெரிகின்றது. ஆளும் கூட்டணியில் ஒரு ஆழமான அரசியல் நெருக்கடி ஏற்பட்டது. பாரதீய ஜனதா கட்சிக்கும் தேசிய காங்கிரசுக்கும் இடையே பதட்டம் கொழுந்துவிட்டு எரிந்தது. இரு தரப்பினரும் இன்று கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளதோடு, முன்னைய அறிக்கையின் தொனியையும் குறைத்துக் கொண்டுள்ளனர்.

அமெரிக்காவினதும் அனைத்துலகத்தினதும் கடுமையான பொருளாதார, அரசியல் நெருக்குவாரங்களின் கீழ் இந்திய, பாகிஸ்தானிய அரசாங்கங்கள் அமெரிக்காவின் ஆதரவை வெற்றி கொள்வதில் ஆர்வம் காட்டுகின்றன. வாஜ்பாய் முஷாராப் இருவரும் செப்டம்பர் நடுப்பகுதியில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவுள்ளனர். இரு தலைவர்களும் நியுயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையில் சந்திப்பர் என பாகிஸ்தானிய தகவல் அமைச்சர் ஜாவ்ட் ஜபார் ஆகஸ்ட் 12ம் திகதி தெரிவித்தார். முஷாராப் அரசாங்கம் ஹிஸ்புல்லின் இடைக்கால யுத்த நிறுத்தத்துக்கு தமக்கு எதுவித பங்கும் கிடையாது என உத்தியோகபூர்வமாக மறுப்புத் தெரிவித்தது. ஹிஸ்புல் அமைப்புக்கு பாகிஸ்தானின் பலமான ஆதரவு கிடைத்து வருவதோடு அங்கிருந்தே தொழிற்பட்டு வரும் ஒரு நிலையில் இக்குழு பாகிஸ்தானின் இணக்கம் இல்லாது செயற்பட்டு இருக்கும் ஏன்பது சாத்தியம் இல்லை. காஷ்மீர் தொடர்பாக ஏதேனும் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெறுமிடத்து பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர்களும் அதன் ஒரு பாகமாக வேண்டும் எனக் கோருகின்றனர்.

1947ல் இந்து, முஸ்லீம் முதலாளித்துவங்களின் ஒத்துழைப்போடு காலனித்துவ ஆட்சியாளர்களான பிரித்தானியா இந்தியாவை கூறுபோட்டு இவ்விரு அரசுகளையும் உருவாக்கியதில் இருந்து காஷ்மீர் விவகாரம் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான மோதுதலின் முக்கிய விடயமாக விளங்குகின்றது. காஷ்மீரின் மூன்றில் இரண்டு பங்கு இந்தியாவால் ஆட்சி செய்யப்படும் அதே வேளையில் எஞ்சிய மூன்றில் ஒரு பங்கு பாகிஸ்தான் மாகாணமாக உள்ளது. பாகிஸ்தான் காஷ்மீரை ஒரு "தகாராறுக்குரிய பிராந்தியமாக" அழைக்கும் அதே வேளை இந்தியா காஷ்மீரை இந்தியாவின் இணைந்த பாகமாக கருதுகின்றது.

கடந்த காலத்தில் காஷ்மீர் விவகாரத்தில் அனைத்துலக தலையீட்டை கடுமையாக எதிர்த்து வந்த இந்திய அரசாங்கம் இன்று அமெரிக்காவுடன் நெருக்கமாகச் செயல்படுகின்றது. அமெரிக்கா குளிர் யுத்த காலத்தின் பெரும் பகுதியில் பாகிஸ்தானை ஆதரித்து வந்தது. பாகிஸ்தான் இப்பிராந்தியத்தில் திட்டவட்டமான பொருளாதார, புவிசார், அரசியல், மூலோபாய நலன்களையும் காப்பாற்றுவதில் ஈடுபட்டுள்ளது.

ஒரு காலத்தில் சோவியத் ஸ்டாலினிச ஆட்சியாளர்களின் கூட்டாளியாக விளங்கிய இந்தியாவை இன்று அமெரிக்கா அந்தப் பிராந்தியத்திலான தனது பெரும் பங்காளியாகக் காண்கின்றது. மூலோபாய முக்கியத்துவம், பெரும் சந்தை மூலவள செல்வங்களை கணக்கில் கொண்டே இங்ஙனம் செய்துள்ளது. அதே சமயம் அமெரிக்கா இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே சீரழிவையும் நிலையற்ற தன்மையையும் உருவாக்கும் ஒரு யுத்தத்தையும் விரும்பவில்லை. தீர்வின் ஒரு பாகமாக அமெரிக்கா காஷ்மீரில் காலூன்றிக் கொள்ள முடியுமானால் தோண்டி எடுக்கப்படாத எண்ணெய், எரிவாயு வளங்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ள அருகில் உள்ள மத்திய ஆசியா அமெரிக்காவின் ஒரு "ஸ்பிரிங் போட்டாகும்.

இந்த நிலைமையில் ஐரோப்பிய, ஜப்பானிய வல்லரசுகளும் கண் வைத்துக் கொண்டுள்ளன. இந்த ஜுலை ஜப்பானில் இடம் பெற்ற வருடாந்த ஜீ-8 உச்சிமாநாடு "பிராந்தியத்தில் ஒரு நின்று பிடிக்கக் கூடிய சமாதானத்தை எட்டும் விதத்தில் லாகூர் பிரகடனத்தின் அடிப்படையில் முடிந்த மட்டும் விரைவில் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டும்" என இந்தியாவையும் பாகிஸ்தானையும் கோரும் ஒரு அறிக்கையை வேண்டியுள்ளது. இந்தப் பிரேரணை மேலும் கூறியதாவது: "இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான பதட்டத்தின் மட்டம் அனைத்துலக அக்கறைக்குரிய ஒரு காரணமாக இருந்து கொண்டுள்ளது" என்றது. வாஜ்பாயினாலும் நவாஸ் ஷெரீப்பினாலும் கையொப்பமிடப்பட்ட இந்த லாகூர் பிரகடனம், இரு நாடுகளுக்கும் இடையேயான தகராறுகளை தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகளின் அவசியத்தை வலியுறுத்தியது.

---

பொதுஜன முன்னணியும் அரசியல் பெரும் புள்ளிகளும் மக்கள் அறியாத-தெரியாத விதத்தில் மற்றொரு அரசியலமைப்பு சட்டத்தை திணிக்க முயற்சிக்கின்றார்கள். இந்த திருகுதாளங்களுக்கு எதிராக சோ.ச.க. மக்களின் சுயாதீனமான அபிலாசைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு அரசியலமைப்பு பற்றி கலந்துரையாடவும், நிறைவேற்றவும் வெகுஜனங்களின் மத்தியில் இருந்து ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட பேராளர்களை கொண்ட ஒரு நிஜமான அரசியலமைப்பு நிர்ணய சபையை கூட்ட வேடுண்டும் எனக் கோருகின்றது.

இலாப அமைப்பின் கீழ் தொழிலாளர், ஏழைகளின் சமூக நிலைமைகளை முன்னேற்ற முடியாது. உண்மையில் அவர்கள் இன்னும் மோசமான சுரண்டல்களுக்கு முகம் கொடுப்பர். தொழிலாளர்களாலும் ஏழைகளாலும் மட்டுமே தொழில், வேலை நிலைமைகள் வாழ்க்கைத் தரம், இலவச கல்வி, இலவச சுகாதார சேவைக்கு எதிரான தாக்குதல்களை எதிர்த்துப் போராட முடியும். மக்களது அவசியங்களையும் சோசலிசக் கொள்கைகளையும் அடிப்படையாகக் கொண்டு பொருளாதார மறுசீரமைப்பு கொள்கையை முன்வைக்கவும் அதன் பேரில் அனைத்துலக ரீதியில் அணிதிரட்டலில் ஈடுபடவும் அதனாலேயே முடியும். பெருந்தோட்டக் கைத்தொழில்கள் உட்பட அனைத்து பெரும் வர்த்தகங்களும் தொழிலாளர் கட்டுப்பாட்டின் கீழ் தேசியமயமாக்கப்பட வேண்டும். விவசாயத்துக்காகப் பயன்படுத்தப்படும் ஏனைய சகல காணிகளதும் உடமை உழவருக்கே சொந்தமாக வேண்டும்.

ஜனநாயக உரிமைகளுக்கும் ஒரு சோசலிச வேலைத் திட்டத்துக்குமான போராட்டம், இந்தியத் துணைக் கண்டத்திலும் அனைத்துலகிலும் உள்ள தொழிலாளர்களுடன், சிங்கள-தமிழ் தொழிலாளர்களின் ஐக்கியத்தை வேண்டி நிற்கின்றது. தொழிலாளர் வர்க்கத்தின் முன்னோக்கானது ஒரு ஸ்ரீலங்கா-ஈழம் சோசலிச குடியரசுகளுக்கான- ஒரு தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தின் தலைமையிலான- போராட்டமாக விளங்க வேண்டும். இது இந்திய துணைக்கண்ட சோசலிச ஐக்கிய அரசுகளின் ஒரு பாகமாக விளங்கும்.

பொதுஜன முன்னணி, யூ.என்.பி. இரண்டினதும் ஆட்சியின் கீழான யுத்தம், அடக்குமுறை சமூக நிலைமைகளின் வீழ்ச்சிக்கு எதிராக தொழிலாளர்கள். விவசாயிகள், இளைஞர்கள், புத்திஜீவிகளின் பகுதியினர் எதிர்ப்புக் காட்டியுள்ளனர். எவ்வாறெனினும் இந்த ஆத்திரமும் வெறுப்பும் மட்டும் போதுமானது அல்ல. இது ஒரு மாற்றீடு முன்நோக்குக்காகப் போராடும் பாதையில் வழி நடாத்தப்பட வேண்டும். இது முதலாளித்துவக் கட்சிகளாலும் "இடதுசாரி" சந்தர்ப்பவாதிகளாலும், சோவினிஸ்டுகளாலும் சிருஷ்டிக்கப்பட்ட பிற்போக்கு அரசியல் மூடுபனியை குடைந்து செல்ல வேண்டும்.

சோசலிச சமத்துவக் கட்சியும் அதன் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக சோசலிச அடிப்படைக் கொள்கைகளுக்கான போராட்டத்தை முன்னெடுத்த ஒரு சாதனையை ஸ்தாபிதம் செய்துள்ளது. அது 1940பதுகளில் இந்திய போல்ஷிவிக்-லெனினிஸ்ட் கட்சியின் கீழ் ஸ்தாபிதம் செய்யப்பட்ட அனைத்துலகவாத பாரம்பரியங்களை அத்திவாரமாகக் கொண்டுள்ளது.

அனைத்துலக முன்னோக்கின் அடிப்படையில் போராடும் சோ.ச.க. வின் பணிகள், நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவும் (International Committee of the Fourth International) உலக சோசலிச வலைத் தளமும் உலக தொழிலாளர் வர்க்கத்தினுள்ளே ஒரு அனைத்துலக சோசலிச கலாச்சாரத்தை புத்துயிரளிக்கச் செய்யும் அன்றன்றாடைய பணிகளின் மூலம் அபிவிருத்தி செய்யப்படுகின்றது.

சோ.ச.க. அதனது அனைத்துலக சோசலிச முன்நோக்கின் அடிப்படையில் தொழிலாளர்கள், இளைஞர்கள், மாணவர்கள், புத்திஜீவிகளுக்கு கல்வி புகட்டுவதை இலக்காகக் கொண்ட ஒரு உக்கிரமான அரசியல், கோட்பாட்டு பணிகளை இந்த பிரச்சார இயக்கத்தின் போது நடாத்த தயாராகிவருகின்றது. இந்த தேர்தல் பிரச்சார இயக்கத்தை முன்னெடுக்க சோ.ச.க. ரூபா: 500,000 தேர்தல் நிதியை திரட்டவுள்ளது. சோ.ச.க. தனது ஆதரவாளர்களையும் அனுதாபிகளையும் இந்த நிதிக்கு பங்களிப்புச் செய்யும்படியும் தேர்தல் நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கும்படியும் வேண்டுகின்றது. இது முழுத் தொழிலாளர் வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிர்காலத்துக்கான பாதையைக் காட்டும்.

# யுத்தம் இலங்கைக் கிராமத்தின் வாழ்க்கையை தவிடு பொடியாக்கியது எப்படி?

10ம் பக்கத் தொடர்ச்சி

## உதாரகுணம்

தனது மகன் இறந்துவிட்டான் என்பதை ஏற்றுக்கொள்ள விடாப்பிடியாக வன்னிஹாமி மறுப்பது பார்வையாளர்களிடையே பலமான உணர்வுகளைத் தூண்டுகின்றது. அவரது மகனின் மரணத்தின் சகிக்க முடியாத யதார்த்தத்துக்கு எதிராகச் செயற்படும் காப்பீட்டு பொறிமுறையின் (Protective mechanism) பெறுபேறாகும் என்ற நோக்கில் இருந்து இது அணுகப்படும் போது மட்டுமே அவரது மகனின் மரணத்தை ஏற்க மறுக்கும் முதியவரின் நம்பிக்கை முற்றிலும் உண்மையாகிறது.

எவ்வாறெனினும் வன்னிஹாமி வெறுமனே ஒரு துயரமான பேர்வழி மட்டும் அல்ல என்பதை வலியுறுத்தியாக வேண்டும். அவரது பாத்திரத்தில் ஏனைய கிராமவாசிகள் புரிந்து கொள்ள முடியாது போய்விடும் ஒரு உதாரகுணம் இருந்து கொண்டுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக அவரது மகனின் மரணத்தின் பேரிலான நஷ்டஈடாக அரசு வழங்கும் பணத்தை அவர் ஏற்றுக் கொள்ள மறுப்பதன் மூலம் இந்தப் பண்பு வெளிப்பாடாகின்றது. வன்னிஹாமி தனது மகனுடன் கொண்டிருந்த நெருக்கமான பாசம், அவன் இறந்து போனதை எதிர்கொள்ளுவதை அசாத்தியமாக்கி விடுகின்றது. இதே பாசமும் தீவிரமான ஆன்மீக கௌரவமும் வன்னிஹாமி பணத்தைப் பெற்றுக் கொள்வதற்குக் குறுக்கே நின்று கொண்டுள்ளன. "இந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் எனது மகன் வீடு திரும்பினால் நாம் அவனுக்கு முகம் கொடுப்பது எப்படி"? என்று அவர் கேட்கின்றார்.

மற்றவர்களுக்கு வன்னிஹாமி சற்றுப் பைத்தியம் பிடித்தவர் போல் கூடத் தோன்றக் கூடும். எனினும், அவர் கொண்டுள்ள நிலைப்பாட்டில் ஒரு ஆழமான மனிதநேய தர்க்கீகம் இருந்து கொண்டுள்ளது. இளைஞன் யுத்தத்துக்கு சென்றது, தனது கனவை நனவாக்குவதற்கான ஒரே வழியாக அது இருந்து கொண்டுள்ளதாக கண்டதே. இது அவரது மகனின் மகிழ்ச்சிக் கனவாக விளங்கியது. அவரது மரணத்தின் பேரில் வழங்கப்பட்ட நஷ்டஈட்டுப் பணத்தை பெற்றுக் கொள்வது, ஒரு காட்டிக்கொடுப்பாக மட்டுமன்றி, அவன் மனதில் கொண்டிருந்த கனவுகளையும் காட்டிக் கொடுப்பதாக இருந்திருக்கும்.

சவப்பெட்டி திறக்கப்பட்டதும் வன்னிஹாமி மீது உறவினர்கள் வசைபாடுவதோ அல்லது கிராம அரசாங்க அலுவலர் நஷ்டஈட்டுப் பணத்தை ஏற்றுக் கொள்ளும்படி நச்சரிப்பதோ நின்று போயிற்று. சவப்பெட்டி மீது வைக்கப்பட்டிருந்த உத்தியோக பூர்வமான 'சீலை' உடைத்ததன் பின்னர் பணத்துக்கு விண்ணப்பிப்பது சாத்தியமற்று போய்விடுகின்றது.

திரைப்படத்தின் இறுதிக் கட்டங்களில் நாம் வன்னிஹாமியை படத்தின் தொடக்கத்தில் கண்டது போலவே ஒரு மனவுறுதியும் அமைதியும் நிறைந்த ஒரு மனிதனாகக் காண்கின்றோம். அவர் தண்ணீர் அள்ள கிராமக் குளத்துக்கு வருகின்றார். குளத்தில் நீராடும் இளைஞர்களின் சிரிப்பு ஒலியை ஆவலுடன் அவதானிக்கின்றார். அரிதாகக் காணக்கிடைக்கும் ஒரு புன்னகை அவரது உதட்டில் தோன்றுகின்றது. ஒரு வேளை தனது மகன் இந்தக் குளத்தில் நீச்சலடித்து விளையாடுவது அவரின் நினைவில் நிழலாடியிருக்க வேண்டும். இங்கு எதிர்பார்ப்புக்களைக் கொண்ட வன்னிஹாமி ஆழமான துயரம் நிறைந்த நிலையில் இருந்து கொண்டுள்ளார். இது வன்னிஹாமியை மட்டுமன்றி பார்வையாளரையும் இறுக்கமாகப் பீடித்துக் கொள்கிறது. எதிர்பாராத கடும் மழை வன்னிஹாமியின் தோள்களில் சுசுவெனப் பொழிந்து அவரைத் தணியச் செய்கின்றது.

பல சர்வதேசத் திரைப்பட விழாக்களில் பரந்த அளவில் பாராட்டுக்களைப் பெற்ற இந்த ஏமாற்றம் தரும் சாதாரண படம், யுத்தத்துக்குப் பரந்த மக்களின் ஆதரவு கிடையாது என்பதையும் வடக்கில் வாழும் வறுமையினால் பீடிக்கப்பட்ட சிங்கள விவசாயிகள் உட்பட்ட மக்கள் மீது இலங்கை அரசினால் எதிர்பாராத விதத்திலும் பலாத்காரமான முறையிலும் யுத்தம் திணிக்கப்பட்டுள்ளதைத் தெளிவுபடுத்துகின்றது. இலங்கையில் இடம் பெறும் உள்நாட்டு யுத்தம் மனிதன் மீது ஏற்படுத்தும் தாக்கங்களைப் புரிந்து கொள்ள முயலும் ஒவ்வொருவரும் நிச்சயம் பார்க்க வேண்டிய படம், 'புர ஹந்த கலுவர'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களின் நிலைமை மோசமடைகிறது

எமது நிருபர்
ஆகஸ்ட் 16, 2000

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவனான எஸ்.சஞ்ஜீவன் இலங்கை ஆயுதப்படைகளினால் ஜூலை 13ம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் பாடசாலை மாணவர்கள் ஜூலை 18ம் திகதியில் இருந்து மூன்று நாட்கள் பாடசாலைகளை பகிஷ்கரித்தனர். இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்ற ஒரு கிழைமையின் பின்னர் ரீ.ஆர்.விஜயகுலநாதன் என்ற 26 வயது இளைஞன் ஆயுதப் படைகளால் கரணவாயில் சுட்டுக் கொல்லப்பட்டார். இதற்கு மூன்று நாட்களின் பின்னர் (ஜூலை 23) அல்வாயைச் சேர்ந்த ஒரு பாடசாலை மாணவி அரசாங்கப் படைகளால் மாலி சந்தியில் உள்ள படையினரின் முகாமில் பாலியல் வல்லுறவுக்கு பலியாக்கப்பட்டார்.

சஞ்சீவனின் ஊர்வலத்தில் பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் கலந்து கொண்டதோடு ஊர்வலத்தை சஞ்ஜீவனின் பாடசாலையான யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வழியாக இட்டுச் செல்லவும் முயன்றனர். ஆனால் ஆயுதப் படைகள் இம்முயற்சியை தடுத்து நிறுத்தியதோடு ஊர்வலத்தை வேறு வழியில் திசை திருப்பிவிட்டனர். இறுதிச் சடங்கின் மறுநாள் பாடசாலை பகிஷ்கரிப்பு ஆரம்பமாகியது. பொதுஜன முன்னணியின் ஆயுதப் படைகள் மாணவர்களைப் பயமுறுத்தும் வகையில் ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டதோடு, சஞ்ஜீவன் ஒரு விடுதலைப் புலிகள் இயக்க அங்கத்தவர் எனவும் குறிப்பிட்டிருந்தனர். ஆனால் ஒரு சில நாட்களுக்குள் பலாலியில் அமைந்துள்ள இராணுவ உயர் பீடம், கீழிறங்கி வந்து சஞ்ஜீவனின் கொலை பற்றிய விசாரணையை நடாத்த உத்தரவிட்டது. அத்தோடு பரந்த அளவிலான எதிர்ப்பு இயக்கம் காரணமாக இராணுவம் பாடசாலை பகிஷ்கரிப்பு பிரச்சாரத்தில் ஈடுபட்டதாகக் கூறிக் கைது செய்த இரண்டு மாணவர்களையும் விடுதலை செய்யத் தள்ளப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இராணுவ நடவடிக்கைகளில் ஒரு தேக்க நிலை தற்சமயம் காணப்பட்ட போதிலும் குடாநாடு பூராவும் ஒரு மாபெரும் பதட்டம் நிலவுகின்றது. ஏப்பிரல், மே மாத சண்டைகளைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான பொது மக்கள் அவர்களின் வீடுகளில் இருந்து வெளியேறி அகதிகள் முகாம்களிலும் தற்காலிகக் குடிசைகளிலும் வசிக்கத் தள்ளப்பட்டனர்.

அரசாங்கப் படைகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கடும் மோதுதலுக்கு முகம் கொடுக்க நேரிட்ட தென்மராட்சி சாவகச்சேரி மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் உள்ள அரியாலை, கொழும்புத்துறை, பாஷையூர், குருநகர் பகுதிகள் அரசாங்கப் படைகளின் தொடர்ச்சியான விமானத் தாக்குதல்களின் இலக்காக விளங்குகின்றன. பிரதேச சபைகள், தபால் கந்தோர், கல்வித் திணைக்களம் (கொத்தணி) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், வங்கி கிளைகளும் பல்லாயிரக் கணக்கான பொது மக்களும் வடமராட்சி போன்ற "பாதுகாப்பான இடங்களுக்கு" இடம் பெயர நேரிட்டுள்ளது. இப்பகுதிகளில் இருந்து வந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த யுத்த அழிவுகள் காரணமாக 900 மில்லியன் ரூபாக்கள் நஷ்டம் அடைந்துள்ளன.

சுமார் 100,000 மக்கள் வலிகாமத்துக்கும் (காங்கேசந்துறை, மானிப்பாய் தேர்தல் தொகுதிகள்) வடமராட்சிக்கும் (பருத்தித்துறை) இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களில் சுமார் 45,000 பேர் பாடசாலைகளிலும் வழிபாட்டுத் தலங்களிலும் மற்றும் பொது இடங்களிலும் அடைக்கலம் புகுந்தனர். ஏனையோர் நண்பர்களுடனும் உறவினர்களுடனும் இடங்களைத் தேடத் தள்ளப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணச் செயலக புனர்வாழ்வு பிரிவின்படி வலிகாமத்திலும் வடமராட்சியிலும் 1400 தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அகதிகளில் சிலர் 1995, 96ம் ஆண்டுகால கசப்பான அனுபவங்களிடையேயும் வன்னிக்கு இடம்பெயரத் தள்ளப்பட்டுள்ளனர். இக்காலப் பகுதியில் இலங்கை இராணுவம் யாழ்ப்பாணக் குடாநாட்டை கைப்பற்றியதைத் தொடர்ந்து 400,000 க்கும் அதிகமான மக்கள் வன்னிக்கு இடம்பெயர நெருக்கப்பட்டது தெரிந்ததே.

அனைத்துலக அரச சார்பற்ற அமைப்புக்களால் (NGO) வழங்கப்படும் உணவு மற்றும் அடிப்படை அவசியங்களும் முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கு மட்டுமே விநியோகிக்கப்படுகின்றது. அரச சார்பற்ற அமைப்புக்களின் கூட்டுக் கமிட்டி இதையிட்டு யாழ்ப்பாண அரசாங்க அதிபரிடம் ஆட்சேபனை தெரிவித்துள்ளன. ஏனெனில் முகாம்களில் இடம்பெயர்ந்தவர்களில் 10 வீதமானவர்களே தங்கியுள்ளனர். இதன்படி 90 வீதத்துக்கும் அதிகமான அகதிகளுக்கு பங்கீட்டுப் பொருட்கள் கிடைக்காது போகின்றது.

அகதிகள் முகாம்களில் பெரும் நெருக்கடி காணப்படுவதால் சின்னமுத்து, வயிற்றோட்டம், கொப்பளிப்பான் மற்றும் தொற்று நோய்கள் பரவும் ஆபத்து இருப்பதாக யாழ் மாவட்ட சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை செய்துள்ளனர். யாழ் மாவட்ட பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளரின் தகவல்களின்படி போதுமான கழிவறைகள் இல்லாமையும் மற்றும் அடிப்படை வசதிகள் பற்றாக் குறையாலும் தொற்று நோய்கள் பரந்த அளவில் வெடிக்கும் சாத்தியம் ஏற்பட்டுள்ளது. எம்மிடம் போதிய சுகாதார அதிகாரிகள் இல்லை. எமக்கு 12 டாக்டர்கள் அவசியம். ஆனால் தற்சமயம் இருவர் மட்டுமே கடமையில் ஈடுபட்டுள்ளனர். குளிர்ச்சாதனப் பெட்டிகளின் பற்றாக்குறையினால் அவசியமான மருந்து வகைகளை பாதுகாத்து வைக்கும் சாத்தியம் இல்லாது போயுள்ளது. ஜெனரேட்டர்கள் இருந்தபோதும் எண்ணெய் இல்லை" என்றார்.

நுளம்புகளை ஒழிக்க அடிக்கப்படும் மலத்தியோன் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு இந்த ஆண்டு விநியோகிக்கப்படவில்லை. கொழும்பு அதிகாரிகளுக்கு இதையிட்டு பல தடவைகள் முறைப்பாடு செய்த போதும் மலத்தியோன் வந்து சேரவில்லை. இதன் விளைவாக செப்டம்பர், அக்டோபரில் மலேரியா அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம் சமீபத்தில் வெளியிட்ட ஒரு அறிக்கையானது இலங்கையில் சகல குழந்தைகளும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள அதே வேளை, வடக்கிலும் கிழக்கிலும் 900,000 குழந்தைகள் கல்வி, உணவு, உறைவிடம் இல்லாமலும் மறைமுகமான காயங்களுக்கும் உள்ளாகியும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏப்பிரல் 22ல் விடுதலைப் புலிகள் ஆனையிறவு முகாமை கைப்பற்றியதில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு தெற்கேயுள்ள பல பாடசாலைகள் மூடப்பட்டுவிட்டன. அத்தோடு யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் புனித பட்றிக் கல்லூரி, புனித மரியாள் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, சென் ஜோன்ஸ் கல்லூரி, புனித அந்தோனியார் மகளிர் கல்லூரி, புனித ஜோசப் வித்தியாலயம் என்பன இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதே ஆண்டு ஜூலை 31ம் திகதி ஆரம்பமாகும் க.பொ.த(உயர் தரம்) பரீட்சைக்கு தோற்றும் 9000 மாணவர்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பயின்ற திருகோணமலை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு போன்ற வெளிமாவட்ட மாணவர்கள் அங்கிருந்து கப்பலில் வெளியேறும் நிலை ஏற்பட்டது.

முகாம்களில் தங்கியுள்ள பலரை நாம் பேட்டி கண்டோம். இந்த யுத்த காலத்தில் அவர்கள் பல தடவை இடம்பெயர்ந்து உள்ளனர். ஒரு தையல் தொழிலாளி கூறியதாவது: "அரசாங்கப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான மோதுதல்கள் அரியாலையில் மே 9ம் திகதி ஆரம்பித்தது. அன்று இரவு நாம் தூங்க முடியாது போய்விட்டது. அடுத்த நாள் காலை நாம் அரியாலையில் இருந்து வெளியேறினோம். நான் எனது தையல் இயந்திரத்தையும் மற்றும் பொருட்களையும் அப்புறப்படுத்த முடியாது போய்விட்டது. நாம் தற்சமயம் வேலை செய்யவும் முடியாது வீட்டுக்குத் திரும்பவும் முடியாது. நான் வேலை தேடி 15 தையல் கடைகளில் ஏறி இறங்கி விட்டேன். ஆனால் அவர்கள் வேலை வழங்க மறுத்துவிட்டனர். நாம் எப்படி வாழ்வது"?

முகாமில் தங்கியுள்ள ஒரு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவன் பின்வருமாறு தெரிவித்தார்: "நான் அரியாலையில் வசித்து வந்தவன். க.பொ.த.(உயர் தரம்) பரீட்சைக்கு படித்து வந்தேன். கடந்த மே மாதத்தில் இருந்து நாம் படிக்க முடியாது போய்விட்டது. எனது பாடக் குறிப்பு கொப்பிகள் எல்லாம் வீட்டில் கிடக்கிறது. என்னிடம் பாடசாலை சீருடை கிடையாது. ஆதலால் பாடசாலைக்கு ஒரு பழைய உடுப்புடனேயே செல்ல நேரிட்டுள்ளது. இந்த யுத்தம் ஒரு முடிவுக்கு வந்தால் மட்டுமே நாம் படிக்கக் கூடியதாக இருக்கும் என நான் நினைக்கின்றேன்".

அதே முகாமில் தங்கியுள்ள மற்றொரு அகதி கூறியதாவது: "நான் ஒரு மீன்பிடித் தொழிலாளி. எனக்கு 8 குழந்தைகள். மே 15ம் திகதி விடுதலைப் புலிகளின் ஷெல் குருநகரில் விழுந்து வெடித்தது. இதனால் எமக்குத் தெரிந்தவர்கள் ஆறு பேர் உட்பட பலர் கொல்லப்பட்டனர். இதனால் நாம் அங்கிருந்து வெளியேறினோம். அரசாங்கம் வழங்கும் அற்ப சொற்ப நிவாரணத்துடன் எம்மால் வாழ்க்கையை ஓட்ட முடியாது. அரசாங்கம் வழங்கும் பங்கீட்டுப் பொருட்கள் 15 நாட்களுக்குத் தன்னும் போதாது."

பொதுஜன முன்னணி அரசாங்கம் புதிய இராணுவத் தளபாடங்களை இஸ்ரேல், சீனா, பாகிஸ்தான், செக் குடியரசு, ருஷ்யா, இந்தியா முதலான நாடுகளிடம் இருந்து தொடர்ந்து கொள்வனவு செய்கின்றது. இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே புதிய மோதுதல்கள் எக்கணமும் ஆரம்பிக்கும் சாத்தியம் இருந்து கொண்டுள்ளது. இதனால் குடா நாட்டு தமிழ் மக்களின் நிலைமை மேலும் மோசமாகும்.


சோசலிச சமத்துவக் கட்சி மாத இதழ்




சந்தாதாரர் ஆகுங்கள்

சந்தா தபால் கட்டணம் உட்பட
இதழ் 3 ரூ.36
இதழ் 6 ரூ.68
இதழ் 12 ரூ.128
இதழ் 24 ரூ.248

விபரங்களுக்கு :
தொழிலாளர் பாதை
முகாமையாளர்,
90, 1 வது மாளிகாகந்த
ஒழுங்கை, மருதானை,
கொழும்பு 10 தொ.பே. 682220

## சோசலிச சமத்துவக் கட்சியில் சேருங்கள்

பெயர்: ........................................

முகவரி: ........................................

கையொப்பம்: ........................................திகதி: ....................

இக் கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி:

பொதுச் செயலாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி
90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை, மருதானை, கொழும்பு 10.
தொ.பே. 682220


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org